# ஸ்ரீ சங்கர ஜயந்தி மலர்

## ரக்தாக்ஷி—குரோதன (1984-1985)

ஓம் ஸ்ரீ அர்த்தநாரீச்வர மூர்த்தயே நம:

ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா
மேலமாம்பலம், சென்னை-600 033.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

# ஸ்ரீ சங்கர ஜயந்தி மலர்

ரக்தாக்ஷி - குரோதன (1984-1985)


பதிப்பாசிரியர்

சிவபுராண ஞான பூஜகர், சாஸ்த்ர ப்ரசார பூஷணம்,
சிவபுராணச் சக்கரவர்த்தி, சிவபுராணக்காவலர்.

## ஆங்கிரஸ S. வேங்கடேச சர்மா

(சங்கரனடிமை)

வெளியீடு நன்னாள் : 29-6-1985

பிரசுரம் :

## ஸ்ரீ சங்கர பக்த ஜன சபா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை-600 033.

விலை ரூ. 8-00] 1985 [தபாலில் ரூ. 8-50

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | பதிப்புரை, ஸமர்ப்பணம், ஸ்ரீமுகம் ஆசிச் செய்திகள் முதலியன. | ... | 1—9 |
| 2. | The Message of the Upanishads | ... | 11 |
| 3. | ஸ்ரீமதாசாரியாளுக்கு வாசித்துச் சமர்ப்பிக்கப்பட்ட வரவேற்பு இதழ் | ... | 15 |
| 4. | நமது சபை, ஆண்டு அறிக்கைகள் முதலியன | ... | 17 |
| 5. | ஒரு மரத்தில் இரண்டு பக்ஷிகள் | ... | 29 |
| 6. | ஸ்ரீகணநாயகாஷ்டகம் | ... | 33 |
| 7. | ஸ்ரீசங்கர பத்ய புஷ்பாஞ்ஜலி | ... | 37 |
| 8. | ஸ்ரீமஹேசாஷ்டகம் | ... | 41 |
| 9. | சிவநாமம் கேட்பாய் செல்வி | ... | 49 |
| 10. | பிரதோஷ விளக்கம் | ... | 57 |
| 11. | பிரதோஷ மஹிமை | ... | 63 |
| 12. | பார்பூத்தவல்லி | ... | 71 |
| 13. | சிவ மஹிமை | ... | 81 |
| 14. | ஸங்கீத கீதி: | ... | 91 |
| 15. | குரு மஹிமை | ... | 103 |
| 16. | Beacon Light of Ambalpuri | ... | 107 |

இணைப்பு நூல்

சிதம்பரம் ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் (தமிழ் உரையுடனும், அர்ச்சனை நாமாவளியுடனும் கூடியது) 1-152 பக்கங்கள்



*Space donated by*

**A. R. KRISHNASWAMY**

T. NAGAR, MADRAS-17.

# ஸமர்ப்பணம்

காலடியில் அவதரித்து காசியில் வேதாந்த சூத்திர பாஷ்யமியற்றி, காஷ்மீரம் முதல் கன்னியாகுமரி வரை திக்விஜயம் செய்து நாஸ்திக மதங்களைப் போக்கி, காஞ்சியில் ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்தருளியவரும், சிவானந்த லஹரீ என்னும் நூலின் மூலம் சிவபெருமானின் சேவடிக்கே மீளா ஆளாகும் செம்மை நெறியில் அடியேனைச் சேர்த்தருளியவருமான குலகுரு, ஜகத்குரு ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர்களின் திவ்ய சரணாரவிந்தங்களில் இந்த மலரை ஸமர்ப்பணம் செய்கின்றேன். பதிப்பாசிரியர்

சிவம்

# மொழிக்கு மொழி தித்திக்கும்

# மூவர் தமிழ் மாலை

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிச் செய்த தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பொழிப்புரை, விளக்க உரை, தலவரலாறு, பதிகவரலாறு முதலியவற்றுடன் 108 தமிழ் மாலைகளாக வெளியிடும் முயற்சி. இதுவரை 18 தமிழ் மாலைகள் வெளிவந்துள்ளன.

சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| முதல் ஆறு தமிழ்மாலைகள் சேர்த்து | ரூ. | 10-00 |
| ஏழாவது தமிழ் மாலை முதல் 18-வது தமிழ் மாலை வரை மொத்தம் 12 தமிழ் மாலைகள் | ரூ. | 30-00 |
| 19 தமிழ் மாலை முதல் தனிப்பிரதி | ரூ. | 4-00 |
| ஒவ்வொரு ஆறு மாலைகளும் சேர்த்து | ரூ. | 20-00 |
| 108 தமிழ் மாலைகளுக்கும் முன்பண உதவிச் சலுகை விலை | ரூ. | 225-00 |

முன் பண உதவிச் சலுகை விலை மொத்தமாகவும், தவணைகளில் ஒரு ஆண்டுக்காலத்திலும் செலுத்தலாம்.

முன்பணம் கிடைத்ததும் இதுவரை வெளிவந்துள்ள மாலைகள் உடனே அனுப்பப்பட்டுப் பிறகு ஒவ்வொன்றும் வெளியிடும் போது அனுப்பப்படும்.

பதிப்பாசிரியர்

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத்தெரு,

மேலமாம்பலம், சென்னை-33.

# வேத பாராயண சபா

## ஸ்ரீசங்கரமடம் — மேலமாம்பலம்

### சபையின் காரியக்ரமங்கள்

1. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் பரி பூரண அநுக்ரஹத்தால் லோக க்ஷேமார்த்தமாய் மேல மாம்பலம் ஸ்ரீ சங்கர மடத்தில் மேற்படி சபையால் கிருஷ்ண யஜுர் வேத பாராயணம் கடந்த 20 வருட காலமாய் தினந்தோறும் மாலையில் 6-30 முதல் 7-30 மணிவரை உத்தம வேதவித்வான்களைக் கொண்டு நடை பெற்று வருகிறது. மாதம் முதல் தேதியும் பிரதோஷ தினங்களிலும் பாதுகைக்கு விசேஷ பூஜையும் தீப ஆராதனையுடன் சம்பாவனை செய்யப்படுகிறது. இந்து மதத்திற்கு ஆணிவேரான வேதங்களை அர்த்தத்துடன் அடிக்கடி மகா பண்டிதர்களைக் கொண்டு உபன்யாஸம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் முதல் தேதி முதல் 44 நாட்கள் ஒவ்வொரு ஆஸ்திகர்கள் வீட்டிலும் போய் மண்டல வேத பாராய ணம் செய்யப்படுகிறது.

2. ஒவ்வொரு வருடமும் ஆண்டு விழாவின் போது வைதிக மார்க்கமான ஹோம யக்ஞங்களும் சிறந்த பண்டிதர்களைக் கொண்டு உபன்யாஸமும் செய்யப்படு கிறது. அச்சமயம் சபையின் வேத பண்டிதர்களையும் கௌரவிக்கப்படுகிறது. ஷை சபை ஆஸ்திகர்களின் உதவியால் நடைபெற்று வருகிறது,

3. தினந்தோறும் மாலையில் 7-30 மணி முதல் 8-30 வரை உபயுக்தமான வேத மந்திரங்களை சிறுவர் களுக்கு சொல்லி வைக்கப்படுகிறது. ஆஸ்தான பகவத் பாதாள நிர்வாகத்துடன கூட இருந்து அநேக காரியங்களை நடதது வைப்பது. வேத பாகங்களை ஆண்டு விழா மலரில் வெளியிட்டு இலவசமாய் வழங்கப் படுகிறது. இவ்வாண்டு காடகம மூனறு பிரச்னங்களையும் விவாஹ மநத்ரார்த்தங்களையும் வெளியிட இருக்கிறது.

தலைவர்
சுந்தரேசய்யர்
எலத்தூர்

காரியதரிசி
நடராஜ சர்மா
எலத்தூர்

உ

# குரு வந்தனம்

ஸதாசிவ ஸமாரம்பாம் சங்கராசார்ய மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்.

ச்ருதி ஸ்ம்ருதி புராணனும் ஆலயம் கருணலயம்
நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம்

ஜகதாம் குருவர்யஸ்ச காமகோட்யதிபம் சிவம்
சந்த்ரசேகர யோகீந்த்ர தேசிகம் ஸமுபாஸ்மஹே.


ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் 777 பிராண்ட்

ஊறுகாய்கள் மாங்காய், எலுமிச்சை வெங்காயம்

சாம்பார் பொடி, ரசப்பொடி,
புளியோதரைப் பவுடர், பாவக்காய் பவுடர்
அப்பளம் புதுமுறை தயாரிப்பு
வடாம் வத்தல்கள்
திடீர் இட்லி & தோசை பவுடர்

ஸ்ரீகணேஷ்ராம் அண்டு கோ,

ப. நெ. 46, பு. நெ. 193, தம்பு செட்டித் தெரு
(போன் : 513402, 513393) சென்னை-600 001.

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

# எமையாளும் ஈசன் செயல்

## (பதிப்புரை)

1. 1984 ஆண்டுக்குரிய ஸ்ரீ சங்கர ஜயந்தி மலர் வெளியிட இயலாது போய் விட்டதனுல், 1984, 1985 ஆகிய இரு ஆண்டுகளுக்கும் ஒரே மலராக வெளியிடுகின்ருேம். இனி இவ்வாறு நேராது ஆண்டுதோறும் தவருது மலர்கள் வெளிவர அருளுமாறு இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

2. வழக்கமான ஸ்தோத்ரங்கள், கட்டுரைகள் இவற்றுடன் ஒரு முழு நூலாகச் சிதம்பரம் ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் தமிழ் உரையுடன் கூடியது, இம்மலரில் இணைத்துள்ளது வாசகர்களுக்குப் பெரும் பயனையும், மகிழ்ச்சியையும் அளிக்கும் என நம்புகின்ருேம். சிவ பெருமானுக்குரிய ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரங்கள் அனைத்தையும் வெளியிடவேண்டும் என்ற எமது குறிக்கோளில் இது இரண்டாவது வெளியீடு ஆகும்.

3. மலரின் விலையை அதிகப்படுத்திஞலொழிய இந்த அளவு கூட வரும் ஆண்டுகளில் வெளியிட முடியுமா என்பது ஒரு பெரிய கேள்விக் குறியாய் உள்ளது என்று சென்ற மலரில் குறிப்பிட்டிருந்தபடி இந்த மலரின் விலையை 8-00 ஆக உயர்த்தியுள்ளோம். இந்தச் சிறு விலை உயர்வைப் பொருட்படுத்தாது அன்பர்கள் மலரை வாங்கி ஆதரிப்பார்கள் என்று முழுமையாக நம்புகிருேம்.

4. மலர் உங்கள் கரங்களில் கிடைத்தவுடன் இதுவரை சந்தா, நன்கொடை இவற்றை அனுப்பாதிருந்தால் உடன் அனுப்பியருள வேண்டுகிருேம்.

அனைத்துமே எமையாளும் ஈசன் செயல் என எண்ணி அமைதியுறுகின்ருேம்.

—ஆங்கீரஸ் சர்மா,
பதிப்பாசிரியர்

## ஸ்ரீ சிவஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

(ஸ்ரீ ருத்ரயாமளத்திலடங்கியது)

ஸ்ரீருத்ரயாமளம் என்னும் பெரிய நூலின் ஒரு பகுதியான சிவ—ஷண்முக ஸம்வாத ரூபமான சிவஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் 1982-83 ஆண்டு மலரில் வெளியிடப்பட்டது தனி நூலாகவும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விலை ரூ. 8-50 தபாலில் ரூ. 10-00

பதிப்பாசிரியர் :

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு,
மேலமாம்பலம், சென்னை-600 033.

திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுரம்
ஆதீனம் 26வது குருமஹா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஷண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர்
கயிலை மாமுனிவர், காசிவாசி

ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள்



சென்னை அம்பத்தூர் ஸ்ரீ புவனேச்வரீ
பீடாதிபதி
ஸ்ரீமத் ஜகத்குரு மௌனானந்த தீர்த்த
மஹா சுவாமிகள்

அன்னை காயத்திரியின் இன்னருள் பெற்று
அற்புதங்கள் பலவற்றைப் பொற்புடன் நிகழ்த்தும்
அதிசயச்சித்தர்
ஸ்ரீலஸ்ரீ காயத்திரி சுவாமிகள்

ஸ்ரீ சந்த்ரமௌளீச்வராய நம:

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய பரம்பரை

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்

## காஞ்சீபுரம்- 631502.

காஞ்சீபுரம் தேதி *26-10.84*

மேலமாம்பலத்தில் ஆங்கிரஸ ஸ்ரீவேங்கடேச சர்மாவினுல் ஸ்தாபிக்கப்பட்டு ஜனங்களிடையே பகவத் பக்தியை வித்வான்களின் உபன்யாஸங்கள், மலர்வெளியீடுகள் முதலிய முறைகளின் மூலம் பரப்பிவரும் ஸ்ரீ சங்கர பக்தஜன ஸபையினர் வரும் ஸ்ரீ சங்கரஜயந்தி, ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் ஜயந்தி நிகழ்ச்சிகளை தக்க முறையில் கொண்டாட முன் வந்திருப்பதையும் இந்த சுப ஸந்தர்ப்பத்தில் சிதம்பரம் ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் தமிழ் உரையுடன், ஸ்ரீ பகவத்பாதர்களைப் பற்றிய ஸ்தோத்ரங்கள் நேபாள அரசர் செய்த மஹேசாஷ்டகம் மற்றும் ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராண ஸம்பந்தமான கட்டுரைகள் அடங்கிய சிறப்புமலரை வெளியிட ஏற்பாடு செய்திருப்பதையும் அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

ஆஸ்திகர்கள் இந்த ஸபையின் விழாக்களில் கலந்து கொள்வதுடன் மலர்களைப்படித்து தங்கள் பகவத் பக்தியை அபிவிருத்தி செய்து கொண்டும் இந்த ஸபையின் மற்ற தொண்டுகளில் ஒத்துழைத்தும் பரமாத்மாவின் அனுக்ரஹத்தினுல் எல்லா மங்களங்களையும் அடைவார்களாக.

நாராயணஸ்ம்ருதி

ச. ம. *84-85 ; 1*

உ

குருபாதம்

திருக்கயிலாயபரம்பரைத் திருத்தருமையாதீனம்
26- ஆவது குருமஹாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம்
மயிலாடுதுறை (அஞ்சல்) 609001
3-12-1984.

"ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே"

உலகளாவிய மக்களை ஒன்றுபடுத்துவதற்கு மொழியோ, இனமோ பூகோள எல்லைப்பரப்போ கூடப் பயன்படுவதில்லை. ஏனெனில் இவையனைத்தும் சில நேரங்களில் பிரிவினைக்கு வித்திட்டு விடுகிறது. ஆனால் சமயம் அங்ஙனமின்றி வேற்றுமையில் ஒற்றுமை காணும் மனோநிலையை வளர்க்க உதவுகிறது. எந்தச்சமயமும் மனிதனின் முன்னேற்றத்திற்கும் மனித ஒருமைப்பாட்டிற்கும் ஜீவகாருண்யத்திற்கும் வழி காணுவதாகவே அமைகிறது. எனவே எந்தச் சமயத்தைப் பின்பற்றுபவனும் — அவன் உண்மைச் சமயவாதியாக மட்டும் இருக்குமானால் — அவனிடம் மேற்கூறிய நற்குணங்கள் படியாமல் போகா. எனவே சமயம்தான் இவ்வுலகில் வேற்றுமையை மறந்து ஒன்றுபட்டு வாழ வழிவகுக்கும் என்பதை நல்லோர்கள் நாட்டு மக்களுக்கு உறுதியாக உணர்த்தியுள்ளனர்.

இத்தகைய மறுமலர்ச்சிக்கு ஆங்காங்கே சபைகள், கழகங்கள், மன்றங்கள், திருக்கூட்டங்கள் அமைத்துத் தொண்டாற்ற வேண்டுவது நாட்டிலுள்ள அனைவரின் கடமையாகும். அவ்வகையில் அன்பர் திரு ஆங்கீரச வேங்கடேசசர்மா அவர்கன் சென்னையில் ''ஸ்ரீசங்கர பக்த ஜன சபா'' என்னும் ஓர் அமைப்பினை நிறுவி நல்ல பல பணிகளைச் செயற்படுத்தி வருகிறார்கள். அதனை ஒட்டி இச்சபையின் வழி இவ்வாண்டு சங்கர ஜயந்தி விழாவினை முன்னிட்டு ஒரு மலர் வெளியிடுவது மகிழ்ச்சிக்கு உரியது. சுருதி, ஸ்ம்ருதி, புராணம், இதிகாசங்கள் தொடர்பாக அரும்பெரும் கட்டுரைகளைத் தாங்கி அம் மலர் வெளிவருவது பாராட்டுதற்கு உரியது.

விழா மலர் சமய நன்மணம் பரப்பிச் சிறக்கவும், சமயப் பணி ஆற்றி வரும் அன்பர் திரு ஆங்கீரச வேங்கடேச சர்மா அவர்களும் மற்றும் இறைபணியில் பங்குபற்றும் அன்பர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடு இனிது வாழ எல்லாம் வல்ல ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

---

## சிவஞான பூஜா மலர் — 1985

1981, 1982, 1983-84 ஆண்டுகளில் வெளியிட்டது போலவே இவ்வாண்டும் சிவஞான பூஜா மலர் நவம்பர் கடைசியில் வெளியிடப்படவுள்ளது. வடமொழி, தென்மொழி நூல்களில் உள்ள சிவபரத்துவக் கட்டுரைகளையும், தோத்திரங்களையும் தாங்கி வரும் இம்மலர் ஒவ்வொரு சிவபக்தரின் குடும்பத்துக்கும் இன்றியமையாததாகும். சுமார் 300 பக்கங்கள் கொண்ட இம்மலர் விலை ரூ. 12-00 ஆகும்.

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு

மேல்மாம்பலம், சென்னை-33

உ
சிவசிவ

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அதிபர், ஸ்ரீகாசிமடம்

திருப்பனந்தாள் — 612 504
(தஞ்சை மாவட்டம்)

20-11-1984

## வாழ்த்து

குறிப்பிடத்தக்க சமய, இலக்கியப் பணிகளை ஒல்லும் வகையால் ஓவாதே ஆற்றி வருகின்ற ஆங்கீரஸ எஸ். வேங்கடேச சர்மா அவர்கள் இவ்வாண்டும் சங்கர ஜயந்தி மலரை வெளியிடுவது குறித்து மகிழ்கின்றோம்.

பேசுவதும் ஈசன் நாமமே; பூசுவதும் அவன்தன் திருநீறே; மாசிலா உள்ளமும் அவன் மலரடிக்கே என்னும் உறைப்புடன் திகழ்ந்த அடியார் பலர்; அவர், தம் உளங்கனிந்த போதெல்லாம் உவந்து உவந்து பாடிய கீதங்கள்தாம் எத்தனை? அவற்றுள் சிலவற்றின் சீர்மையைச் செப்பிடும் விரிவுரைகளாக இம்மலரில் கட்டுரைகள் இடம்பெறுவது பாராட்டிற்குரிய நன்முயற்சியாகும்.

ஆழ்மனத்து ஊறிவரும் பத்திமையுணர்வுக்கு மொழி முதலான வேற்றுமைகள் கிடையா. அவ்வகையில் வட

நூற்கடலில் சிவபரத்துவ மேன்மையைத் தெள்ளிதின் உரைத்திடும் பாமாலைகளின் தமிழாக்கமும் இடம் பெறுவது இதன் சிறப்பாகும்.

வெளியிடும் அன்பர்க்கு இத்தகு மனப்போக்கும், செயல் வலியும் வாய்த்துள்ளமை அவர் முன்னைநாள் பணிந்தேந்திய பலனும்.

மூவர் கோவாய் நின்ற முதல்வனின் முழு முதற் தன்மையைப் போற்றிடும் கருத்தோவியங்களால் நிரம்பி, மலர் ஏற்றமிகு பக்தி இலக்கிய மணங்கமழும் சொர்ண மலராய்ப் பொலிந்திட செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

சிவசிவ

சுபம்

ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரும்மேந்த்ர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம் — புதுக்கோட்டை

## ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளவர்கள் அருளிய

# ஸ்ரீ முகம்

| ப்ரஹ்மைவ ஸத்யம் |

பிரும்மஸ்ரீ ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா அவர்களுக்கு ஸ்ரீஸத்குரு நாதனின் பரிபூர்ணமான அனுக்ரஹமும் ஸ்ரீ மாதா புவனேச்வரியின் திருவருளும் மேலும் பெருகி ஸகல மங்களங் களையும் அடைந்து இனிதே வாழ ஸ்ரீஸ்கந்த குருநாதன் ஸ்மரண பூர்வகமாய் ப்ரஸாதம் அனுப்பப்பட்டுள்ளது.

தங்கள் 20-5-85 கடிதம் பார்த்து ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் ஸந்தோஷமடைந்தார்கள். தாங்கள் ஸ்ரீ சங்கரஜயந்தி மலர் வழக்கம்போல் வெளியிடுவது குறித்து ஸ்ரீ ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் பரம திருப்தியைத் தெரிவித்தார்கள்.

குறிப்பாக மலரில் உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய வனும், நிலாவுலாவிய நீர்மலி வேணியனும், அலகில்லாத ஜோதிஸ்வரூபனுமாகிய அம்பலத்தாடுவானான ஸ்ரீசித் சபேசனின் ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தைத் தமிழில் உரை யுடன் வெளியிடுவது குறித்து மிகவும் மகிழ்ந்தார்கள்.

அத்வைத மதஸ்தாபகராகிய ஆதிசங்கரரின் நல்லுப தேசங்களைக் கடைப்பிடித்து வாழ்வது ஒன்றே நமக்குப் பேரின்பம் தருவதாகும். ஸ்ரீ சங்கரரின் கோட்பாடுகளை அனைவரும் உணர்ந்து பின்பற்றும் வகையில் தாங்கள் ஆற்றி வரும் பணிசிறக்க ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் தம் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

ஸ்ரீ சங்கரஜயந்தி மலர் சிறப்புடன் மலர்ந்து நன்மணம் பரப்ப ஸ்ரீஸ்கந்த குருநாதன் திருவருள் புரிவானாக.

ச்ருதிஸ்ம்ருதி புராணனாம் ஆலயம் கருணாலயம்
நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம்

ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள்
ஆக்ஞைப்படி

வித்வான் ப. சிகாகிரீசன்
புதுக்கோட்டை

---

## BE AWARE OF GODS

"BEWARE OF DOGS" நாய்கள் ஜாக்கிரதை என்ற அறிவிப்புக்களையே சாதாரணமாகச் சென்னை நகர வீடுகளில் காணும் நாம் "BE AWARE OF GODS" கடவுள் உண்மையை அறிந்தவர்களாய் இருங்கள் என்ற அறிவிப்பு ஒரு இல்லத்தில் இன்றும் விளங்குகிறது என்றால் மிக அதிசயப் படுவோம் அல்லவா? இந்த அறிவிப்பு வைத்திருப்பவர், ஸ்ரீ ராமகதாரத்னம், புதுக்கோட்டை V. தியாகராஜன் அவர்கள், 6, 3-வது மெயின்ரோடு, நங்கநல்லூர், சென்னை-600061.

ஆசிரியர் ஆங்கிரஸ சர்மா அவர்களின் ஷஷ்ட்யப்த பூர்த்தி விழா 16 - 6 - 1985 ஞாயிறு, சென்னையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. விரிவான கட்டுரையும், மேலும் படங்களும் பின்னர் வெளியிடப்படும்.

ஸ்ரீ காயத்ரி தேவ்யை நம:

ஸ்ரீ காயத்ரி அருள் சித்தர்

# ஸ்ரீலஸ்ரீ காயத்ரி சுவாமிகள்

அவர்கள் அருளிச்செய்த

## ஸ்ரீமுகம்

ஸர்வ மங்கள மாங்கல்யே சிவே ஸர்வார்த்தஸாதிகே |
சரண்யே த்ர்யம்பகே கௌரி நாராயணி நமோஸ்துதே! ||

அறிவைத் தூண்டி வளர்க்கின்ற அரிய மந்திரம் காயத்ரீ. இம்மந்திரத்துக்கு மேல் உயர்ந்த மந்திரம் இல்லை என்று சொல்லப்படுகிறது. அத்தகைய காயத்ரீ மந்திரத்தின் துணை கொண்டு சங்கரனடிமை ஆங்கீரஸ வேங்கடேச சர்மா அவர்கள் பல சமயப் பணிகளைச் செய்து வருகிறார்கள்.

இந்து மதத்திற்குப் புத்துயிரூட்டி சுத்த வைதிகமான மார்க்கத்தில் ஆறு தெய்வ வழிபாடு என்ற ஷண்மதஸ்தாபனம் செய்த ஸ்ரீமத் ஜகத்குரு ஆதிசங்கரர், அவ்வழியில் நின்று பரப்பிரம்மம் என்பது பரமசிவனே என்று நிரூபித்த ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் போன்ற அவதார புருஷர்களின் ஜயந்தி தினத்தைக் கொண்டாடுவது, அவ்விழாவினைத் தொடர்ந்து ஜயந்தி புத்தக மலர் வெளியிடுவது மற்றும் பல தெய்வீக நூல்களைப் பதிப்பிப்பது ஆகியவை இவரது சமயப் பணியில் முக்கியமானவையாகும்.

இங்ஙனம் பிரவசனங்கள் செய்வது, புத்தக வெளியீடுகள் செய்வது போன்ற ஞானயக்ஞ முறையில் ஜகத்குரு ஆதி சங்கரரை வழிபடும் நமது அன்பர் திரு. ஆங்கீரஸ சர்மா அவர்கள் நீடூழி வாழ்ந்து தன்னுடைய சமயப் பணிகளை யெல்லாம் முழுமையாக நிறைவேற்ற அருள்பாலிக்குமாறு அன்னை ஸ்ரீ காயத்ரி தேவியின் பாதகமலங்களில் பிரார்த்திக்கின்றோம். இந்த நூலைப்பெறும் அன்பர்களும் எல்லா நலன்களையும் அடைவார்களாக என ஆசீர்வதிக்கின்றோம்.

சென்னை-600001
15-5-1985 } ஸ்ரீலஸ்ரீ காயத்ரி சுவாமிகள்

*ச. ம. 84-85 : 1-A*

# THE MESSAGE OF THE UPANISHADS

Asthikamani Sri A. SUBRAMANIA IYER, M.A. B.L.,
Advocate, Supreme Court.

The Vedas are to be divided into two parts, Karma (work) and Gnana (knowledge) The first is made up of hymns regarding rituals and ceremonies and rules of conduct. There are several Upanishads in the world but only 108 have been preserved. Out of 108, Adhi Sankara wrote commentories for 10 Upanishads and these ten Upanishads are (1) Isha, (2) Kena, (3) Katha, (4) Prasna, (5) Mundaka, (6) Mandukya, (7) Taithiriya (8) Aitareya, (9) Chandogya and (10) Brihadaranyaka. It is not possible to discuss here all these Upanishads. I am giving below the gist of some Upanishads, so that the reader may develop a desire to learn the Upanishads and attain Brahmananda.

The purpose of the study of Upanishads is not merely to enrich our knowledge, but also to purify and enrich our knowledge, but also to purify and enrich our soul or Atma. Knowledge is essential to improve our intellect, but had our forefathers merely emphasized the greatness of our knowledge and intellect alone we would have been only leading a material life, eat well, drink well, live well and go to hell.

Instead of laying emphasis on the mere intellect, our forefathers, Rishis and Saints found that life is ephemeral, transient and by their intuition, they realised that real happiness is Sat-Chit-Anand or realisation of self or Atma which is a particle of the great Brahman or Paramatman.

For learning Upanishad, one should approach the Guru with humility. It is not given to everyone to attain the realisation of the Brahman God God dwells in all beings. Though people hear of Him, do not understand Him. Wonderful is he who speaks of Him, intelligent is he who learns of Him, blessed is he who is taught or trained by a good Guru and is able to comprehend the Almighty.

It is said that the part of the body where the Almighty can be realised is the heart. Realisation can be achieved by meditation The vast mass of energy or the potentiality of soul will travel along the sushumna nadi and the super sensuous perception will result. The sushumna is closed in ordinary persons but an adept Sadhaka or aspirant can open the path as stated in the Upanishads. All this universe perceived and imagined is Om. Hence one should meditate on Om.

The preceptor advised the disciple to speak the truth and respect the elders in order to be a successful aspirant. The Supreme self or Brahman is the unseen force. It is the ear of the ear, mind of the mind and speech of the speech. That cannot be comprehended by seeing or hearing but by seeing within, by meditation, by intuition and if one is destined to realise, it is as a result of his Poorva Janma Punya.

In Kena Upanishad, it is clearly explained the real strength for all the powers on earth is given by Brahman. It is said that the God of Fire, the God of Wind and Indra excelled other Gods for they were nearer to Brahman and they were first to recognise Brahman.

Brahman should be meditated upon and the way to realise it is by austerity, self control and performance of

one's duties. How to train yourself to realise the Brahman is further explained in Kathopanishad when Nachiketas questions Yama and Yama puts the great truth in a nutshell. Shun the pleasures and aim at the good. In modern days the youth of our country like the youth of other western nations are running after pleasures and unless this trend is put an end to, our India or Bharath is likely to destroy or forget our glory and it will be difficult for the next generation to realise the spiritual glory handed down to us from generation to generation by our forefathers.

The seat of spiritual culture, Southern India, has preserved the glory by laying emphasis on Sanskrit, Vedas and Upanishads. Recent apathy towards Sanskrit in the South is likely to cause great danger to our spiritual glory. It is heartening to note that in North India people adore Sanskrit and vedas much more and propagate the same through several institutions.

In Prasna Upanishad, it is stated that Prana, the primary energy and Rayi form in the sun and moon. Those who desire offering and for performance of ritual attain the world of the moon and are born again on earth. They travel by the southern path. But who worship the self-Brahman by means of austerity, continence path and knowledge go by the northern path and attain the world of the sun. It is to be noted that the world of Brahman is attainable only by those who are pure, truthful, kind and outspoken.

Mundaka distinguishes the difference between knowledge and wisdom. Knowledge relates to things and relatives, but wisdom relates to the attainment of Brahman.

Brahmananda is the greatest joy. He, who knows the joy of Brahman, which words cannot express and mind cannot react, will be free from fear. It is really difficult to shun the worldly pleasures as Maya will not allow people to become perfect beings. This can be achieved by practice and meditation and an aspirant with real sincerity and determination must realise his goal and achieve saintly qualities. For this purpose Sat-sangh is essential and let right-thinking people form Sat - sangh with a view to spread the knowledge of Brahman.

May Brahman protect us and guide us and give us the strength and right understanding to attain self realisation.

MAY PEACE BE WITH US ALL.

உ
ஸ்ரீ குருப்யோ நம:
சிவமயம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீமத் ஜயேந்திர
ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராசாரிய
சுவாமிகளவர்கள் மேலமாம்பலம்
ஸ்ரீ சங்கரமடத்துக்கு 7-4-1985
ஞாயிறு எழுந்தருளிய சமயம்
மேலமாம்பலம் ஸ்ரீ சங்கர பக்தஜன
சபையினரால் பக்தியுடன்
வாசித்துச் சமர்ப்பிக்கப்பட்ட
வரவேற்பு இதழ்

குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேச்வர: |
குருஸ்ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||

கற்பகவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி போன்ற விசித்திரமான பல பொருள்கள் நிறைந்த மூவுலகங்களுள்ளும் ஆத்மஞானத்தை உபதேசிக்கின்ற ஸத்குருவுக்கு நிகரான பொருள் ஒன்று கூட காணப்படவில்லை என்று எந்த ஆதிசங்கர பகவத் பாதாசாரியர்களால் குருவின் மஹிமை விளக்கியருளப் பட்டதோ அந்த ஜகத்குரு ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர் களின் பரம்பரையில் 69-வது குருமூர்த்திகளாகி அவனியெலாம் அருள் மழை பொழியும் அருள் கொண்டலே! வருக! வருக!! எனத் தங்களை வரவேற்கின்றோம்.

சூரியன், சந்திரன், அக்னி மற்றும் ஒளி தாங்கிய எந்தப் பொருளாலும் அகற்ற முடியாததான அக்ஞானம் என்னும் அடர்ந்த இருளை அகற்றுகின்ற காரணத்தால் ''குரு'' என்ற சொல்லால் உணர்த்தப்படுகிற ஆசாரிய மூர்த்திகளான ஞானக் கொண்டலே! தங்களை வருக! வருக!! என வரவேற்கின்றோம்.

குருவே ஒப்புயர்வற்ற பிரம்மம், குருவே உயர்ந்த இருப்பிடம், குருவே உயர்ந்த வித்யை, குருவே அனைவரும் சரணடையத்தக்க பெரியதோர் இடம், குருவே கடைசியாய் அடையத்தக்க உயர்ந்த நிலை, குருவே போற்றத் தகுந்ததும் ஒப்பற்றதுமான சிறந்த செல்வம், எதனால் குரு ஒருவரே அறியாமையை அகற்றி ஆத்மக்ஞானத்தை அளிக்கின்றாரோ அவரே எல்லாவற்றுக்கும் மேலானவர் ஆகின்றார் என அத்வய தாரக உபநிஷத் போதிக்கும் மஹா மஹிமை பொருந்திய தவக்கொண்டலே! தங்களை வருக! வருக!! என வரவேற்கின்றோம்.

ஈச்வரனுக்கும் குருவுக்கும் வேற்றுமையில்லை. ஈசனே குரு, குருவே ஈசன், எனவே ஈசனைப் போன்றே குருவைப் பக்தியுடன் ஆராதிக்க வேண்டும் என்று யோகசிகோபநிஷத் கோஷிக்கும் மஹத்துவம் வாய்ந்த அருள் ஞானக் கொண்டலே! தங்களை வருக! வருக!! என வரவேற்பதில் பெருமை கொள்கின்றோம்.

எவனொருவனுக்குத் தெய்வத்திடம் சிறந்த அன்பு இருக்கின்றதோ, அங்ஙனமே குருவிடமும் பேரன்பு ஏற்படுகின்றதோ அந்த மஹாத்மாவான சிஷ்யனுக்கு வேதங்களில் கூறப்பட்ட பொருள்கள் யாவுமே துலங்குகின்றன. குருவினால் உபதேசிக்கப்படாததும் அவசியம் அறியப்பட வேண்டிய பொருள்களும் தக்க சமயத்தில் குருவின் அருளால் துலங்குகின்றன என்று ச்வேதாச்வதரோபநிஷத் போற்றும் மஹா ப்ரபாவம் பொருந்திய ஸ்ரீமத் ஜகத்குரு மஹாசந்நிதானம் அவர்களே! தங்களை வரவேற்கும் நற்பேறு பெற்ற எங்களது எளிய வரவேற்புரையினை ஏற்றருளி அடியேங்களை ரக்ஷித்தருளுமாறு விநயத்துடனும், பக்தியுடனும் ப்ரார்த்தித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
சங்கரனடிமை
ஆங்கீரஸ வேங்கடேச சர்மா
மற்றும் நிர்வாஹிகள்

7-4-1985
மேலமாம்பலம்
சென்னை-600 033

சிவம்

# நமது சபை

## சிறப்புக்கள்

1. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் பரிபூரண அநுக்ரஹம் பெற்றது.

2. ஸ்ரீ சங்கர பகவத்பாதர்களை ஞானயக்ஞ முறையில் ஆராதிக்க வேண்டும் என்ற கொள்கையை முதன் முதலில் மேலமாம்பலத்தில் உருவாக்கியது.

## நோக்கங்கள்

1. ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் அருளிச் செய்த கிரந்தங்களை பிரவசனங்கள், ஸ்ரீ சங்கர ஜயந்தி புத்தக மலர் வெளியீடு ஆகியவை மூலம் பிரசாரம் செய்யும் ஞானயக்ஞ முறையில் ஆராதிப்பது; குறைந்த விலையில் நூல்கள் பிரசுரிப்பதுடன் இலவச வெளியீடுகள் மூலமும் பிரசாரம் செய்வது.

2. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் உபதேசங்களைப் பிரசாரம் செய்வது; அவர்கள் அருளிச்செய்யும் வகைகளில் தர்மப்பிரசாரம் செய்வது.

3. ஈச்வரபக்தி, ஆசார்யபக்தி ஆகியவற்றை ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் தவிர மற்றும் பல அருளாளர்களின் கிரந்தங்கள், புராண ப்ரவசனங்கள் மூலம் பரப்புவது.

4. மாணவ மாணவியர்க்கு குரு பக்தியும், தெய்வ பக்தியும் நமது வைதிக மதத்தில் உண்மையறிவும் உண்டாகும்படி செய்வது.

5. மற்றும் ஸ்ரீ பகவத்பாத சேவையில் யதாசக்தி ஈடுபடுவது.

6. ச்ருதி, ஸ்ம்ருதி, புராண இதிஹாஸ மஹாநாடுகள் மூலம் நமது ஸநாதன தர்மத்தைப் போஷிப்பது.

## விசேஷ நன்கொடையாளர்கள்

அம்பத்தூர் புவனேச்வரீ பீடாதிபதி ஸ்ரீ மௌனானந்த தீர்த்த சுவாமிகள் ரூ. 51/- அனுக்கிரஹித்து இவ்வருஷமும் சங்கர ஜயந்தி முயற்சியை ஆரம்பித்து வைத்தார்கள்.

### ஸ்ரீமான்கள்

1. A. சுப்ரமணிய ஐயர் அவர்கள் M.A,.B.L.
   ஸுப்ரீம் கோர்ட் அட்வொகேட், சென்னை-1
2. R. மாத்ருபூதம் ஐயர் அவர்கள் B.A.B.L.
   அட்வோகேட், சென்னை-33
3. N. C. கிருஷ்ணன் அவர்கள்
   சார்டர்ட் அக்கவுண்டன்ட், சென்னை-17
4. ஆஸ்திகரக்ஷாமணி V. சின்னஸ்வாமி ஐயர் அவர்கள்
   சென்னை-17
5. சிவாசார்யகுலபூஷணம், சிவாகம சாஸ்த்ரநிபுண, சிவஸ்ரீ T. S. சாம்பமூர்த்தி சிவாசாரியார் அவர்கள்
   ஸ்ரீ காளிகாம்பாள் தேவஸ்தானம், சென்னை-1
6. L. வைத்தியநாதன் அவர்கள், B.A., F.C.A.
   மைலாப்பூர், சென்னை-4
7. சிவஸ்ரீ V. S. வாசீச்வரசிவாசாரியார் அவர்கள்,
   ஸ்ரீ அங்காள பரமேச்வரி தேவஸ்தானம் சென்னை-13
8. ஸ்ரீமான் K. S. கிருஷ்ணய்யர் அவர்கள்,
   என்ஜினீயர், அசோக்நகர், சென்னை-83

## போஷகர்கள்

### ஸ்ரீமான்கள்

1. S. சங்கரநாராயண ஐயர் அவர்கள், சென்னை-33
2. A. ராமச்சந்திரன் அவர்கள், சென்னை-17
3. K. ராமமூர்த்தி, B.E. அவர்கள், சென்னை-34
4. S. குப்புஸ்வாமி ஐயர் அவர்கள், செனனை-33
5. K. V. மூர்த்திநாராயண செட்டியார் அவர்கள்,
   பாப்பாரப்பட்டி, தர்மபுரி ஜில்லா

6. M. V. பார்த்தசாரதி அவர்கள், தம்மம்பட்டி P. O. சேலம் ஜில்லா.
7. V. R. ராமமூர்த்தி ஐயர், ஸ்ரீ ஜயேந்திரா & கோ, சென்னை–1
8. சிவாசார்ய சாஸ்த்ர பூஷணம், சிவஸ்ரீ தத்புருஷ S. கணேச சிவாசாரியார் அவர்கள், ஸ்ரீ கச்சபேச்வரர் தேவஸ்தானம், சென்னை–1

## ஆயுள் அங்கத்தினர்கள்

ஸ்ரீமான்கள்:

1. L. கிருஷ்ணமூர்த்தி, என்ஜீனியர், ஹிந்துஸ்தான் ப்ரௌன் பௌரி லிமிடெட், பரோடா.
2. T. V. பாலகிருஷ்ணன் ''பார்வதி'' E-12, கீழ்பாக்கம் கார்டன் காலனி, நியூ ஆவடி ரோடு, சென்னை–10
3. G. சுந்தரம் ஐயர், M.A. L. T. அவர்கள் Plot 66, பிரதாபசிம்மபுரம், தஞ்சாவூர்.
4. S. சிவராமகிருஷ்ணன் C/O. M. ஸதாசிவய்யர், சென்னை-33
5. ஸ்ரீமத் அய்யா புவா ராமதாஸி அவர்கள், ஸ்ரீ ஸமர்த்த ஸேவா மண்டல், ஸஜ்ஜன்கட் P. O. சதாராஜில்லா, (மஹாராஷ்ட்ரா)
6. V. ராமய்யர் அவர்கள், சரவண் மான்ஷன்ஸ், பம்பாய்-63
7. N. K. தர்மராஜ் அவர்கள் காமயகவுண்டன்பட்டி, மதுரை ஜில்லா,
8. V.N. ஆறுமுக முதலியார் அவர்கள், B. Com. F.C.A சென்னை- 17
9. R. சந்திரமௌளி ஐயர், பார்ட்னர், சுபாஷ் ஆடோ எண்டர்பிரைசஸ் சென்னை–2
10. N. K. ராமராஜ் அவர்கள், காமயகவுண்டன்பட்டி, மதுரை ஜில்லா

11. R. B. முத்துசாமி செட்டியார் அவர்கள், தாராபுரம், கோவை மாவட்டம்
12. Dr. K. ஜயராமச்சந்திரன், M.B.B.S. நாமக்கல்
13. ''அறச்சுடர்'' கயப்பாக்கம் முத்துலிங்கா ரெட்டியார் அவர்கள், சேத்துப்பட்டு, சென்னை-31.
14. S. விச்வநாதன் அவர்கள், சென்னை-33.
15. S. K. சுப்பிரமணியன் அவர்கள், B.A., LL.B. அட்வொகேட், சேலம்-6.
16. S. சந்த்ரபோஸ் அவர்கள், B.Sc., B.L. அட்வொகேட், சென்னை-21

## கமிட்டி அங்கத்தினர்கள்

ஸ்ரீமான்கள்

1. T. S. கிருஷ்ணமூர்த்தி ஐயர், மேலமாம்பலம்
2. V. கோவிந்தராஜன், மேலமாம்பலம்
3. K. ராஜாராமன், மேலமாம்பலம்
4. S. பாலசந்திரன் மேலமாம்பலம்
5. V. சுப்பிரமணியன், மேலமாம்பலம்

ஸ்தாபகர்—பணியாளர் :

**ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா**

## அங்கத்தினர்கள்

ஸ்ரீமான்கள் :

1. V. கமலாம்பாள், மேலமாம்பலம்
2. A. R. கிருஷ்ணசாமி, தியாகராயநகர்
3. S. நாராயணஸ்வாமி, தியாகராயநகர்
4. R. பாலசுப்ரமணியம், அசோக்நகர்
5. S. விஜயராகவன், சென்னை-33
9. R. ராஜாராமன், சென்னை-33
10. P. ஸ்ரீநிவாஸன், சென்னை-4.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

# ஆண்டு அறிக்கை 1983

நமது சபையின் 1983-வது ஆண்டு (ருத்ரோத்காரி) ஸ்ரீசங்கர ஜயந்தி விழா 29-6-1983 முதல் 11-7-1983 வரை 13 தினங்கள் தினசரி இரவு 7-30 மணிக்குச் சென்னை - மேல மாம்பலம் ஸ்ரீசங்கர மடத்தில் ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாத பாதுகா சந்நிதியில் நடைபெற்றது. இது நமது சபையின் 22-வது ஆண்டு ஸ்ரீ சங்கர ஜயந்தி விழாவாகும்.

29-6-1983 : 30-6-1983 : விழா ஆரம்பம். ஆஸ்திகரக்ஷாமணி ஸ்ரீமான் V. சின்னஸ்வாமி ஐயர் அவர்கள் தலைமையில் ஸ்காந்த பூஷணம், பிரம்மஸ்ரீ, பைங்காநாடு R. வேங்கடராம சாஸ்திரிகளின் ஸ்ரீ சங்கர விஜயம் பிரவசனம் நடைபெற்றது.

1-7-1983 : பிரம்மஸ்ரீ ஸ்காந்தபூஷணம், பைங்காநாடு வேங்கடராம சாஸ்திரிகளின் "ஸ்ரீ சுப்பிரமண்ய புஜங்கம்" பிரவசனம்.

2-7-1983 : முதல் 4-7-1983 வரை மூன்று தினங்கள் தர்மபிரவசனரத்னம், பிரம்ம ஸ்ரீ மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகளின் "ஸ்காந்தம்" பிரவசனம்.

5-7-1983 : முதல் 7-7-1983 வரை மூன்று தினங்கள், சிவோத்கர்ஷவர்ஷக, பிரம்மஸ்ரீ P. N. நாராயண சாஸ்திரிகளின் "சிவானந்தலஹரீ" பிரவசனம்.

8-7-1983 : இரண்டு தினங்கள். ஆத்மவித்யாபூஷணம்
9-7-1983 : பிரம்மஸ்ரீ V. S. V. குருஸ்வாமி சாஸ்திரிகளின் "சதச்லோகி" பிரவசனம்.

10-7-1983 : இரு தினங்கள். பாஷ்யபாவக்ஞ, பிரம்மஸ்ரீ
11-7-1983 : வரஹூர் கல்யாணஸுந்தர சாஸ்திரிகளின் "விவேகசூடாமணி" பிரவசனம்.

## ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் ஜயந்தி

இவ்வருடத்திய இரண்டாவது நிகழ்ச்சியான ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் அவர்களின் ஜயந்தி விழா 23-9-1983 முதல் 5-10-1983 வரை 13 தினங்கள் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இது நமது சபையின் 19-வது ஆண்டு ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் ஜயந்தியாகும்.

23-9-1983 : விழா ஆரம்பம். ஆஸ்திகரக்ஷாமணி ஸ்ரீமான் V. சின்னஸ்வாமி ஐயர் அவர்களின் தலைமையில் தர்மப்ரவசன ரத்னம் பிரம்மஸ்ரீ மஞ்சக்குடி K. ராஜகோபால சாஸ்திரிகள் ஸ்ரீமத் "அப்பய்ய தீக்ஷிதேந்திரர் பெருமை" பிரவசனம்.

24-9-1983 முதல் 26-9-1983 வரை : மூன்று தினங்கள் பிரம்மஸ்ரீ மஞ்சக்குடி K. ராஜ கோபால சாஸ்திரிகளின் "ஸ்காந்த புராணம்" பிரவசனம் நடைபெற்றது.

27-9-1983 முதல் 29-9-1983 வரை : மூன்று தினங்கள் சிவோத்கர்ஷவர்ஷக பிரம்மஸ்ரீ P. N. நாராயண சாஸ்திரிகளால் "ஆத்மார்ப்பண ஸ்துதி" பிரவசனம்.

30-9-1983 : மழை காரணமாக நிகழ்ச்சி இல்லை.

1-10-1983 : சிவோத்கர்ஷகவர்ஷக பிரம்மஸ்ரீ P.N. நாராயண சாஸ்திரிகளின் "துர்காசந்த்ரகலாஸ்துதி" பிரவசனம்.

2-10-1983 : பாஷ்யபாவக்ஞ வரஹூர் பிரம்மஸ்ரீ கல்யாண ஸுந்தர சாஸ்திரிகள் "ராமாயண தாத்பர்ய ஸங்க்ரஹம்" என்பது பற்றிப் பிரவசனம்.

3-10-1983 : மழை காரணமாக நிகழ்ச்சி இல்லை.

4-10-1983 : "நீலகண்ட தீக்ஷிதர் தினம்" — பாஷ்யபாவக்ஞ வரஹூர் பிரம்மஸ்ரீ கல்யாணஸுந்தர சாஸ்திரிகள் பிரவசனம்.

5-10-1983 : மேலமாம்பலம் ஸ்ரீராம் பஜனை மண்டலியாரின் திவ்யநாம பஜனை.

## ஆண்டு மலர்

1982-1983 இரு ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒரே மலராக 4-12-1983 அன்று வெளியிடப்பட்டு உடன் அங்கத்தினர் கட்கும் நன்கொடையாளர்கட்கும் விநியோகிக்கப்பட்டது.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீமஹாதேவஜயம்

# ஆண்டு அறிக்கை - 1984

ரக்தாக்ஷி (1984) ஆண்டுக்குரிய நமது சபையின் ஸ்ரீசங்கர ஜயந்திஞானயக்ஞப் பெருவிழா 9-7-1984 முதல் 18-7-1984 வரை 10 தினங்கள் சிறப்பாக நடைபெற்றது. இது நமது சபையின் 23வது ஆண்டு ஸ்ரீ சங்கரஜயந்தியாகும்.

9-7-1984 : ஆஸ்திகரக்ஷாமணி ஸ்ரீமான் V. சின்னஸ்வாமி
10-7-1984 ஐயர் தலைமையில் தர்மப்ரவசனரத்னம் பிரம்மஸ்ரீ
2 தினங்கள் மஞ்சக்குடி K. ராஜகோபால சாஸ்திரிகளின் "ஸ்ரீசங்கர விஜயம்" பிரவசனம் நடைபெற்றது.

11-7-1984 : ஸ்காந்த பூஷணம், பிரம்மஸ்ரீ பைங்காடு
12-7-1984 R. வெங்கடராம சாஸ்திரிகளால் "சிவானந்த
2 தினங்கள் லஹரீ" "மார்க்கண்டேய சரித்திரம்
பிரவசனம்".

13-7-1984 தர்மக்ஞ பிரம்மஸ்ரீ மாயூரம் ராமநாததீக்ஷிதர்
14-7-1984 அவர்கள் பிரவசனம்—"தசச்லோகீ"
2 தினங்கள்

15-7-1984 : பாஷ்யபாவக்ஞ வரஹூர் பிரம்மஸ்ரீ கல்யாண
16-7-1984 ஸுந்தர சாஸ்திரிகள் பிரவசனம்—"சதச்லோகீ"
2 தினங்கள்

17-7-1984 சிவோத்கர்ஷவர்ஷக பிரம்மஸ்ரீ P. N. நாராயண
18-7-1984 சாஸ்திரிகள் பிரவசனம் — "சிவஸஹஸ்ரநாம
2 தினங்கள் ஸ்தோத்ரம்"

## ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் ஜயந்தி

நமது சபையின் இரண்டாவது நிகழ்ச்சியான ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரர் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் ஜயந்தி விழா 10-10-1984 முதல் 18-10-1984 வரை 9 தினங்கள் சிறப்பாக நடைபெற்றது. இது நமது சபையின் 20-வது ஆண்டு ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் ஜயந்தியாகும்.

10-10-1984 : ஆஸ்திகரக்ஷாமணி ஸ்ரீமான் V. சின்னஸ்வாமி
11-10-1984 : ஐயர் அவர்கள் தலைமையில் சைவசீல நன்மணி
2 தினங்கள் ஸ்ரீமான் V. N. ஆறுமுகம், F. C. A., அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தார்கள். தர்மப்ரவசனரத்னம் பிரம்மஸ்ரீ மஞ்சக்குடி K. ராஜகோபால சாஸ்திரிகள் பிரவசனம் — "ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர் சரிதம்".

12-10-1984 : தர்மக்ஞ, பிரம்மஸ்ரீ மாயூரம் ராமநாத தீக்ஷிதர்
13-10-1984 : அவர்கள் பிரவசனம் — "சிவ கர்ணாம்ருதம்".
2 தினங்கள்

14-10-1984 : பாஷ்ய பாவக்ஞ, பிரம்மஸ்ரீ வாஹூர் கல்யாண
15-10-1984 : ஸுந்தர சாஸ்திரிகள் பிரசவனம் - "ஆத்மார்ப்
2 தினங்கள் பண ஸ்துதி"

16-10-1984 : சிவோத்கர்ஷவர்ஷக பிரம்மஸ்ரீ P. N. நாராயண சாஸ்திரிகள் பிரவசனம் "தீக்ஷிதேந்திரரின் தேவீ ஸ்தோத்ரங்கள்"

17-10-1984 : நீலகண்ட தீக்ஷிதர் தினம் — பிரம்மஸ்ரீ P. N. நாராயண சாஸ்திரிகள் பிரவசனம்.

18-10-1984 : மேலமாம்பலம் ஸ்ரீராம் பஜனை மண்டலியாரின் சிவநாம சங்கீர்த்தனம் பஜனை.

எல்லா நிகழ்ச்சிகளிலும் ஆஸ்திக அன்பர்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## ஆண்டு மலர்

1984-வது ஆண்டுக்குரிய மலர் வெளியிடப்படாமையால் 1984, 1985 இரு ஆண்டுகளுக்கும் ஒரே மலராக வெளியிடப் பட்டு உங்கள் கரங்களில் இப்பொழுது விளங்குகின்றது.

சிவம்

---


## ஸ்கந்தலஹரீ

வேண்டுவோர் வேண்டுவது அனைத்தும் நல்கும் வேலவன் துதிநூல். Dr. N. கங்காதரன் அவர்களின் தமிழ் உரையுடன் கூடியது. 36 பக்கங்கள் விலை ரூ. 1-00 தபாலில் விலை ரூ 1-25.

பதிப்பாசிரியர்

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா

5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு

மேலமாம்பலம், சென்னை-33

# ஒரு மரத்தில் இரண்டு பக்ஷிகள்

பாஷ்ய பாவக்ஞ பிரம்மஸ்ரீ
வரஹூர் கல்யாணஸுந்தர சாஸ்திரிகள்

இந்த விஷயம் முண்டகம் என்னும் உபநிஷத்திலுள்ள ஒரு மந்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே |
தயோரந்ய:பிப்பலம் ஸ்வாத்வத்தி
அநச்னன்னன்யோऽபிசாகசீதி ||

என்பதே அந்த மந்திரமாகும். அழகிய சிறகுகளையுடையவைகளும் ஒன்றை விட்டொன்று பிரியாத தன்மையில் தோழமை கொண்டவைகளுமான இரண்டு பக்ஷிகள் ஒரு மரத்தை அண்டியிருக்கின்றன. அவற்றுள் ஒன்று அம்மரத்தில் கிடைக்கும் பழங்களைச் சுவைத்துத் தின்று கொண்டிருக்கிறது. மற்றொன்று அவைகளைத் தின்னமலேயே பார்த்துக் கொண்டிருக்கிறது என்று இந்த விஷயமே இதில் கூறப்பட்டிருக்கிறது.

தத்வோபதேசம் செய்யும் தன்மை வாய்ந்த உபநிஷத்தானது இதன் மூலமும் நமக்கோர் தத்துவத்தை விளக்கவே இவ்வாறு கூறியிருக்கிறதெனக் கொள்வதே பொருத்தமாதலின், அது விளக்க வந்த தத்துவம் யாதென அறிந்து கொள்வது நமக்கு மிக அவசியமாகின்றது. அதை இரு சாரார் இருவகையாக விளக்கியிருக்கிருர்கள். இவ்விடத்தில் விருக்ஷம் என்னும் சொல்லானது விருக்ஷம் போல வளர்ந்து வீழ்ந்துபடும் தன்மையுள்ள நமது சரீரத்தைக் குறிப்பிடுகின்றது. ஸுபர்ணௌ என்னும் சொல்லானது ஸம்ஸாரியான ஜீவன், அஸம்ஸாரியான பரமாத்மா என்னும் இருவர்

களைக் குறிக்கின்றது. அவ்விருவரும் போக்தா, ஸாக்ஷி என்னும் இருதன்மையில் இந்த சரீரத்தை அண்டியிருக்கிறார்கள். அவர்களுள் ஒருவரான ஜீவன் இங்கு பிப்பலம் என்று குறிப்பிட்டுள்ள அவனது வினைப்பயனகளான ஸுகதுக்கங்களை இச்சரீரத்தில் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். மற்றொருவரான பரமாத்மா அவற்றை அனுபவிக்காமல் ஸாக்ஷியாக அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்னும் தத்வமே இங்கு விளக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ஜீவன் வேறு, பரமாத்மா வேறு என்ற உண்மையும் அறிவிக்கப்பட்டுள்ளது எனச்சிலர் கருதுகின்றனர்.

த்வௌ என்ற பதம் இவ்விடத்தில் முற்றிலும் வேறுபட்ட இரு தத்வங்களைக் குறிக்கவில்லை. ஒரே வஸ்துவின் இரண்டு மாறுபட்ட நிலைகளையே குறிக்கின்றது. 'ஏகோ தேவ:ஸர்வ பூதேஷு கூட:' என்ற வசனப்படி ஒரே ஆத்மாதான் எல்லா சரீரங்களிலும் உள்ளது. அது ஜாக்ரத் என்னும் விழிப்பு நிலையில் அந்தக்கரணம் என்னும் உபாதி ஸம்பந்தத்தால் வினைப்பயன்களை அனுபவிக்கிறது. ஸுஷுப்தி நிலையில் ஸாக்ஷி மாத்ரமாய் நிற்கிறது என்ற உண்மையே இவ்விடம் அறிவிக்கப்பட்டுள்ளது எனச் சிலர் கருதுகின்றனர்.

'அயமாத்மா ப்ரும்ம', 'அஹம் ப்ரும்மாஸ்மி' என்பன போன்ற மஹாவாக்கியங்களினாலும், 'ப்ரும்மவித் ப்ரும்மைவ பவதி', 'ப்ரும்மைஸந் ப்ரும்மாப்யேதி' என்பன போன்ற வாக்கியங்களாலும், 'க்ஷேத்ரக்ஞம் சாபி மாம் வித்தி' என்பன போன்ற கீதா வசனங்களாலும் ஜீவப்ரம்ம ஐக்கியம் என்னும் உண்மையே தெளிவாக போதிக்கப்பட்டிருப்பதாலும் 'உதரமந்தரம் குருதே அததஸ்ய பயம் பவதி' 'அத யோ அன்யாம் தேவதாம் உபாஸதே அன்யோஸௌ அன்யோஹமஸ்மி இதி ந ஸ வேத யதாபசுரேவம் ஸதேவாநாம் த்விதீயோத்வை பயம் பவதி', ம்ருத்யோஸ்ஸ ம்ருத்யுமாப்நோதி ய இஹ நாநேவ பச்யதி' என்றெல்லாம் பலவிடங்களில் ஜீவேச்வர

பேதத்தை நிந்தித்திருப்பதாலும் அந்த பேதத்தை உண்மை யெனக்கூறுவது அறியாமையேயாகும்.

அப்படியாயின், ஈச்வரன் ஜீவன் என்றும், ஜீவராசி களுள்ளே தேவர்கள், மனுஷ்யர்கள், பசுக்கள், பக்ஷிகள், புழுக் கள், பூச்சிகள் என்றெல்லாம் வேறுபாடு காணப்படுவது ஏனெனில் 'உபாதிநாக்ரியதே பேதரூப:' என்ற வசனப்படி சரீரமெனப்படும் அவ்வந்த உபாதிகளால் தான் வேறுபாடு காணப்படுகிறதே அன்றி உண்மையில் ஆத்மஸ்வரூபத்தில் எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லையென்பதே உண்மை யாகும்.

இது பற்றியேதான் பகவத்கீதையிலும் பகவான் 'அவி பக்தம் விபக்தேஷு விபக்தமிவச ஸ்திதம் | ஸமம் ஸர்வேஷு பூதேஷு திஷ்டந்தம் பரமேச்வரம் ‖ 'சுநிசைவ ச்வபாகேச பண்டிதா: ஸமதர்சிந: | ஸமம் பச்யந் ஹி ஸர்வத்ர ஸமவஸ் திதம் ஈச்வரம் | என்றெல்லாம் ஆங்காங்கே உபதேசித்திருக் கிருர்.

விஷ்ணு புராணத்திலும் 'விபேத ஜனகே அக்ஞானே நாச மாத்யந்திகம் கதே | ஆத்மநோ ப்ராஹ்மணோ பேதம் அஸந்தம் க: கரிஷ்யதி | ' என்று கூறப்பட்டுள்ளது.

'சாஸ்த்ர த்ருஷ்ட்யாதூபதேசோ வாமதேவவத்' என்றும் வ்யாஸ ஸூத்திரத்திலும் இது விஷயம் நன்கு விளக்கப்பட் டுள்ளது.

மேலும் 'த்வா ஸுபர்ணு' என்னும் இந்த மந்திரத்தின் கருத்தை விளக்கும் பைங்கிரஹஸ்ய பிராம்மணம் என்னும் கிரந்தத்தில் பிப்பலம் ஸ்வாத்வத்தி என்பது அந்தக்கரணத் தையும் அநச்நந் அன்ய: என்பது கேவல சைதன்ய ஸ்வரூப மான க்ஷேத்ரக்ஞனையுமே குறிக்கின்றது என்று விளக்கப்பட்டி ருப்பதால் இங்கு ஜீவேச்வர பேதமோ ஜீவப்ரம்ம பேதமோ உபதேசிக்கப்படவில்லையென்பது தெளிவு.

முண்டகோபநிஷத்திலேயே 'ஸமாநே வ்ருக்ஷேபுருஷோ நிமக்ந:' என்று அடுத்து வரும் மந்திரத்தின் கருத்தை ஆராயு மிடத்தும் இவ்விஷயம் தெளிவாகும்.

மேலும் ஸ யோ ஹ வை தத் பரமம் ப்ரும்ஹவேத ப்ரும் ஹைவ பவதி என்ற மந்திரமும் இந்த உபநிஷத்திலேயே முடிவில் காணப்படுகிறது. ப்ரும்ஹத்தை அறிபவன் ப்ரும்ஹ மாகவே ஆகிறுன் என்று தெளிவாக இதில் கூறப்பட்டுள்ளது. உண்மையில் ப்ருஹ்மமாக இல்லாதவன் ப்ருஹ்மமாவது இய லாது. ஆகவே உண்மையில் ப்ருஹ்மமானவனே அறியா மையால் தன்னை ப்ருஹமமல்ல என்று நினைத்த பின்னர் உப தேச மூலம் தானே உண்மையில் ப்ருஹ்மம் என்ற உண்மையை அறிய ப்ருஹ்மமாகிறுன் என்றே பொருள் கொள்ள வேண்டும். இப்படியிருக்க, ஜீவேச்வர பேதம் த்வாஸுபர்ணு மந்திரத்தில் கூறப்பட்டுள்ளது எனக்கொள் ளவே முடியாது. 'அஹம் ப்ரும்ஹாஸ்மி' என்ற ப்ருஹ தாரண்ய மஹாவாக்யமும் இக்கருத்தையே வலியுறுத்து கிறது.

இதையெல்லாம் நன்கு பராமர்சம் செய்ததின் பயனுகவே தான் ஆதிசங்கர பகவத்பாதாள் 'ஜீவோ ப்ரஹ்மைவ நாபர:' என்று உறுதியாகக் கூறியுள்ளார்கள். அந்த உண்மை யையே பின்பற்றி நாமும் அவர்வழி சென்று பரமச்ரேயஸ்ஸை அடைவோமாக.

சிவம்.

---


## சிவநாம மஹிமை

ஸ்ரீ தர வேங்கடேச ஐயாவாள் அருளிய ஆக்யாஷஷ்டியின் தமிழாக்கம். 40 பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-60, தபாலில் 0-75 காசு.

ஆங்கீரஸ S. வேங்கடேச சர்மா
5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு
மேலமாம்பலம், சென்னை-33

शिवमयम्

ओं श्रीगणपतये नमः

# ॥ श्रीगणनायकाष्टकम् ॥

# ஸ்ரீ கணநாயகாஷ்டகம்

தமிழ் உரை

ஆங்கீரஸ வே. சுப்பிரமணிய சர்மா

एकदन्तं महाकायं तप्तकाञ्चनसन्निभम् ।
लम्बोदरं विशालाक्षं वन्देऽहं गणनायकम् ॥ १ ॥

ஏகதந்தம் மஹாகாயம் தப்தகாஞ்சனஸந்நிபம் |
லம்போதரம் விசாலாக்ஷம் வந்தே(அ)ஹம் கணநாயகம் ॥ 1

1. ஒற்றைத் தந்தம் உடையவரும், பெரிய உடம்பை உடையவரும், உருக்கிவார்த்த தங்கத்தைப் போன்றவரும், பானை போன்ற வயிற்றை உடையவரும், அகலமான கண்களை உடையவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

मौञ्जीकृष्णाजिनधरं नागयज्ञोपवीतिनम् ।
बालेन्दुशकलं मौळौ वन्देऽहं गणनायकम् ॥ २ ॥

மௌஞ்ஜீக்ருஷ்ணாஜிநதரம் நாகயக்ஞோபவீதிநம் |
பாலேந்துசகலம் மௌளௌ வந்தே(அ)ஹம் கணநாயகம் ॥

2. தருப்பைப் புல்லும் மான்தோலும் தரிப்பவரும், பாம்பையே பூணூலாக உடையவரும், இளம்பிறைச் சந்திரனைத் தலையில் தரித்தவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

चित्ररत्नविचित्राङ्गं चित्रमालाविभूषितम् ।
कामरूपधरं देवं वन्देऽहं गणनायकम् ॥ ३ ॥

சித்ரரத்நவிசித்ராங்கம் சித்ரமாலாவிபூஷிதம் |
காமரூபதரம் தேவம் வந்தே (அ)ஹம் கணநாயகம் ॥ 3

3. அழகிய இரத்தினம் போன்ற விசித்திரமான அவயவங்களை உடையவரும், அழகிய மாலைகளால் அலங்கரிக்கப் பட்டவரும், தான் விரும்பிய ரூபத்தைத் தரிப்பவரும், தேவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

गजवक्त्रं सुरश्रेष्ठं कर्णचामरभूषितम् ।
पाशाङ्कुशधरं देवं वन्देऽहं गणनायकम् ॥ ४ ॥

கஜவக்த்ர ஸுரச்ரேஷ்டம் கர்ணசாமரபூஷிதம் |
பாசாங்குசதரம் தேவம் வந்தே(அ)ஹம் கணநாயகம் ॥ 4

4. யானைமுகத்தோடு கூடியவரும், தேவர்களுக்குள் சிறந்தவரும், சாமரம் போன்ற காதுகளை உடையவரும், பாசம் - அங்குசம் இவைகளைத் தரிப்பவரும், தேவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

मूषकोत्तममारुह्य देवासुरमहाहवे ।
योद्धुकामं महावीर्यं वन्देऽहं गणनायकम् ॥ ५ ॥

மூஷகோத்தமமாருஹ்ய தேவாஸுர மஹாஹவே |
யோத்துகாமம் மஹாவீர்யம் வந்தே(அ)ஹம் கணநாயகம் ‖ 5

5. உயர்ந்த மூஷிகவாஹனத்தின் மேல் இருப்பவரும், தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட பெரும் போரில் போரிட விருப்பம் உடையவரும், பெரும் வீரத்தை உடையவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

यक्ष-किन्नर-गन्धर्व-सिद्धविद्याधरैस्सदा ।
स्तूयमानं महाबाहुं वन्देहं गणनायकम् ॥ ६ ॥

யக்ஷ கின்னர கந்தர்வ ஸித்தவித்யாதரைஸ்ஸதா |
ஸ்தூயமானம் மஹாபாஹும் வந்தே (அ)ஹம் கணநாயகம் ‖

6. யக்ஷர், கின்னரர், கந்தர்வர், ஸித்தர், வித்யாதரர்களால் எப்பொழுதும் வணங்கப்படுபவரும், பெரிய கைகளை உடையவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

अम्बिकाहृदयानन्दं मातृभिः परिवेष्टितम् ।
भक्तप्रियं मदोन्मत्तं वन्देऽहं गणनायकम् ॥ ७ ॥

அம்பிகாஹ்ருதயானந்தம் மாத்ருபி: பரிவேஷ்டிதம் |
பக்தப்ரியம் மதோந்மத்தம் வந்தே(அ)ஹம் கணநாயகம் ॥ 7

7. அம்பிகையின் ஹ்ருதயத்தில் ஆனந்தத்தை உண்டாக்குபவரும், ஸப்த மாதாக்களால் சூழப்பட்டவரும், பக்தர்களுக்கு இஷ்டமானவரும், மதம்பிடித்த யானைக்கு ஒப்பானவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

सर्वविघ्नहरं देवं सर्वविघ्नविवर्जितम् ।
सर्वसिद्धिप्रदातारं वन्देहं गणनायकम् ।। ८ ।।

ஸர்வவிக்நஹரம் தேவம் ஸர்வவிக்னவிவர்ஜிதம் |
ஸர்வஸித்திப்ரதாதாரம் வந்தே(அ)ஹம் கணநாயகம் ॥ 8

8. எல்லாவிதமான இடையூறுகளையும் அழிக்கும் கடவுளானவரும் எல்லாவிதமான இடையூறுகளும் நீங்கினவரும், அனைத்து விதமான ஸித்திகளையும் கொடுப்பவருமான கணநாயகப் பெருமானை நான் வணங்குகிறேன்.

गणाष्टकमिदं पुण्यं यः पठेत्सततं नरः ।
सिद्ध्यन्ति सर्वकार्याणि विद्यावान्धनवान् भवेत् ।।

கணாஷ்டகமிதம் புண்யம் ய:படேத்ஸததம் நர: |
ஸித்யந்தி ஸர்வகார்யாணி வித்யவாந்தனவாந் பவேத் ॥ 9

9. புண்ணியமான இந்த கணநாயகாஷ்டத்தை எந்த மனிதன் எப்போதும் படிக்கிருனோ அவன் எல்லாக் காரியங்களிலும் வெற்றி பெறுவதுடன், படிப்பு, செல்வம் முதலியவைகளையும் அடைகிருன்.

।। इति गणनायकाष्टकं सम्पूर्णम् ।।

சிவம்

ஓம் ஸ்ரீசங்கர குரவே நம:

# ।। श्री शंकर पद्य पुष्पांजलिः ।।

# ஸ்ரீ சங்கர பத்ய புஷ்பாஞ்ஜலி

தமிழ் உரை

Dr. N. கங்காதரன், M. A., M. Litt., Ph.,D

नमामि शङ्कराचार्य गुरुपादसरोरुहम् ।
यस्यप्रसादान्मूढोऽपि सर्वज्ञोऽहं सदाऽभवम् ।।

நமாமி சங்கராசார்ய குருபாதஸரோருஹம் |
யஸ்ய ப்ரஸாதாங்மூடோ(அ)பி ஸர்வக்ஞோ(அ)ஹம் ஸதா (அ)பவம் ||

1. எந்த ஒருவருடைய அருளினுல் மந்த புத்தியுள்ள நான் எப்பொழுதும் அனைத்தும் அறிந்தவன் ஆனேனோ அந்த ஸ்ரீ சங்கர குருவின் பாதத் தாமரைகளை அடிபணிகின்றேன்.

— ஆனந்தகிரி, சங்கரவிஜயம்

आनन्दघनमद्वन्द्वं निर्विकारं निरञ्जनम् ।
भजेऽहं भगवत्पादं भजतामभयप्रदम् ॥

ஆனந்தகநமத்வந்த்வம் நிர்விகாரம் நிரஞ்ஜனம் |
பஜே(அ)ஹம் பகவத்பாதம் பஜதாமபயப்ரதம் ||

2. ஆனந்த வடிவானவரும், இரண்டுருவம் அற்றவரும், மாறுதலற்றவரும், மாசற்றவரும், அண்டினவர்க்கு அபயமளிப்பவருமான பகவத்பாதரை நான் வணங்குகிறேன்.

— மனீஷா பஞ்சகத்தின் உரை.

याऽनुभूतिः स्वयंज्योतिरादित्येशानविग्रहा ।
शङ्कराख्या च तं नौमि सुरेश्वरपदास्पदम् ॥

யா(அ)னுபூதி: ஸ்வயம்ஜ்யோதிராதித்யேசாநவிக்ரஹா |
சங்கராக்யா ச தம் நௌமி ஸுரேச்வரபதாஸ்பதம் ||

3. சங்கரர் என்றழைக்கப்படுவதும், ஸுரேச்வரருக்கு இறுதி அடைக்கலமுமான எந்த ஒரு ஒளிமயமான அனுபவம் கதிரவன் முதலான ஒளிவடிவங்களாகப் பரிணமித்ததோ அதை நான் வணங்குகின்றேன்.

— ந்ருஸிம்ஹப்ரக்ஞமுனி
— பிருகதாரண்யக பாஷ்ய வார்த்திகம்.

यदीयवाक्सूर्यरुचिप्रणाशितो
हृदन्धकारो नमतामशेषतः ।
महात्मनः शिष्यहिते सदा रतान्
नमामि तान् शङ्करपूज्यदेशिकान् ॥

யதீயவாக்ஸூர்யருசிப்ரணுசிதோ
ஹ்ருதந்தகாரோ நமதாமசேஷத: |
மஹாத்மன: சிஷ்யஹிதே ஸதா ரதாந்
நமாமி தான் சங்கரபூஜ்ய தேசிகாந் ||

4. எந்த ஒருவரின் கதிரவனின் கதிர் போன்ற அறிவுரைகளினுல் வணங்குபவரின் இதயத்தில் உள்ள (அறிவின்மை என்னும்) இருள் முழுவதும் களேயப்படுகிறதோ, எந்த ஒருவர் தன்னுடைய சீடர்களின் நலனில் எப்பொழுதும் அக்கறை உடையவரோ அந்த ஸ்ரீ சங்கரரை வணங்குகின்றேன்.

— கைவல்ய நவநீதம் — ஸம்ஸ்க்ருத மொழிபெயர்ப்பு.

(குறிப்பு: இப்பகுதியின் மூல சுலோகங்கள் Voice of Sankara, Vol 1, No 4 ல் இருந்து எடுக்கப்பட்டன.)

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

# ।। श्रीमहेशाष्टकम् ।।

# ஸ்ரீ மஹேசாஷ்டகம்

தமிழ் உரை :

Dr. N. கங்காதரன் M.A. M.Litt., Ph.D.

जटातस्तटालम्बिगङ्गाप्रवाहं

स्फुरन्नेत्रतेजस्कृतानङ्गदाहम् ।

चिताभस्मनिर्भूषिताशेषदेहं

पशूनां पतिं भव्यरूपं भजेऽहम् ।। १ ।।

ஜடாதஸ்தடாலம்பி கங்கா ப்ரவாஹம்
ஸ்புரன் நேத்ர தேஜஸ் க்ருதாநங்கதாஹம் |
சிதாபஸ்ம நிர்பூஷிதா சேஷதேஹம்
பசூனும் பதிம் பவ்யரூபம் பஜேஹம் ॥ 1

1. சடை முடியில் தாங்கப்பட்ட கங்கை ஆற்றின் வெள்ளத்தை உடையவரும், ஒளிரும் கண்ணின் தேஜஸ்ஸினுல் மன்மதனை எரித்தவரும், மயானச் சாம்பலினுல் தன் உடலனைத்தும் அலங்கரிக்கப்பட்டவரும், பசுக்களின் பதியானவரும், உலகின் வடிவானவருமான (சிவபிரானுரை) நான் வழிபடுகிறேன்.

हिमानीगिरिद्रोहिरूपं दधानं
भवानीमुखालोकने सावधानम् ।
दशग्रीवसम्पत्समूहे निदानं
पशूनां पतिं भव्यरूपं भजेऽहम् ॥ २ ॥

ஹிமாநீகிரித்ரோஹி ரூபம் ததாநம்
பவானீ முகாலோகநே ஸாவதானம் |
தசக்ரீவ ஸம்பத் ஸமூஹே நிதானம்
பசூனும் பதிம் பவ்யரூபம் பஜேஹம் ॥ 2

2. இமயமலைக்கு எதிரான உருவத்தைத் தாங்குபவரும், பார்வதியின் முகத்தைக் காண்பதில் தன் கவனத்தை உடையவரும், இராவணனின் செல்வச் செழிப்பிற்குக் காரணமானவரும், உலகின் வடிவானவருமான பசுக்களின் பதியை நான் வழிபடுகின்றேன்.

இமயமலையும் பனிமண்டிக் கிடப்பதால் வெண்மைநிறம். அது போல் சிவனும் சாம்பல் பூசி வெண்மையாகக் காணப்படுகின்றார்.

त्रिशूलत्रसत्त्रैपुरप्रौढशत्रुं
पिनाकप्रभानाशितानन्तमित्रम् ।
महेन्द्रादिवृन्दारकाज्ञातकृत्यं
पशूनां पतिं भव्यरूपं भजेऽहम् ।। ३ ।।

த்ரிசூல த்ரஸத் த்ரைபுரப்ரௌட சத்ரும்
பிநாக ப்ரபாநாசிதானந்த மித்ரம் |
மஹேந்த்ராதி வ்ருந்தாரகாஜ்ஞாத க்ருத்யம்
பசூனும் பதிம் பவ்யரூபம் பஜேஹம் ॥ 3

3. முப்புரத்தில் இறுமாப்புடனிருந்த பகைவர்களை தன் திரிசூலத்தினுல் அச்சுறுத்தியவரும், பினுகமென்னும் தன் வில்லின் ஒளியினுல் அனந்தனின் நண்பர்களை அழித்தவரும், மஹேந்திரர் முதலான தேவர்களின் கூட்டத்தினுல் தான் செய்ய வேண்டியதை நினைவுறுத்தப்பட்டவரும், உலகின் வடிவானவருமான பசுக்களின் பதியை நான் வழிபடுகின்றேன்.

भुजङ्गादिनाथोपवीताभिरामं
महाकालिकालिङ्गनोद्दामकामम् ।
लसन्नीलकण्ठद्युतिद्योतिताशं
पशूनां पतिं भव्यरूपं भजेऽहम् ।। ४ ।।

புஜங்காதி நாதோபவீதாபிராமம்
மஹாகாலிகாலிங்கனோத்தாமகாமம் |
லஸந்நீலகண்டத்யுதித்யோதிதாசம்
பசூனும் பதிம் பவ்யரூபம் பஜேஹம் ॥ 4

4. அரவங்களின் தலைவனை அழகிய உபவீதமாக (பூணுல் போன்று) அணிந்தவரும், மகாகாளியை அணைப்

பதினால் தன்னுடைய இச்சை தூண்டுவிக்கப்பட்டவரும், ஒளி ரும் நீலநிறக் கழுத்தின் ஒளியினால் நாற்றிசையும் ஒளிரச் செய்தவரும், உலகின் வடிவானவருமான பசுக்களின் பதியை நான் வழிபடுகின்றேன்.

द्विषद्दैत्यमुण्डावलीहृद्यहारं
कृपावारिसंभावितस्वीयभृत्यम् ।
मुदा स्वीकृतोद्दामकैरातकृत्यं
पशूनां पतिं भव्यरूपं भजेऽहम् ॥ ५ ॥

த்விஷத் தைத்ய முண்டாவலீ ஹ்ருத்யஹாரம்
க்ருபாவாரி ஸம்பாவிதஸ்வீய ப்ருத்யம் |
முதா ஸ்வீக்ருதோத்தாம கைராதக்ருத்யம்
பசூநாம் பதிம் பவ்யரூபம் பஜேஹம் ॥ 5

5. பகைவர்களான அரக்கர்களின் மண்டை ஓடுகளை மார்பில் மாலையாக அணிந்தவரும், தன்னுடைய அருள் பெருக்கினால் தன்னுடைய கணக் கூட்டங்களை கௌரவித்த வரும், வேடுவனின் தொழிலை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண் டவரும், உலகின் வடிவானவருமான பசுக்களின் பதியை நான் வழிபடுகின்றேன்.

कुठारं वरं दक्षहस्ते प्रशस्तं
कुरङ्गाभयं वामपाणौ स्पृशन्तम् ।
रतीनायकं चारुकान्त्या हसन्तं
पशूनां पतिं भव्यरूपं भजेऽहम् ॥ ६ ॥

குடாரம் வரம் தக்ஷஹஸ்தே ப்ரசஸ்தம்
குரங்காபயம் வாமபாணௌ ஸ்ப்ருசந்தம் |

ரதீநாயகம் சாருகாந்த்யா ஹஸந்தம்
பசூநாம் பதிம் பவ்யரூபம் பஜேஹம் ॥ 6

6. சிறந்த கோடலியை வலது கையில் (பிடித்து) அருள் பாலிப்பவரும், மானுக்கு அபயமளிப்பதற்காக இடது கையால் தொட்டுக் கொண்டிருப்பவரும், தன்னுடைய அழகிய தோற்றத்தினல் மன்மதனை எள்ளி நகையாடுபவரும், உலகின் வடிவானவருமான பசுக்களின் பதியை நான் வழிபடுகின்றேன்.

रवीन्द्वग्निनेत्रैर्जगद्योतयन्तं
मुहुर्नर्त्तनैः किन्नरीर्मोहयन्तम्
दृगन्तैस्सुरस्त्रीमनःक्षोभयन्तं
पशूनां पतिं भव्यरूपं भजेऽहम् ॥ ७ ॥

ரவீந்த்வாக்னி நேத்ரைர் ஜகத் த்யோதயந்தம்
முஹுர்நர்த்தநை:கிந்நரீர்மோஹயந்தம் ।
த்ருகந்தைஸ் ஸுரஸ்த்ரீ மந: க்ஷோபயந்தம்
பசூனும் பதிம் பவ்யரூபம் பஜேஹம் ॥ 7

7. சூரியன், சந்திரன், நெருப்பு முதலாகிய கண்களால் இவ்வுலகை பிரகாசிக்கச் செய்பவரும், மேலும் தன்னுடைய நடனங்களால் கின்னரஸ்த்ரீக்களை பரவசப்படுத்துபவரும், தேவமடந்தையரின் மனத்தை தன் கடைக்கண்ணுல் கலக்கமடையச் செய்பவரும், இவ்வுலகின் வடிவானவருமான பசுக்களின் பதியை நான் வணங்குகின்றேன்.

दुकूलं परित्यज्य कृत्तिं वसानं
विमानं विहायाश्रयन्तं स्मशानम् ।
उमासङ्गमे योगिनामप्यनूनं
पशूनां पतिं भव्यरूपं भजेऽहम् ॥ ८ ॥

துகூலம் பரித்யஜ்ய க்ருத்திம் வஸாநம்
விமானம் விஹாயாச்ரயந்தம் ஸ்மசாநம் |
உமாஸங்கமே யோகிநுமப்ய நூனம்
பசூனும் பதிம் பவ்யரூபம் பஜேஹம் ॥ 8

௮. பட்டாடையை விலக்கித் தோலாடையை அணிந்தவரும், வானைவிட்டு மயானத்தை நாடியவரும், உமையுடன் கூடி யோகிக்களுக்கும் குறைவற்று அருள்பாலிப்பவரும், இவ்வுலகின் வடிவானவருமான பசுக்களின் பதியை நான் வணங்குகின்றேன்.

कवीन्द्रप्रतापक्षितीशोक्तमेतन्-
महेशाष्टकं यः पठेद्येकचित्तः ।
करे तस्य सर्वा महासिद्धयः स्युः
शिवः प्रीतिमाप्नोति गुह्येश्वरीशः ।। ९ ।।

கவீந்த்ர ப்ரதாப க்ஷிதீசோக்தமேதத்
மஹேசாஷ்டகம் ய: படேத்யேகஸித்த: |
கரே தஸ்ய ஸர்வா மஹாசித்தய: ஸ்யு:
சிவ: ப்ரீதிமாப்நோதி குஹ்யேச்வரீச: ॥ 9

9. கவீந்திரர் பிரதாபமல்லர் இயற்றிய எட்டுசெய்யுட்களைக் கொண்ட இந்த பரமனின் துதியை எவரொருவர் ஒருமைப்பட்ட மனதுடன் படிக்கின்ருரோ அவரது கையில் ஸித்திகள் அனைத்தும் வந்தடைகின்றன. குஹ்யேச்வரியின் நாயகரான சிவனும் மனமகிழ்ச்சி அடைகின்ருர்.

इति नेपालभूपकवीन्द्रप्रतापमल्लविरचितं
महेशाष्टकं संपूर्णम् ।।

இதி நேபாள பூப கவீந்த்ர ப்ரதாபமல்ல விரசிதம்
மஹேசாஷ்டகம் ஸம்பூர்ணம்

நேபாள மன்னர் கவீந்த்ரர் ஸ்ரீ பிரதாபமல்லர் இயற்றிய
மஹேசாஷ்டகம் முற்றிற்று

உரையாசிரியர் குறிப்பு:

(இவ்வுலகில் உயிர்களனைத்தும் பசுக்கள் என்றும், அவைகளின் நாயகனான பரமன் பதி என்றும், சைவசித்தாந்தம் கூறுகிறது. வெகு அழகான பதங்களுடன் எட்டு பாக்களைக் கொண்ட இந்த துதியில் நேபாள மன்னர் வழிவந்த பிரதாப மல்லர் பசுக்களின் பதியான சிவனாரைப் போற்றி பணிகின்றார். இவை புஜங்க பிரயாதம் என்னும் விருத்தத்தில் அமைந்துள்ளன. இதன் இலக்கணம் ஒவ்வொரு அடியிலும் நான்கு 'ய – கணம்' என்னும் அமைப்பாகும். அதாவது ஒரு குறில் எழுத்தும் அடுத்து இரண்டு நெடில் எழுத்துக்களும் கொண்டது ஒரு ய-கணமாகும்.)

சிவம்

உ
சிவமயம்

# சிவநாமம் கேட்பாய் செல்வி!

## ஸ்ரீ ராமகதாரத்ன வே. தியாகராஜன்.

இறைவனைக் காண, உணவையடையப் பசியுடையவன் ஆவலாகக் காத்திருப்பது போல, அமுதயமான இறைவனைக் காணப் பசித்திருக்க வேண்டும். மனைவி, மக்கள், குடும்பம் செல்வம் யாவற்றையும் மறந்து அவனைக் காணத் தனித்திருக்க வேண்டும். எங்கே நினைப்பினும் அங்கே வந்து ஆட்கொள்ளும் தெய்வம் எப்போது வேண்டுமானாலும் நம்மிடம் வரலாம். எனவே மிகமிகச் சாக்கிரதையுடனிருந்து விழித்திருக்க வேண்டும். பசித்து, தனித்து, விழித்திருந்தால் இறைவனின் திருவடியான பதவி கிடைக்கும் என்பர் பெரியோர்.

மகளிரின் விளையாட்டை வைத்து இறைவன் மீது கவி பாடும் மரபு திருவாசகத்தில் காணப்படுவதே, திருப்பொன்னூசல், அம்மானை, திரு எம்பாவைகளாகும். திருவாதிரைக்குப் பத்து நாட்கள் முன்பு மகளிர் காலையில் எழுந்து சிவ பெருமானையும் அம்மையையும் பாடிக்கொண்டே சென்று நீராடி வீடு திரும்புதல் நற்பயனைத் தரும். இது திருவாதிரையுடன் பூர்த்தி பெறும்.

மாதரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை முன்னீரைந்தே ஆகிய தினங்கள்தம்மில்
மேதகு மனைகள் தோறும் அமைந்திருள் விடிவதான
போதிவர் தம்மில் கூடிப் புனல் தடம் ஆடல் செய்வார்.

என்பது வாதவூர்ப்புராணம். அரசனுக்குரிய நாள் நாட்டிற்கு நல்லநாள் என்பது போல சிவபெருமானுக்குரியநாள் உலகிற்கு நல்ல நாளாயிற்று. மார்கழி நீராடலைக் கூறும் திருவெம்பாவையில் சோதி, அண்ணுமலையான் என்ற சொற்கள் கையாளப்பட்டிருப்பதால் இது திருவண்ணுமலையில் பாடப்பெற்றது என்பர். ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதி எனத் தொடங்குகிருர். இறைவனைக் காணப்பசித்து, தனிமையில் உள்ள ஒரு பெண் சிறிது தளர்ந்து விழிப்புக் குறைவாக உள்ளவளை அறிவுறுத்துவதாக அமைகிறது முதற்பாடல். சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மூன்று விதமான சோதிகள் படைக்கப்பட்டவை. இறைவஞன சோதியைப் பின்பற்றித் தனக்கும் ஒளிபெறும் சோதி சூரியன். (தமேவ பாந்தமனுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி) ஸ்வயம் பிரகாசம் உள்ள அவனைப் பின்பற்றியே அனைத்தும் பிரகாசிக்கும் என்பது உபநிஷதம். மேலும் சூரியன் - சந்திரன் - அக்னி மூன்றிலும், சூரியன் நாளடைவில் ஒளி சிறிது சிறிதாகக் குன்றி மறைவான் என்பர் விஞ்ஞானிகள். சந்திரனுக்குச் சுயமான ஒளி கிடையாது. சூரியனின் பிரதிபிம்பமே சந்திரன் என்பர். நெருப்பு - எண்ணையில்லாவிட்டால் அணைந்து விடும், விறகு தீர்ந்தால் அணையும். எனவே இவை சோதிகளல்ல. மனிதனின் அறிவைச் சோதி என்பர். அது ஆணவமலத்தால் மறைக்கப்படும். எனவே சிறு சோதி (சிற்சோதி) என்பர். இறைவன் அறிவு (ஞானம்) மயமானவர். ஞானத்திற்கு ஆதியும் கிடையாது. முடிவும் கிடையாது. யாவற்றுக்கும் பெரியவன். கற்றவருக்குக் கனியாகவும் மற்றவருக்கு அறிய முடியாத மாணிக்கமலையாதலின் இறைவனை ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி எனக் குறிப்பிட்டார்.

இறைவஞன அரும்பெருஞ் சோதியை பலரும் (யாம்) பாடக் கேட்டாய். தூங்கினுல் கேளாது. சோம்பல் காரணமாக எழவில்லை. இசை நன்ருக இல்லாவிட்டாலும் பாடும் பொருளான இறைவனின் பெருமை என்பதற்காகவாவது எழ

வேண்டாமா? அழகான கண்களையுடைய பெண்ணே! தூங்கு கிருயா? இறைவனின் பெருமை கூறும் இனிய பாடலைக் கேட்டு உருகாத மனமும் செவியும் எதற்கு? The man that hath no music in himself, nor is not moved with concord of sounds, is fit for treasons stratagems and spoils—Shakespere.

நாம் சிறு தெய்வத்தைப் பாடவில்லை. வேதன் மால் பதவிகளையும் வேண்டினவர்களுக்கு அருளும் நாதனுன பெரிய தெய்வத்தையன்ரே பாடுகிரேம். மாதேவனுகிய அப்பெருமா னுடைய திருவடிகள் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் நீண்டு சென்று பகை, நோய் முதலானவற்றை ஒழித்துவிடும். தூக்கிய திருவடியான குஞ்சிதபாதம் ஒன்றே போதும்! ஆயினும் நமது பாவ புண்ணியங்களை மறைக்கக்கூடிய திரோதன சக்தியான ஊன்றிய திருவடியையும் குறித்தார் மலரடிகள் என்று.

இப்படிப் பட்ட திருவடிகளை வீதியிலே பாடுகிருர்கள். வாழ்த்திப் பாடியவர்கட்கு நாம சங்கீர்த்தனப் பெருமையை யுணர்ந்து செய்த பலன். வீதியில் பாடியமையால் வீதியி லுள்ள அனைவரும் கேட்டுப் பயன் அடைந்தனர். தூங்கும் இந்தப் பெண்ணுக்கும் கேட்டது. நல்ல சொல்லைக் கேட்ட உணர்ச்சி பெற்று விம்மி மெய்ம்மறந்து, உருகி உணர்ச்சியடை யாமல் மென்மை, வெண்மை, வாசனை, அழகு, குளிர்ச்சி ஆகியவற்றுடன் உள்ள படுக்கையில் கிடக்கிருளே. இத்தனை பெருமைகளும் ஒருங்கேயுள்ள இறைவன் திருவடிகளை நினைக்கவில்லையே என எழுப்பும் தோழி உருகுகிருள்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்

வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து
போதாரமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்!

முதல் எட்டுப் பாடல்களில் பெண்கள் ஒருவரை ஒருவர் எழுப்பின தன்மைகள் கூறப்பட்டன.

இரண்டாவது பாட்டில் தன்னை எழுப்பும் பெண்களை சீசி இவையும் சிலவோ? எனச் சலித்துக் கொள்ளுகிருள். திருப்பாவை முதற் பாடலிலே நாராயணனே நமக்கே பறை தருவான் என்று கூறுவதன் மூலம் நாராயணுய நம என்ற எட்டெழுத்தை குறித்தாள் என்பர். அது போல் சீசி என்பதில் இறைவனின் பெயர் வந்தது என்பர். நமசிவாய என்பது ஸ்தூல பஞ்சாக்ஷரம். சிவாயநம என்பது சூக்ஷ்ம பஞ்சாக்ஷரம். சிவயசிவ என்பது இரண்டு பக்கங்களிலும் இறைவன் நாமத்தையுடைய இருதலை மாணிக்கம் என்ற காரண பஞ்சாக்ஷரம். சிவ என்பது மகாகாரண பஞ்சாக்ஷரம். சி அதிகாரண மகாபஞ்சாக்ஷரம். சி-சிவ என்ற மந்திரங்களை ஜபிப்பதில்லை. நமசிவாய என்பது ஓம் சேர்ந்தால் மந்திரமாகும். ஏனையவை ஓம் சேர்ந்தாலும் சேராவிட்டாலும் மந்திரம் என்பர். சி என்பது நாயோட்டு மந்திரம் என்கிருர் திருமூலர்.

நாயோட்டு மந்திரம் நான்மறை வேதம்
நாயோட்டு மந்திரம் நாதனிருப்பிடம்
நாயோட்டு மந்திரம் நாதாந்தசோதி
நாயோட்டு மந்திரம் நாமறியோமே 3051

மற்ருெரு திருவெம்பாவைப் பாடலில் பழைய அடியார்களை "பத்துடையீர்" என விளிப்பதன் மூலம் சிவசின்னம் தரித்தல், குருபக்தி செய்தல், தோத்திரம் கூறுதல், ஜபம் செய்தல், சிவபூஜை, சிவபுண்ணியம் செய்தல், சிவபுராணம் கேட்டல், சிவாலயத்தை நிர்வகித்தல், சிவனடியாருக்குப்

பூஜை, சிவனடியாருக்கு அடிமையாயிருத்தல் ஆகிய பத்தும் நம் கடமை எனச்சுட்டிக் காட்டுகிருர். இவ்விதமாக சுமார் எட்டு பாடல்களில் பல பெண்களை எழுப்பி ஒன்பதாவது பாடலில், தாம் அடியார்களைக் கணவராக அடைய வேண்டும் (உன்னடியார் தாள் பணிவோம்; ஆங்கவர்க்கே பாங்காவோம் அன்னவரே எங்கணவர் ஆவார்) என்ற விருப்பத்தைத் தெரிவிக்கின்றனர். பத்தாவது பாட்டில் கோயில் தொண்டு செய்யும் பெண்களிடம் அடியாருக்கு அருகிலும் அல்லாதாருக்கு வெகு தூரத்திலும் உள்ள ஒருரும் ஒருருவமும் ஒரு பெயருமில்லாத பெருமானின் ஊர், பெயர், அவனது உற்ருர் யார் என எல்லா விபரங்களையும் கேட்கின்றனர். பதினோராவது பாட்டில் இறைவனருள் இடையூறில்லாமல் தமக்குக் கிட்ட வேண்டுமென்றும் பன்னிரண்டாவதில் இறைவனது அருளாகிய நீரில் தமக்கு ஆடும் பேறு கிடைத்ததனுல் ஏற்பட்ட இன்பத்தைக் கூறுகின்ருர்கள். பதிமூன்ருவது பாடலில் பொய்கையையே அம்மையப்பனுகக் காண்கின்றனர். நீராடும் மடுவில் கருநிறக் குவளையும் செந்நிற மலரும் வெண்மையான பறவைகளுமிருக்கும் ஓசை (அரவம்) உள்ளது. தங்களிடம் நீராடுபவர்களின் அழுக்கைப் போக்குகின்றது மடு எனவும், அம்மையப்பனுகத் தோன்றும் மடு ஒரு புறம் அம்மையின் கருநிறமும் மற்ருெருபுறம் இறைவனின் செந்நிறமும், இறைவனின் உடலில் பாம்பும், தங்களையடைவாரின் மலங்களான ஆணவம் கன்மம் மாயையான மும்மலங்களைக் கழுவுவதாலும் அர்த்தநாரீச்வரனுன-அம்மையப்பனுகக்கண்டு-இறைவனது அருள் வெள்ளமான தண்ணீரில் நீராடியதால் தமது பாவங்கள் நீங்கிய களிப்பைக் காட்டினர். நீராடும் இன்பம் பதினுன்காவது பாடலிலும் இறைவனது தியானத்தில் ஈடுபட்டுள்ள பெண்ணின் தன்மையை பதினைந்தாவது பாடலிலும் பாடுகிருர்கள். பதினுருவது பாட்டில் அம்மையின் அருள் போல் மழை வேண்டும் எனக்கேட்கிருர்கள். தானுக வழிபாடு செய்வதை ஆன்மார்த்தம் என்பர். பொதுவாக யாவருக்கும் நன்மை வேண்டுவதை பரார்த்தம் என்பர். உலக நன்மைக்காக மழை வேண்டுகிருர் இந்தப்

பாட்டில். பதினேழாவது பாடலில் இறைவன் நமது குற்றங் களை நீக்கி, ஆட்கொள்ளும் காலத்து ஏற்படும் இன்பம் கூறப் பெறுகிறது. பதினெட்டாம் பாடலில் காலை வேளையில் இறை வனைப் பாடிக்கொண்டே நீராடும் பெருமை கூறப்பெறுகிறது.

பத்தொன்பதாவது பாடல் சிவனடியாரின் உறவும், இறைவனுக்குச் சேவை செய்யும் பாக்கியமும், இறைவனைக் கண்ணாரக்காணும் பாக்கியமும் கிடைக்க வரம் தந்தால் காலத்தை வென்று வாழ்வோம் என்று கூறி யாவும் அளிக்கும் இறைவனது திருவடிகளின் பெருமையை இருபதாவது பாடலில் கூறி மகிழ்கின்றனர்.

இறைவனது திருவடிதான் உலகில் முதன்மையானது. அதற்குமுன் எதுவுமே கிடையாது. அத்தகைய ஆதியான பாதத்தை வணங்குகின்றனர். யாவும் மறைந்த காலத்தும் தாம் மறையாதிருந்து மீண்டும் உலகைப்படைக்கும் தன்மை யுடையவை இறைவனது திருவடிகள். அந்தமெனும் முடிவா யிருந்து தளிரிலிருந்து செடிவிருத்தியாவது போல் யாவற்றை யும் உண்டாக்கும் தன்மை கூறினர். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி எனத்தொடங்கிக் கடைசிப்பாடலி லும் ஆதியும் அந்தம் என இறைவனது திருவடிகளை வர்ணனை செய்யும் அழகுதான் என்னே! அடுத்த ஐந்து அடிகளில் உலகம் படைக்கப்பெறுகிறது எல்லா உயிருக்கும் தோற்றம், காத்தல் எல்லா உயிர்க்கும் போகமாம்பூங்கழல்கள் என்றும், அழித்தலை ஈறும் இணையடிகள் என்றும், திரோதனமென்னும் மறைப்புச் சக்தியை நான்முகனும் காணாத புண்டரிகம் என்றும் அனுக்கிரகத்தை (அருளல்) உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள் எனவுங்கூறி இத்திருவடிகளைப் போற்றிப் பாடும் வழக்கமான மார்கழி நீராடலையே போற்றி முடித்தார். திருவெம்பாவையின் கடைசிப்பாடல் பஞ்சாக்ஷரம் மாதிரிப் பலனளிக்கக் கூடியது. இதைப் பஞ்சப்பிரம்ம மந்திரப்பாடல் என்பர். இத்தகைய திருவடிகளையுடைய நடராஜப்பெருமானை

வணங்கி, மாணிக்கவாசகரின் திருவடிகளையும் வணங்கி உய்வோமாக.

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்


எமது தமிழ் பிரசுரங்கள்

ஸ்ரீ சங்கர விஜயம் ... ரூ 2-00
ஜபயோகம் ... ரூ 1-50
ஸ்ரீ தேவீ மந்த்ராக்ஷர மாலை ... ரூ 1-60

கணேஷ் அண்டு கம்பெனி
41, பாண்டி பஜார், மதராஸ்—17

உ
சிவமயம்

# பிரதோஷ விளக்கம்

மஹேந்திரவாடி உமாசங்கரன்

## பிரதோஷம் என்ருல் என்ன?

கடும் தோஷமுள்ள நேரத்தைப் பிரதோஷம் என்று சொல்லுவார்கள். இது வடமொழிச்சொல். குற்றங்கள் நிறைந்த காலம் என்று பொருள் கொள்ளலாம். ப்ர- சிறந்த; தோஷம்-குற்றம். பகலும் இரவும் சந்திக்கும் காலமே பிரதோஷ காலம்.

## பிரதோஷ காலம் ஏன் தோஷமான காலம்?

பகலவன் ஒளி வழங்கும் பகற்பொழுதே மனிதன் உழைக்க ஏற்பட்ட காலம். எல்லா உயிர்களும் சுறுசுறுப்பாக இயங்கும் காலம். கதிரவனின் ஒளி உலகில் இல்லாது போனுல் மந்தத்தன்மையும் சோம்பேறித்தனமும் ஏற்படு கிறது. இக்காரணம் பற்றியே பகற்பொழுது சிறந்ததாகக் கருதப்படுகிறது. இரவு நேரம் ஓய்வு எடுக்கவே ஏற்பட்டது. சுறுசுறுப்பாக இயங்குபவனுக்குக்கூட இரவு நேரங்களில் உழைக்கும் திறன் குறைவாகத்தான் இருக்கும். இரவு நேரங் களில் உணவைக்கூட குறைவாக உண்ணவேண்டும். மிருகங் கள், பறவைகள் கூட இரவில் இரைதேடச் செல்லுவதில்லே. ஆந்தை, பூனே போன்ற சில உயிர்கள் இதற்கு விதிவிலக்கு. அவைகளுக்குப் பகலில் கண்தெரியாது. சூரிய உதயத்திற்கு

முன்பு பறவைகள் ஏற்படுத்தும் ஒலி, உள்ளக்கிளர்ச்சியை ஏற்படுத்தும். பொழுது விடிவதை கோழிஅல்லவா நமக்குக் கூவி அறிவிக்கிறது? இரவில் பறவைகள் தங்களுடைய கூடுகளுக்குச் சென்று அடங்கும். இறைவனுடைய படைப்பில் உள்ள அதிசயங்களை நாம் ஆராய வேண்டும். நம் முன்னோர்கள் இயற்கையை ஒட்டியே வாழ்க்கை முறையை அமைத்தனர். ஆனால் இன்று நாம் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றி விட்டோம். இரவில் விளக்கு போட்டுவிட்டால் பகல் ஆகிவிடாது. இரவு, பகல் சூரிய சந்திரர்களால் ஏற்படுகிறது என்பதை நாம் கருத்தில் கொள்ளுவதில்லை. பகலுக்கும், இரவிற்கும் இவ்வளவு வேறுபாடுகள் இருக்கும்பொழுது பகலும் இல்லரமல், இரவும் இல்லாமல் இருக்கும், பொழுது சாயும் நேரத்தை 'இரண்டும் கெட்டான்' நேரம் என்று ஏன் சொல்லக்கூடாது? இந்தக் காலத்தை அரக்கர்கள், பூத, பிசாசுகள் உலாவும் நேரம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள்.

ஹிரண்யகசிபு பகலிலும், இரவிலும் மரணம் வேண்டாம் என்று சொன்னான். இந்த இரண்டும் இல்லாத சாயசந்தி நேரத்தில் திருமால் அவனைக் கொன்றார். விஞ்ஞான ரீதியாக இந்த நேரத்தில் நாம் உணவு உட்கொள்ளக்கூடாது. அப்படி மீறி உட்கொண்டால் அந்த உணவு ஜீரணிக்காது. இந்த நேரத்தில் உறங்கக் கூடாது. நோயுற்றவனாக இருந்தாலுங் கூட, படுக்கையில் படுக்காமல் எழுந்து இறைவனைத் தியானிக்க வேண்டும். உஷத்காலம், காலசந்தி, உச்சிக் காலம், சாயரக்ஷை, அர்த்த ஜாமம் என்று கோயில்களில் பூஜை முறைகள் ஏற்பட்டதுகூட காலத்தை ஒட்டியே. தோஷமான சாயங்கால நேரத்தில் இறை வழிபாடு செய்யவேண்டும் என்று பெரியோர்கள் ஏற்படுத்தினார்கள். அப்பொழுது தோஷம் விலகி நன்மைகள் ஏற்படுகின்றன. தோஷமான அந்தக் காலத்தில் பரமேசுவரன் பூதங்களை அடக்கித் திரு நடனம் ஆடுகிறார். சகல தேவர்களும் அவரது நடனத்தில் மயங்கி அவரது சந்நிதியில் அக்காலத்தில் கூடி துதிக்கின்றனர். ஆகையால் பிரதோஷ காலத்தில் சிவாலயங்களுக்கு

சென்று சிவதரிசனம் செய்ய வேண்டும் என்று பெரியோர் கூறுவர்.

## பிரதோஷங்கள் ஐந்து வகை

1. தினப்பிரதோஷம்: பிரதி தினமும் சூரியன் மறைவதற்கு முன் உள்ள $3\frac{3}{4}$ நாழிகையும் மறைந்த பிறகு உள்ள $3\frac{3}{4}$ நாழிகையும் சேர்ந்த காலமே தினப்பிரதோஷம். இக்காலம் பிற்பகல் $4\frac{1}{2}$ மணி முதல் 7 மணி வரையுள்ள காலமாகும்.

2. பக்ஷப்பிரதோஷம்: பிரதி மாதமும் சுக்லபக்ஷ (வளர் பிறை) சதுர்த்தசியன்று வருகிற பிரதோஷகாலமே பக்ஷப் பிரதோஷமாகும்.

3. மாதப்பிரதோஷம்: பிரதி மாதமும் கிருஷ்ணபக்ஷ (தேய்பிறை) திரயோதசியன்று வருகின்ற பிரதோஷ காலமே மாதப்பிரதோஷம்.

4. மஹாபிரதோஷம்: கிருஷ்ணபக்ஷ திரயோதசி சனிக் கிழமையில் வந்தால், அன்றைய பிரதோஷ காலம் மஹா பிரதோஷம் எனப்படும். அன்றைய தினம் மிகவும் சிறப்பான நாள். ஏன்? பரமன் நஞ்சுண்டது சனிக்கிழமையில். பிறகு அவர் நந்தி பகவானின் இரு கொம்புகளுக்கிடையே நடன மாடியது திரயோதசித் திருநாளில் ஆக, சனிக்கிழமையும், திரயோதசியும் ஈசனுக்கு உகந்த நாட்கள். இரண்டும் சேர்ந்து வந்தால் கேட்கவா வேண்டும்.

5. பிரளயபிரதோஷம்: இது உலகம் அழியும் போது ஏற்படுவது. அப்பொழுது ஸர்வ ஜீவராசிகளும் ஈசனிடம் அடங்கும். அதுவே பிரளயபிரதோஷம்.

## பிரதோஷம் எப்பொழுது ஏற்பட்டது?

ஒரு சமயம் தேவர்கள் எல்லோரும் சாகாமல் இருக்க என்ன வழி என்று ஆராய்ந்தனர். அமிர்தத்தை உண்டால்

சாகாமலிருக்கலாம் என்று கண்டனர். ஆனல் அமிர்தத்தைப் பெறுவது அவ்வளவு எளிதான செயலாக அவர்களுக்குத் தோன்றவில்லே. பாற்கடலேக் கடைந்தால் தான் அமிர்தத்தை எடுக்க முடியும். அசுரர்கள் தயவில்லாமல் பாற்கடலேக் கடைய முடியாது. எனவே தந்திரசாலியான திருமாலின் ஏற்பாட்டின்படி அசுரர்களும் உதவிக்கு வர இசைந்தனர். தங்களுக்கும் அமிர்தத்தில் பங்கு கிடைக்கும் என்று அவர்கள் நம்பினர். அதன்படி மேரு மலேயை மத்தாகவும், ஆயிரம் நாவுடைய வாசுகியைக் கயிருகவும் கொண்டு, வால்புறத்தை தேவர்களும், தலேப்புறத்தை அசுரர்களும் பிடித்துக் கடைய ஆரம்பித்தனர்.

கடைந்த வேகத்தால் வலி தாளாது வாசுகி விஷத்தைக் கக்கினுன். மேலும் பாற்கடலிலிருந்தும் விஷம் தோன்றியது. தேவர்களேயும் அசுரர்களேயும் அந்த ஆலகால விஷம் துரத் திற்று. அருகிலிருந்த மஹாவிஷ்ணுவின் உடல் விஷம் பட்டு கருநீலமாயிற்று. எல்லோரும் பயந்து போய் ஈசனிடம் முறை யிட கயிலே சென்றனர். அங்கே வெளியில் காவலிலிருந்த நந்தி பகவானிடம் அவர்கள் முறையிட்டனர். நந்திகேசுவர ரும் ஈசனிடம் அவர்களே அழைத்துச் சென்ருர். எல்லாம் வல்ல ஈசனிடம் கொடிய ஆலகால விஷத்தின் குணத்தைப்பற்றி அவர்கள் கூறி, தங்களேக் காத்தருளுமாறு வேண்டினர்.

ஈசனும் அங்கே பணிபுரிந்து கொண்டிருந்த சுந்தரரை அழைத்து, விஷத்தைக் கொண்டு வருமாறு கட்டளேயிட்டார். ஈசனின் வடிவமே சுந்தரர் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். இவரே சுந்தரமூர்த்தி நாயனுராகப் பிறகு அவ தரித்தார். ஈசனின் கட்டளேப்படி சுந்தரரும் கொடிய ஆல கால விஷத்தை, ஒரு துளியாக்கிக் கொண்டு வந்தார். எல் லோரும் அதிசயிக்க, முப்புரம் எரித்த அப்பெருமான் அதைக் கையில் வாங்கி உண்டார். உமையன்னேயின் வேண்டு கோளின்படி அதைக் கண்டத்தில் நிறுத்தி நீலகண்டர் ஆனுர். விஷம் கொண்டு வந்த சுந்தரருக்கு ஆலாலசுந்தரர் என்னும்

பெயர் ஏற்பட்டது. மற்றவர்கள் வேண்டாம் என்று ஒதுக்கி யதைத்தான் சிவன் ஏற்றுக்கொள்ளுவது வழக்கம். உலக க்ஷேமத்திற்காக இதைச் செய்தார். பின்னர் தேவர்களை நோக்கிப் ''பாற்கடலை இனி கடைந்தால் கிடைத்தற்கரிய அமிர்தம் கிடைக்கும்'' என்று கூறி அருள் வழங்கினார். பாற் கடலைக் தேவர்களும் கடைந்து அமிர்தம் பெற்று உண்டு மகிழ்ந்தனர். அங்கே அமிர்தம் மட்டுமா கிடைத்தது? கற்பக மரம் நினைத்ததைக் கொடுக்கும் சக்தி படைத்தது. அது கிடைத்தது. வற்றாத வளம் தரும் காமதேனு வந்தது. தெய் வீக மணம் தரும் பாரிஜாத மரம், அழகிற்கு இலக்கணம் வகுக்கும் ரம்பை ஊர்வசி போன்ற அழகுப் பெண்கள் எல்லாம் பாற்கடலில் கிடைத்தவையே.

கயிலையில் ஈசன் விஷத்தை உண்டபிறகு சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அன்று ஏகாதசி. மேலும் அன்று சனிக்கிழமை தேவர்கள் விரதம் இருந்தனர். மறுநாள் தேவர்கள் துவாதசியன்று விரதத்தை முடித்து உணவருந் தினர். மூன்றாம் நாள் திரயோதசி. அன்றுதான் ஈசன் திருநடனம் புரிந்த நாள். தங்களைக் காத்தருளிய ஈசனைத் துதித்து வணங்க எல்லோரும் திருக்கயிலை சென்றார்கள். அங்கே பரமனின் ஆனந்த தாண்டவத்தைக் கண்டு மெய் மறந்து உருகினார்கள். அன்று முதல் அந்தத்தினம் பிரதோஷம் என்று அழைக்கப்பட்டது.

பிரளயம் ஏற்பட்டால் எல்லாம் அழியும். ஆனால் அழியாத பரம்பொருள் சிவன் ஒன்றே. உலகில் உள்ள ஸர்வ சக்தி களும் சிவனிடம் ஒடுங்கும். ஆனால் தர்மத்துக்கு என்றுமே அழிவில்லை. அப்படி அழிவில்லாத தர்மம் பரமேசுவரனைத் தாங்கும் ரிஷபமாக உருவெடுத்திருக்கிறார். பிரதோஷத்தன்று நந்திகேசுவரருக்குத் தான் விசேஷ பூஜைகள் நடைபெறும். அருகம்புல் மாலை அணிவித்து அவரை வில்வத்தால் அருச் சிக்க வேண்டும் சிவப்பரிசியும் வெல்லமும் கலந்து நிவேதனம் செய்ய வேண்டும். நெய்விளக்கேற்ற வேண்டும்.

பிரதோஷ தினத்தன்று மட்டும் ஈசனை சோம சூத்ரபிரதட்சணம் என்ற முறையில் வணங்க வேண்டும். இம்முறையில் முதலில் ஈசனையும், நந்திகேசுவரரையும் தரிசனம் செய்து கொண்டு, அங்கிருந்து அப்பிரதட்சணமாக சண்டேசுவரர் வரை சென்று அவரைத்தரிசனஞ் செய்துகொண்டு, திரும்பி வந்து முன் போலவே ஈசனையும் நந்திதேவரையும் தரிசனம் செய்து கொண்டு, கருவறையை வலமாக வந்து கோமுகத்தைக் கடக்காமல், வந்த வழியே வந்து ஈசனையும் நந்திகேசுவரரையும் தரிசனம் செய்ய வேண்டும். இவ்வாறு மும்முறை செய்தால் அனேக அசுவமேதயாகம் செய்த புண்ணியம் கிடைக்குமென்று பெரியோர்கள் கூறுவார்கள்.

குறிப்பு : திரு. மஹேந்திரவாடி உமாசங்கரன் எழுதிய "சௌபாக்கியம் தரும் சிவஸ்துதியும் பிரதோஷ மகிமையும்" என்ற நூலிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது.

சிவம்

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

# பிரதோஷ மஹிமை

தர்மப்பிரவசனரத்னம், பிரம்மஸ்ரீ
மஞ்சக்குடி K. ராஜகோபால சாஸ்திரிகள்

சர்வே ச்ருணுத பத்ரம்வ: ராஜானேயேச தேஹின: |
சிவபூஜாம்ருதே நாந்யா கதிரஸ்தி சரீரிணும் ||

வாழப் பிறந்த நாம் என்றும் நல்வாழ்வு பெறவேண்டும். நல்வாழ்வு பெறுவதற்கு என்ன உபாயம் என்று யோஜிக்க வேண்டும். நமக்குத் தோன்ருததை பெரியோர்கள் மூலம் கேட்டு அறிய வேண்டும். மனித சமுதாயம் தரித்திரம் என்ற வறுமையும், நோயின் கொடுமையும், மரண பயமும், இடைபூருன சக்திகளின் தடைகளும் முன்னேற்றத்தைத் தடுக்கும் நிலையில் உள்ளன. இதற்கு உலகம் தோன்றியது முதல்

சரியான தடுப்பாகிற பரிகாரத்தை முனிவர்கள் கண்டறிந்தார்கள். சிவ பூஜையினுல் மட்டுமே இத்தகைய துன்பங்களை நீக்க முடியுமென்று ஒரே மனதாக முடிவு செய்தார்கள். இதைத் தவிர வேறு கதியில்லையென்றும் நிச்சயம் செய்தார்கள். அதிலும் தினந்தோறும் சுருக்கமாகச் செய்தாலும், 15 நாட்களுக்கு ஒரு முறை த்ரயோதசி திதியில் சாயங்காலத்தில் ''ப்ரதோஷம்'' என்கிற சமயத்தில் ஸ்ரீ பரமேச்வரனை பூஜிப்பது தரித்திரம், துக்கம், சோகம், பயம், கிலேசம் போன்ற எல்லா விதமான இடையூறுகளையும் போக்கும் என்று கண்டார்கள்.

ப்ரதோஷ சமயே தேவ: கைலாஸே ரஜதாலயே கரோதி |
ந்ருத்தம் ஆனந்தாத் பஸ்யந்த்யாம் சுர சம்ஸதி ||

இதன் பொருள் : ப்ரதோஷ சமயத்தில் மகா கைலாசத்தில் வெள்ளி மயமான ஆலயத்தில் ஸ்ரீ பரமேச்வரன் பரமானந்த நிலையில் இருந்து நர்த்தனம் செய்கிறுர். அதைக்கண்டு தேவர்கள் ஸகல துன்பங்களும் விலகியதாக நினைத்தார்கள். நாமும் இதைப் பின்பற்றி சிவபூஜை செய்து ஐச்வர்யம், ஆரோக்கியம், தைர்யம் எல்லாவற்றையும் பெறமுடியும். இதற்கு ஒரு சிறு இதிகாஸமானது ஸ்காந்த புராணத்தில் ப்ரம்மோத்தர காண்டத்தில் கூறப்படுகிறது.

விதர்ப்பம் என்ற நாட்டில் ஸத்யதரன் என்ற அரசனிருந்தான். அவன் ராஜ்ய பரிபாலனம் செய்தபோது அவனுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்த சமயம் சால்வ தேசத்திலிருந்து பகை அரசன் விதர்ப்ப நாட்டை முற்றுகையிட்டான். அப்போது ஸத்யதரன் எதிர்த்துப் போராடி வீரசுவர்க்கமடைந்தான். அவனது மனைவி தனது சிறு குழந்தையுடன் கிழக்கு திக்கை நோக்கிச் சென்றுள். அங்கு ஒரு நதிக்கரையில் ஒரு மரத்தடியில் தங்கினுள். அருகிலிருந்த நதியில் தண்ணீர் எடுக்க இறங்கியபோது ஒரு முதலை அவளை விழுங்கிவிட்டது. மரத்தடியிலிருந்த பச்சிளங்குழந்தை பசியால் அழுதது. அந்த சமயத்தில் அங்கு ஒரு கிராமத்தில் தனது கணவனை இழந்த

பிராமண ஸ்த்ரீ ஒருவயதான தனது குழந்தையுடன் அங்கு வந்தாள். மரத்தடியில் ஒரு குழந்தை அழுது கொண்டிருப்பதைக் கண்டாள். இந்தக் குழந்தை யாருடையதாக இருக்குமோ என்று சிந்தித்தாள். அப்போது அங்கு ஒரு முனிவர் வந்தார். அவர் அந்த ஸ்த்ரீயைப் பார்த்து, ''இந்தக் குழந்தை ஒரு அரசனின் குழந்தை. இவனை எடுத்துப்போய் வளர்த்து வந்தாயானுல் உனது துன்பமும் இவனது துன்பமும் விலகும்'' என்ருர். அப்படியே அந்தப் பெண்மணியும் குழந்தையை எடுத்துப்போய் தன் குழந்தையோடு வளர்த்து வந்தாள். ஒரு நாள் சாண்டில்யர் என்ற முனிவரிடம் இரண்டு குழந்தைகளையும் அழைத்துச் சென்ருள். அவரை வணங்கி தான் கண்டு எடுத்து வந்த குழந்தை யார் என்று கேட்டாள். அதற்கு அந்த முனிவர் இந்தக் குழந்தை ராஜபுத்ரன் என்றும் அவனது விருத்தாந்தத்தையும் கூறினுர். அப்படியானுல் இந்த ராஜாவீட்டு குழந்தை ஏன் இப்படிப்பட்ட தரித்திர நிலையை அடைந்தது என்று அவள் கேட்டாள். அதற்கு சாண்டில்ய முனிவர் கூறுகிருர் : —

இவனும் இவனது தந்தையும் முன் ஜென்மாவில் பாண்டிய நாட்டு அரசராக இருந்தார்கள். அப்போது ஒரு சமயம் இந்த ராஜன் பிரதோஷ சமயத்தில் பூஜை செய்து கொண்டிருந்தபோது பகைவர்கள் வந்தார்கள். இதையறிந்த ராஜா சிவபூஜையை பாதியில் விட்ட தோஷத்தால் இவனது தந்தையும் அகால மரணமடைந்தான். இவனும் இந்த ஜென்மாவில் தரித்திரனுனன். இவனது தாயும் முதலை வாயில் விழுந்தாள். எனவே ஸத்யம் பேசுகிறேன், பரலோகத்திற்கு ஒரு ஹிதம் பேசுகிறேன். இத்தனை வேத சாஸ்திர சாரம் சொல்கிறேன். உபநிஷத்தின் உள்ளம் பேசுகிறேன். குடும்பம் தரித்திரம், சோகம் இவைகளால் பீடிக்கப்பட்ட மனிதனுக்கு ஸாரமானது பரமேச்வரனுடைய பாதங்களை பூஜிப்பதேயாகும்.

பரமேச்வரனை மகாப்ரதோஷ சமயத்தில் எவர்கள் பூஜிக்கவில்லையோ, சிவபெருமானை எவர்கள் நமஸ்கரிக்கவில்லையோ,

அவர்கள் பல ஜன்மங்களில் தரித்ராதி ரோகங்களால் துன்பப் படுவார்கள். எவர்கள் ப்ரதோஷ சமயத்தில் பரமேச்வரனைப் பூஜிக்கிறார்களோ அவர்கள் தினந்தோறும் தனதான்யங்கள் விருத்தியடைந்து மனைவி மக்களுடன் பரம சௌக்கியத்துடன் அதிக சுகத்துடன் வாழ்வார்கள். கைலாச சிகரத்தில் இருக்கும் மணி மண்டபத்தில் நவரத்னமயமான பீடத்தில் ஜகன் மாதா வீற்றிருக்க பரமேச்வரன் நர்த்தனம் செய்ய, தேவர்கள் அந்த அற்புதமான ப்ரதோஷ சமயத்தில் பரமேச்வரனை பஜனை செய்து ஆனந்த பரவசமடைவார்கள்.

மஹாப்ரதோஷ சமயத்தில் சரஸ்வதி தேவி வீணை வாசிக்க, இந்திரன் குழல் ஊத, ப்ரம்மா தாளம் போட, லக்ஷ்மி தேவி கானம் செய்ய, விஷ்ணு மிருதங்கம் வாசிக்க, பல திக்குகளிலிருந்தும் தேவர்கள் ஓடோடி வந்து பரமேச்வரனை ஸேவிக்கிறார்கள். மஹாப்ரதோஷ சமயத்தில் கந்தவர்கள், யக்ஷர்கள், பதகர்கள், உரகர்கள், ஸித்தர்கள், சாத்யர்கள், வித்யாதரர்கள், அமரர்கள், அப்ஸரோகணங்கள், மற்றும் மூவுலகிலும் உள்ள மஹா ஜனங்கள் பூத கணங்கள் யாவரும் வந்து பரமேச்வரனை ஸேவிக்கிறார்கள். மஹாப்ரதோஷ காலத்தில் ப்ரம்மா முதலான வேறு எந்த தேவர்களையும் பூஜிக்கக் கூடாது. சிவபெருமான் ஒருவரையே பூஜிக்க வேண்டும். பரமேச்வரனைப் பூஜித்தாலே சகல தேவர்களும் சந்தோஷம் அடைவார்கள். அந்த ஸமயம் நாமும் பரமேச்வரனையே பூஜிக்க வேண்டும்.

சாண்டில்ய முனிவர் இங்ஙனம் கூறி அந்த பெண்ணிடத்தில் உனது பிள்ளையும் பூர்வ ஜென்மத்தில் தகாத தானங்களை வாங்குவதிலேயே ஆசை உடையவனாக இருந்தான். அந்த தோஷத்தால் இந்த ஜென்மாவில் தரித்திர நிலையையடைந்தான். தந்தையை இழந்தான். இதற்குப் பரிகாரம் சாஸ்திரங்களில் கூறப்படுகிறது. உன் மகன் முன் ஜென்மாவில் வாங்கிய பாப தானத்தால் பாபம் செய்தவனாகிவிட்டான். அதற்குப் பரிகாரம் ப்ரதோஷ சமயத்தில் பரமேச்வரனைப்

பூஜிப்பது ஒன்றே தான் என்றுர். அதைக் கேட்ட அந்தப் பெண்மணி பூஜை செய்ய வேண்டிய முறையை உபதேசம் செய்யுமாறு வேண்டினுள். முனிவரும் ப்ரதோஷ பூஜை முறையை உபதேசித்தார். கிருஷ்ணபக்ஷம், சுக்லபக்ஷம், திரயோசி தினத்தில் பகல் 27 நாழிகை வரை ஆகாரமில்லாம லிருந்து, 27-வது நாழிகையில் ஸ்நானம் செய்து, அழகிய மண்டபம் நிர்மாணித்து, நடுவில் பத்மம் எழுதி, பீடத்தை வைத்து ஆத்ம சுத்தி, பூதசுத்தி செய்து மூன்று பிராணுயாமம், மாத்ருகாந்யாஸம், வாக்தேவதா மந்த்ரம் ஜபம் செய்து இடது பார்ச்வத்தில் குருவையும் வலது பார்ச்வத்தில் கணபதியை யும் வணங்கி தர்மாதி பீடங்களை பூஜித்து பூஜை செய்ய ஆரம் பிக்க வேண்டும். பார்வதி ஸமேதராக த்யானம் செய்து ஆவாஹனம், ஆஸனம், பாத்யம், அர்க்யம், ஆசமனீயம், மதுபர்க்கம். ஸ்நானம், வஸ்திரம், யக்ஞோபவீதம், ஆபரணம், சந்தன குங்குமம் புஷ்பம் சார்த்தி, அங்கபூஜை அஷ்டோத்ர சதநாமபூஜா, ஸஹஸ்ரநாமபூஜை ஸ்ரீருத்ரபாராயணம் சமகபாராயணம் முதலியவைகள் செய்து தூப தீப நைவேத்யம், தாம்பூலம், கற்பூரம், பிரதக்ஷிணம், மந்த்ர புஷ்பம், சத்ரசாமராதி உபசாரம நமஸ்காரம், க்ஷீர அர்க்யம் செய்து கை கூப்பி வணங்கி பிரார்த்திக்க வேண்டும். ஹே பர மேச்வரா! தரித்திரம், துக்கம், சோகம், இவற்றை நீக்கி க்ஷேமமாக வாழ்ந்து பின்னர் இந்த பிறவியென்னும பெருங் கடலை நீந்தி முத்தி பெற அருள்வாய் எனப் பிரார்த்தனையைச் செய்து பூஜா பலத்தைப் பெற தானம் செய்து, ப்ரதோஷ ஸ்துதி என்ற ஸ்தோத்திரத்தைச் சொல்ல வேண்டும்.

இப்படி பிரதோஷ பூஜை செய்தால் இவ்விரு குழந்தை களும் க்ஷேமம் அடைவார்கள் என்றுர். அது முதல இரு குழந்தைகளும் சிரத்தையுடன் ப்ரதோஷ பூஜையை செய்து வந்தார்கள். 10வது நாள் இவ்விரு குழந்தைகளும் ஸ்னுனம் செய்ய ஆற்றங்கரைக்குச் சென்றனர். அங்கு ஒரு ஸ்வர்ணம் நிரம்பிய புதையல் கிடைத்தது. அதைக் கொண்டுவந்து அந்தத் தாயிடம் கொடுத்தார்கள். அவள் அதை இருவரு

மாகப் பங்கிட்டுக் கொள்ளச் சொன்னாள். ராஜகுமாரன் அதை விரும்பவில்லை. நான் ராஜகுமாரன், பிராமணனிடத்தில் இனாமாக எதுவும் பெறுவது தர்மல்ல. எனக்கு பரமேச்வரன் கொடுக்கட்டும் என்று சொல்லிவிட்டான். ஒரு நாள் ராஜகுமாரன் மட்டும் நடுக்காட்டுக்குள் சென்றான். அங்கு கந்தர்வ ஸ்திரீகள் விளையாடிக் கொண்டிருந்தனர். ராஜபுத்ரன் அங்கு போக விரும்பாமல் திரும்பினான். இதை கவனித்த ஒரு கந்தர்வப் பெண் மற்ற தோழிகளை விட்டு தனிமையில் அவனிடம் வந்து நீயார்? எங்கிருந்து வருகிறாய்? என்று கேட்டாள். ராஜகுமாரன் தான் விதர்ப்ப தேசத்து அரசகுமாரன் என்றும் தாய் தந்தை நாடு எல்லாம் இழந்து வந்தவன் என்றும் சொல்ல அவள் தானும் த்ரமிளன் என்கிற கந்தர்வனின் பெண் என்றும் பல கலைகளிலும் தேர்ந்தவள் ஸங்கீதத்தில் நிபுணை என்றும் சொல்லி சிவானுக்கிரகத்தால் உன்னைக் கணவனாக வரித்தேன், என் தந்தையுடன் வந்து உன்னை மாலையிடுவேன் என்று சொல்லிவிட்டு கந்தர்வ ராஜனிடம் சென்றாள். கந்தர்வ ராஜனும் மஹா கைலாசம் சென்று சிவபெருமானை தரிசனம் செய்து ஸேவித்த போது சிவபெருமான் விதர்ப்ப தேசாதிபதியான ராஜபுத்ரன் தர்மகுப்தன் என்பவனுக்கு உன் பெண்ணைக் கொடுத்து அவன் சத்ருவை வென்று விதர்ப்ப தேசத்தை பரிபாலனம் செய்ய உதவி செய் என்று கட்டளையிட்டார். கந்தர்வ மன்னனும் அந்தக் கட்டளையை ஏற்று கந்தர்வலோகம் வந்தான். தன் பெண்ணும் அவனிடம் ராஜகுமாரனின் விருத்தாந்தத்தைச் சொன்னாள். கந்தர்வனும் பெண்ணை அழைத்துக் கொண்டு அந்த பிராமண ஸ்திரீ இருக்குமிடம் வந்து அங்கு அந்த ராஜகுமாரனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தான். தனது சைன்யத்துடன் விதர்ப்ப தேசம் சென்று பகைவர்களை வென்று தர்மகுப்தனுக்கு ராஜ்யத்தைப் பெற்றுக் கொடுத்து அந்தப் பிராமண ஸ்திரீயைத் தாயாகவும், பிராமணப் பையனை மந்திரியாகவும் இருந்து பரிபாலனம் செய்ய உதவினான். ப்ரதோஷ பூஜை மகிமையினால் இந்த மூவருக்கும் க்ஷேமம் ஏற்பட்டது.

சிவம்

சிவமயம்

# பார் பூத்த வல்லி

புலவர் பனசை சுவாமிநாதன் எம். ஏ.,

## முகப்பு:-

கண்ணுதற் பெருங்கடவுள் கழகமோடமர்ந்து பண்ணுறப் பைந்தமிழைத் தெரிந்தாய்ந்த காலம் முதற்கொண்டு இற்றை நாள் வரை பற்பல கவிஞர்கள், 'மன்னு உலகத்து மன்னுதல் குறித்துத் தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனர்.' 'புகழ் கொண்டு மற்றவர் செய்த உடம்பு காரணமாக மலரவன் கூட வண்டமிழோர்க்கொவ்வான்' என்பர் ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள்.

## தெய்வக் கவிஞர்:-

கந்தன் அருளால் செந்தூரில் மூங்கை நிலை நீங்கிப் பழுத்த தமிழ்ப் புலமை பாலிக்கப் பெற்ற தெய்வக் கவிஞராகிய ஸ்ரீ குமரகுருபரர் இணையற்ற தீந்தமிழ்க் கவிஞராக, இலக்கியச்சுவையும் பக்திச் சுவையும் ததும்பிட பதினான்கு பிரபந்தங்களைத் தமிழ்கூறு நல்லுலகிற்குப் படைத்தளித்துள்ளார். அவைதம்முள், இனிமையும் அழகும் ததும்பிட இயற்றப் பெற்றது 'தில்லைச்சிவகாமியம்மை இரட்டை மணி மாலை'[1] என்னும் சிற்றிலக்கியமாகும். அத்தகு சிறப்புக்கள் வாய்ந்த தீந்தமிழ் நூலின் சொற் பொருட்சுவை நலங்களைக் காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வடிவம்:-

இலக்கியச் சதுரத்தின் நான்கு பக்கங்களாக பொருள், கற்பனை, உணர்ச்சி, வடிவம் எனும் நான்கைக் குறிப்பிடுவர். வடிவமாகிய யாப்பிற்கே முதன்மை தந்து அமைக்கப் பெறும் இலக்கியங்களுள் இரட்டை மணிமாலையும் ஒன்று. பவளமும் முத்தும் ஆகிய இருவேறு மணிகள் மிடைந்த மாலை போல வெண்பாவும் கட்டளைக் கலித்துறையும் அந்தாதியாக அமையப் பெறுவது. முதலும் ஈறும் மண்டலிக்க 20 செய்யுட்களால் இயல்வது.

## தொடுப்பு:- பூமியை 'பூ' என்பார்:-

நிலத்தைப் 'பூ' 'பூமி' 'உலகு' என்னும் பல சொற்களால் வழங்குவர். ஆயினும் பூமியைப் 'பூ' என்று வழங்கிட என்ன காரணம்? கேட்பவர் பலர்: விடையை வழங்குபவர் ஸ்ரீ குமரகுருபரரே. வல்லிக்கொடி போன்ற சிவகாமியம்மை செவ்வித் தேன் உண்டாக்கித் தந்தமையால் பூ வென்றனர். அம்மை பூத்ததனால்தான் பூமியைப் பூ வென்றனர் என்பர் அவர்.

"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே"[2]

என்னும் அபிராமி அந்தாதித் தொடர் இங்கு ஒப்பிடத் தக்கது.

.................. வாட்கணம்பால்
பொருவல்லி பூத்தலின் அன்றேஇப் பூமியைப்
பூவென்பதே(4)

## பதிலுக்குப் பதில்:-

ஒருவர் செய்த செய்கைக்கெதிராக நாம் அவர்க்குச் செய்து காட்டுதலைப் 'பதிலுக்குப்பதில்' என்பர். இறைவன் வேறொரு இடத்தில் செய்த செயலுக்குப் பதிலாக அம்மை

அவரிடத்தில் அதே செயலைச் செய்ததாகச் சுவாமிகள் குறிப்பிடுவர். இறைவன் பொன்மலையைக் குழைத்தான். அம்மையோ அவரது தோள்களாகிய எட்டு மலைகளையும் தனது மெல்லிய நகில்களால் குழைத்தாள் என்பர். வலிமை மிக்க, மலையையே குழைத்த தோள்களையும் அம்மையின் மெல்லிய நகில்கள் குழைத்தன என்பது அம்மையின் அன்புத் திறத்தைக் காட்டுகின்றது. அத்துடன், 'அன்போடு உருகி அகங்குழைவார்க்கன்றி' எய்தமுடியாத பொல்லாமணி இறைவன் என்பதும் போதரும்.

இக்கருத்தமைந்தவை,

.................... கனகவெற்பைச்
செங்கை கொண் டேகுழைத் தார்சிவ காமிநின்
சித்திரமென்
கொங்கை கொண் டேகுழைத் தாயவர் பொற்புயக்
குன்றெட்டுமே (6)

என்னும் அடிகளாகும்.

## வம்புக்கு வரமாட்டான்:-

அன்பர் எதிரில் வர இயமன் அஞ்சுவான். கூற்றுடன்று மேல்வரின் அன்பர்களாகிய எம்மிடம் அவன் எய்தப் போவது வெற்றியன்று: தோல்வியே. அவன் கொட்டப் போவது வெற்றி முரசன்று; நெய்தல் முரசே. சாப்பறையே ஆகும் என்பர் அடிகள். அதாவது அடியவர்பால் அணுகவும் அஞ்சுவான் இயமன். ஏனெனில் மார்க்கண்டனுக்குப் பாசம் வீசிப் பாதத்தால் உதைபட்டவன் அல்லவா அவன்? திருவள்ளுவரும், 'கூற்றம் குதித்தலும் கைகூடும்' - என்பார்.

.................நின் கோயிலும் பொன்
மன்றும் பணிந்தேம் வழிவந்தால் - பொன்தாழ்
வரைசென்ற திண்டோள் மறலிக்கு நெய்தல்
முரசன்றே வென்றி முரசு.

என்பவையே அடிகளின் வாக்குகளாம்.

### குறியிட்ட கண்கள்:-

அம்மையாரின் நகில்கள் அழுந்தி இறைவனின் மார்பில் குறியிட்டன. அது கண்டதும் அம்மையின் விழிகளுக்குக் கோபம் வந்துவிட்டதாம். நாம் மட்டும் என்ன குறைந்து விட்டோமா? நாமும் குறியிடுவோம் என்று கருதி அப்பனின் கழுத்தில் - கறைக் கண்டத்தை – குறியை உண்டு பண்ணின என்று நயமுறப் பாடுவார் சுவாமிகள்.

''கருந்தடங் கண்ணும் குறியிட்ட போலும் கறைக்
கண்டமே'' (8)

என்பது அப்பாடல் அடி.

### நஞ்சும் அமுதாம்:-

'நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு' என்பது ஆன்ரோர் வாக்கு. அத்தகு நாதன், நச்சரவக் கச்சணி கின்ருன்: விடம் உண்கிருன். இவை எதனுல்? பக்கத்தில் மயில் இருப்பதால் (சிவகாமசுந்தரி) அவை தீங்கு தரா என சிறப்புப் பொருள்பட பாடலை யாத்துள்ளார் முனிவர்.

நச்சரவக் கச்சணிந்தா ரென்று
மறை கொண்டு வாழ்த்துவதும் வம்பே......
.................அண்ணலுக்கென் னேயோர்
மயிலிருக்கத் தில்லை வனத்து. (9)

என்று பாடுவார்.

இக்கருத்தமைந்த பாடலை, 'தோகை பங்கான துணிவு'[3] என்று சுட்டிப் பிறிதோரிடத்தும் அமைப்பர் அடிகள்.

### ஏது இறுமாப்பு?:-

'கங்கை வார்சடையர்'- என்று இறைவனைத் திருமுறைகள் போற்றும். 'அம்மையே! கங்கையைத் தலையிலணிந்தார்

பெருமான் என்று நீ இரங்காதே! உன் ஊடல் தணிக்க இறைவன் உன் தாள் பணிவார். அப்போது கங்கையும் உன் அடியில் வீழ்ந்துதான் ஆக வேண்டும். அந்த நேரத்தில் என் தங்கையே! எழுந்திரு! என்று நீ கைப்பற்றித் தூக்கினால் அவ ளுடைய இறுமாப்பெல்லாம் பறந்தோடிவிடும்' என்று கற்பனை நயம் தோன்ற, கவினுற, யாத்துள்ளார்.

.............. கங்கையை நின்
பங்காளர் நின்னைப்பணியுமப் போதுகைப் பற்றி மற்றென்
தங்கா யெழுந்திரென் றுலவட் கேது தலையெடுப்பே? (14)

## பால்மொழி கன்னியே:-

சைவ சித்தாந்தச் செம்பொருள் அம்மையும் அப்பனும் உவந்து கூடி உலகேழும் அளித்த போதிலும் இறைவன் இளைஞனே: அம்மை கன்னிப் பெண்ணே! என்று பேசிடும். அதனை அடியொற்றிக் கவிஞரும், எல்லா உலகத்தையும் அளித்த அன்னை குமரியாகவே இருந்தாள் எனக் குறிப்பிட்டுக் காட்டுவர்.

................ கலைமறைகள்
நான்குமரி யார்க்கிந்த ஞாலமெலா மீன்றளித்தும்
தான்குமரி யாகியிருந் தாள். (15)

'பவன்பிரம சாரியாகும் பான்மொழி கன்னியாகும்' என்னும் சித்தியார் அடிகள் ஈண்டு ஒரு புடைவைத்துச் சிந்தித்தற் குரியன.

## ஏன் இந்த பாரபட்சம்?:-

சரிக்குச் சரி; பதிலுக்கு பதில்; என்பன வழக்கில் உள்ள சொற்கள். இறைவன் தன் திருமுடியில் உள்ள பிறைத் தழும் பிற்குப் பதிலாக அன்னை அவன் திருமேனியில் தன்னுடைய கரத்தில் அணிந்த வளைகளால் தழும்பினை உண்டாக்கி

விட்டாள். இதனுல் 'சரிக்குச் சரி' என்பது முடிந்து விட்டது. கணக்கும் நேராகி விட்டது. அப்படியிருக்கையில், அம்மையின் மார்பில் அப்பன் ஒன்றும் செய்யாது இருக்கையில் அம்மை அவர்தம் திருமார்பில் தன்கொங்கைத் தழும்பைச் செய்து 'தழுவக் குழைந்த ஈசர்' எனும் திருநாமமும் உண்டாகச் செய்தாள். இது எந்த வகையிலும் சரியில்லாததேயாகும். ஒரு பாற் கோடியதே - நடுவு நிலையின்மையே ஆகும் என்பர் குமரகுருபரர்.

..................முலைத்தழும் பங்கவர் மார்பினிலந்
நாளில் பதித்த தொன் றேஎம் பிராட்டி நடுவின்மையே (16)

## தாள் பாவித்தாள்:.

மாதொரு பாகனுரின் பங்குறையும் அம்மையின் திருவடித் தாமரைகளைப் பாவித்தவள் யார் தெரியுமா? அவள் வேறொருவன் மார்பில் உறைபவள். 'மாமறுத்த மலர் மார்பு' - எனத் தமிழ்நூல் போற்றிய திருமாலின் மார்பாகும். அதில் உறைபவளாகிய திருமகள், சிவகாமியம்மையின் திருவடிகளைப் பாவித்தாள் என்று பாடிடுவர் கவிஞர்.

''பாகத் திருந்தாள் பதுமத்தாள் பாவித்தாள்
ஆகத் திருந்தா னவள்'' (17)

## மலைவல்லி:-

அம்மையின் திருவடித் தாமரைகளைப் பொருந்தின அளவில் என் மலமாகிய புன்மை மிக்க கிழங்கைத் தோண்டி, ஐம்புலன்களாகிய களையினை வெட்டியெறிந்து, பின் அருள் பூத்திட அதன்பின் கனிந்ததே மலைவல்லி ஆகும் என உருவக நயம் அமைந்திட முற்றுருவகமாகப் பாடலை அமைத்துள்ளார். அப்பாடல்:—

..................புன் மலக்கிழங்கைக் கல்லிப் புலக்களை
கட்டருள் பூத்துட் கனிந்த 'மலைவல்லி' என்பதாகும். (18)

## பதவியும் வேண்டாம்:-

'உற்ருரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்
வேண்டேன்'

'பிறவாமை வேண்டும் மீண்டும் பிறக்கின் உனை
மறவாமை வேண்டும்'

என்று அருளாளர்கள் வேண்டிடுவர். ஆனல், கனகமார் கவின செய் மன்றில் அனக நாடகனின் மனைவியாகிய அம்மை யின் திருவடிப் பேறு கிடைத்தால், பிரமபதவியையும், ஏன் திருமால் பதவியையும் கூட விரும்ப மாட்டோம் எனச் செம்மாப்புடன் பாடுவர் கவிஞர்.

.................... நறைநாறும்
நாட்கமலஞ் சூடேன் நறுந்துழாய் தேடேன்நின்
தாட்கமலஞ் சூடத் தரின்' (14)

## என்னே பயன்?:-

'இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சொன்ருகாவழி இல் லறம் கடைபோகாது! என்பது உரையாசிரியர் வாக்கு. ஆனல் மனைவி அறச்சாலை அமைத்து அறஞ்செய்கிருள். கணவனே? தெருத்தெருவாய் ஓடிப் பிச்சை எடுக்கிருன். அவள் அறப்பயன்தான் என்னுகும்? என சிவபரத்துவ மேன்மை புலப்படப் பாடலொன்றைத் தந்துள்ளார் அடிகள். அது:-

தருவற நாணத் திருவறச் சாலை அமைத்தம்மைநீ
பொருவறு நல்லறம் பூண்டதென் ஞமெந்தை பொற்புலியூர்
மருவறு மத்த முடித்துக் கடைப்பலி தேர்ந்துவம்பே
தெருவற வோடித் திரிதரு மான்மற்றுன் சீர்த்திகொண்டே. 20

என்பதாகும்.

## அன்னம் பெற்றது ஆயிரம் அண்டம்:-

அதோ ஓர் அன்னம் அழகுடையதாக மேய்கின்றதே! அதன் சிறகுகளைப் பார்த்தால் வளையல் அணிந்த கைகள் போல உள்ளதே. அது மகவு வாய்த்துள்ளது போலும். ஆனால் ஓர் மகவன்று: இந்த உலகம் முழுமையுமே வயிற்றில் அடக்கியுள்ளதே. மகவை அணைத்து இரைதேடிக் கொடுத்து ஊட்டுகின்றதே! அது ஆடும் இடமோ பொன்னுலாகிய மன்றம் ஆகும். அதன் நிறமோ பச்சையாகும். இது சிவகாமியம்மை என்னும் அழகிய பச்சை அன்னமல்லவா என்று வியந்து போற்றுகின்றார் தெய்வக் கவிஞர்.

பச்சை, அன்னம் பயந்தன கொல்லாம்பல் லாயிர
அண்டமுமே. (10)

## தொகுப்பு:-

'உள்ளத் துள்ளது, இன்பம் உருவெடுப்பது, தெளிந்த தமிழில் அமைந்தது' எனக் கவிமணியும், 'உள்ளங் கனிந்த போதெல்லாம் உவந்துவந்து பாடுமே' என அருளாளர்களும் கூறியபடி, உள்ளம் கனிந்திட, தெய்வக் கவிஞர் திறம்படப் பாடியுள்ள தமிழ்க் கவிகள் சொல், பொருள், தொடைநயங் கள் செறிந்தன. எண்பான் சுவைகளும் இயைந்தன. கற் பார்க்குக் களிப்பூட்டுவன. அவற்றை அறிதொறும் அறி யாமை காணப்படும். அவற்றை நவில்தொறும் நயம் தோன் றும். நுண்மாண் நுழைபுலம் கொண்டு நுணுகி ஆராயின் பலவகை இலக்கிய நயங்கள் தெள்ளிதின் புலப்படும்.

## முடிப்பு:-

செந்தில் அழகன் தந்த கவி நலத்தால் கணக்கற்ற கற்பனைப் பொருளுடன், கவின்மிகு கருத்து நலம் செறிந்திடப் பாடப்பெற்ற இப்பனுவலைப் பற்றிய இக்கட்டுரை ஒரு குறுகிய

பார்வையே! பருந்தின் வீழ்வே; பன்முறை பயின்று பொருள் நுணுக்கங்களைக் காண வேண்டியது சமய அன்பர்களின் கடமையாகும்.

## அடிக்குறிப்புகள்:-

1. குமரகுருபர சுவாமிகள் பிரபந்தங்கள் - டாக்டர் உ. வே. சா. பதிப்பு - 1939 - பக்கம் 108.
2. அபிராமி அந்தாதி - பாடல் எண் : 13.
3. திருவாரூர் நான்மணி மாலை - (35)
4. திருக்குறள் - பரிமேலழகர் உரை. குறள் - 45.

சிவம்

---

## வில்வமஹிமை

வில்வ மரத்தில் லக்ஷ்மி வாசம் செய்கிருள். ஒரு வில்வ தளம் லக்ஷம் ஸ்வர்ணபுஷ்பத்துக்குச் சமமாகும். ஒரு வில்வ தளம் சிவனுக்கு அர்ப்பணம் செய்தால் ஸகல பாவங்களும் நீங்கும். மாதப் பிறப்பு, சோமவாரம், அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, அஷ்டமி, நவமிகளில் வில்வம் பறிக்கக் கூடாது. வில்வமரம் வளர்ப்பதால் உண்டாகும் நன்மைகள்.

1. அசுவமேதயாகம் செய்த பலன்,
2. ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலன்.
3. கங்காதி தீர்த்த ஸ்நான பலன்.
4. காசியாதி ராமேச்வரம் வரை சிவக்ஷேத்ர தரிசன பலன்.

உ

சிவமயம்

ஸ்ரீ மஹாதேவஜயம்

# சிவ மஹிமை

கே. ஸ்ரீநிவாச சர்மா

அமிர்தம் வேண்டித் தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைந்தனர். கற்பகமரம், ஐராவதம், உச்சைச்ரவஸ், லக்ஷ்மி கௌஸ்துபம், அப்ஸரஸ் முதலானோர் தோன்றினர். தேவர்கள் போட்டி போட்டுக் கொண்டு மேற்சொன்னவற்றில் ஒவ்வொன்றைப் பங்கு போட்டுக் கொண்டனர். இன்னும் கடைந்தாலே அமிர்தம் கிடைக்கும். கடைந்தனர்; ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக ஆலகால விஷம் தோன்றியது. அது மிகக் கொடியது எனத் தெரியும். அதைக் கண்டவுடன் ஓட்டம் பிடித்தனர் தேவரும் அசுரரும். உலகமே சுழன்றது. எங்கும் ஒரே இருள். ரிஷிகளும் சித்தர்களும் ஏனையோரும் என்ன செய்வதென அறியாமல் திகைத்து நின்றனர். உறங்காது உறங்கும் பாவனையில் உலகம் காக்கும் உத்தமனும்

.ம 84.85 : 6ச,

ஒன்றுமறியாமல் ஒதுங்கி நின்றூர். ஆனுல் எங்கிருந்தோ, 'அச்சம் வேண்டாம். இதோ வந்தேன்' என்ற அபய முழக்கம் கேட்டது. அடுத்த கணம், ஆலகால விஷத்தைச் சட்டென விழுங்கி 'நீலகண்டன்' என்ற பெயருடன் விளங்கினூர் மகா தேவன். அந்த முழு முதற் கடவுளை முக்கரண சுத்தியுடன் வாழ்த்தி வழிபட்டனர் தேவரும் அசுரரும். ஹிந்துக்களாகிய எல்லாரும் அவரை உள்ளன்புடன் உபாசித்து உயர்வடைவது மிகவும் எளிது.

## அந்தப் பரமேச்வரன் யார்?

அவன், இவன் எனப் பிரித்துக் கூற முடியாத, ஆனுல் 'உளது' என மட்டும் கூற முடிந்த, புறக்கரணங்களுக்கும் மனதுக்கும் அப்பால் 'ஆத்மா' ஒன்றிலேயே அறிய முடிந்த 'பிரம்மம்' என்பதே அந்தப் பரமேச்வரன். செய்பவன், செயல் போன்ற பிரிவுகள் இல்லாத, குற்றமற்ற எல்லாம் கடந்த சிவ தத்துவத்தை எவ்வாறு அறிவது? வழிபடுவது எவ்வாறு? 'மாயை என்பது ப்ரக்ருதி என்றூல் அந்த மாயையையுடைய வன் எவனே அவனே மகேச்வரன்' என்றும், 'உருவமற்றதும், எங்கும் நிறைந்ததும், நிலைத்த இரண்டற்ற உண்மையான தும் என எந்தப் பரம்பொருள் போற்றப்பட்டதோ அதுவே, சந்திரப் பிறையணிந்து, நீலகண்டனுக, முக்கண்ணனுகக் காட்சியளிக்கிறது' என்றும் பல படியாகச் சுருதிகளும் ஸ்மிருதிகளும் கூறுகின்றன. மேலும், தன்னகத்தே கொண்ட, இன்னதெனத் தெளியாத மாயை காரணமாகக் குணப்பிரிவு கொண்டதாய், அங்கம் அவ்யயம் முதலிய பல மங்களகுணங் களையுடையதாய், 'நீலகண்டன்', 'விரூபாக்ஷன்' என்ற சுத்த ஸத்துவமயமான பல வடிவு கொண்டு விளங்குவதாய், சிவன், பவன், ருத்திரன், மகேச்வரன், மகாதேவன் என்றும் மற்றும் பல பெயர்களால் தன் மஹிமையை விளக்குவதாய், எல்லா உலகையும் ஆக்கியும் காத்தும் அழித்தும் ராஜஸம் தாமஸம் முதலிய உபாதிகளால் அமைந்த தன் அம்ச ரூபங்களான பிரமன், விஷ்ணு, ருத்திரன் முதலியவர்களை அடக்கியாள் வதாய், எல்லாப் புவனங்களுக்கும் அப்பால் ஸோமபுரம் என்ற

பரமசிவபுரத்தில் எப்போதும் தோன்றி நிற்பதாய், எல்லா உயிரினங்களின் மனக்குகையில் வசிப்பதாய், எல்லாக் கர்மங்களின் பயனைத் தானே தர வல்லதாய், உமைத் துணையதாய் விளங்குவது அதே பரப்பிரம்மத்தின் ஸகுண உருவம் எனத் தெரிகிறது.

'வசி காந்தௌ' என்ற ஸம்ஸ்கிருத தாதுவிலிருந்து 'இச்சா சக்தியுடையவன்' என்ற பொருளில் 'வசி' என்பது எழுத்துத் திரிந்து 'சிவ' என்று ஆயிற்று. 'ஹிஸி' தாதுவிலிருந்து 'ஸிம்ஹ' சப்தமும், 'வசி' தாதுவிலிருந்து சிவ சப்தமும், எழுத்து இடம் மாறியதனால் உண்டானவை என இலக்கணக்காரரும் கூறுவர். மகாபாரதத்திலும், ''மனிதர்களுக்குச் சிவத்தை (மங்களத்தை) விரும்புவதனால் 'சிவன்' எனப் பட்டான்'' என்று கூறுகிறது.

'நிர்விசேஷ பரப்பிரம்மத்துக்கு உருவத்தைக் கூறுவது தகுமோ?' என்ற வினா எழுவது இயற்கை. பாஷ்யகாரர் கூறுகிறார்—''ஸ்யாத் பரமேச்வரஸ்யாபி இச்சாவசாத் மாயா மயம் ரூபம் ஸாதகாநுக்ரஹார்த்தம். அதாவது, தன்னை வழிபடும் பக்தர்களுக்காகப் பரமேச்வரனுக்கு மாயா மயமான உருவம் அவனிச்சைப் படி உண்டு'' என்பதாகும். பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற மும்மூர்த்திகளைக் கடந்து, துரீயப் பிரம்மம் உருவங்கொண்டது என்று சொல்வது சரியல்ல என்று கூறுவாரும் உள்ளனர். ஸூதஸம்ஹிதையைக் கண்ணுற்றால், மூர்த்தி உண்டு என்று விளங்குகிறது. அங்கு, உமையைப் பகுதி பாகமாகக் கொண்டு முக்கண்ணுடன், நீல கண்டனாகப் பேரானந்தப் பெருவெள்ளத்தில் தாண்டவம் புரிவதாக உள்ள மூர்த்தியே 'பராமூர்த்தி' என்று பேசப்பெறுகிறது. பராசர புராணத்திலும், ''ஸாக்ஷாத் பரம்பொருளுக்கு மூர்த்தி உண்டு. முற்றும் வேறுபட்டு ஸ்வதந்திரமானதும், பாவங்களை அகற்றுவதும், அம்பிகையைப் பகுதி உருவாகக் கொண்டதும், இளம்பிறையை அணிகலனாகக் கொண்டது மாக அந்த உருவம் விளங்குகிறது. அதையே பிரம்மா

விஷ்ணு மகேச்வரர்கள் எப்பொழுதும் தியானிக்கின்றனர்'' என்று கூறப்படுகிறது. ''ருத்திரனே உன் வலது முகத்தால் என்னைக் காத்தருள். ருத்ரயத்தே தக்ஷிணம் முகம் தேன மாம் பாஹி நித்யம்'' என்ற ச்வேதாச்வதரோபநிஷத்திலுள்ள மந்திரம் பரம்பொருளுக்கு உருவம் உண்டு என்பதற்குச் சான்ருகும். கூர்ம புராணத்தின் முதற் பகுதியில், பிரம்மா விஷ்ணு ருத்திரர்களைக் குறிப்பிட்டு, இவர்களுக்கும் அப்பால் மும்மூர்த்திகளிற் சிறந்ததாக முக்கண்களுடன் யோகிகளுக்குச் சாந்தியளிப்பதாக விளங்குகிறது மகேச்வரனின் மூர்த்தி எனக் கூறப்பட்டுள்ளது. சிவபுராணத்தில், ''ஆக்கல் காத்தல் அழித்தல் என்ற மூன்று செயல்களுக்கும் காரண பூதர்களான மும்மூர்த்திகளுக்கு மேல் சிவன் முக்கிய காரணம்'' என்றும், ஸ்காந்தத்தில், ''பரம்பொருளின் விபூதிகளான பிரம்மா விஷ்ணு ருத்திரர்களுக்கும் மேம்பட்டு எல்லாவற்றுக்கும் காரணமாகப் பரமேச்வரன் விளங்குகிருர்'' என்றும் கூறப் பட்டுள்ளது.

## தியானம் செய்யத் தகுந்தவனும் சிவபிரானே

அதர்வசிகையில், ''தியானம் என்பது என்ன? தியானம் செய்பவன் யார்? தியானம் செய்யத் தகுந்தது எது?'' என்ற கேள்விகளை முன்னிட்டு, தியானம், தியானிப்பவன் இவ் விரண்டையும் கூறி, தியானம் செய்யத் தகுந்ததைக் குறிப் பிடுங்கால், ''பிரம்மா முதலியோரைத் தோன்றச் செய்து, முதல் சிருஷ்டியை எண்ணிய 'ஈசானன்' எங்கிருந்தும் தோன்றவில்லை. மங்களங்களைச் செய்யும் சிவனே தியானிக்கத் தகுந்தவன்'' என்று முடித்துள்ளது. இந்தத் தொடரை வலி யுறுத்துவதுபோல் அமைகிறது சிவபுராணம்—

यस्मात् सर्वमिदं ब्रह्मविष्णुरुद्रेन्द्रपूर्वकम् ।
सह भूतेन्द्रियैस्सर्वैः प्रथमं सम्प्रसूयते ।।

யஸ்மாத் ஸர்வமிதம் ப்ரம்மவிஷ்ணுருத்ரேந்த்ரபூர்வகம் |
ஸஹ பூதேந்த்ரியைஸ் ஸர்வை: ப்ரதமம் ஸம்ப்ரஸூயதே ||

कारणानां च यो धाता ध्याता परमकारणम् ।
न सम्प्रसूयतेऽन्यस्मात् कुतश्चन कदाचन ॥

காரணாநாம் ச யோ தாதா த்யாதா பரமகாரணம் |
ந ஸம்ப்ரஸூயதேந்யஸ்மாத் குதச்சந கதாசந ||

स सर्वैश्वर्यसम्पूर्णो नाम्ना सर्वेश्वरः स्वयम् ।
सर्वैर्मुमुक्षुभिर्ध्येयः शम्भुराकाशमध्यगः ॥

ஸ ஸர்வைச்வர்யஸம்பூர்ணோ நாம்நா ஸர்வேச்வர: ஸ்வயம் |
ஸர்வைர் முமுக்ஷுபிர் த்யேய: சம்புராகாசமத்யக: ||

ஹரிவம்சத்தில் ஸ்ரீகிருஷ்ணன் சிவபிரானைத் துதிக்கும் பொழுது, ''நானும் பிரம்மாவும் கபிலரும் அனந்தனும் பிரம மாவின் புத்திரர்களும் ஏனையோரும் உன்னிடமிருந்தே தோன்றினேம். இவ்வாறு நீயே முதற்காரணம்; ஆகவே நீயே துதிக்கத் தகுந்தவன்'' என்று கூறுகிறார். இவ்வாறே, ''பிரம்ம, விஷ்ணு, அக்கினி, இந்திரன், சூரியன், ஜலம், பூமி முதலிய எல்லாத் தேவரும், அசுரரும் சுரேச்வரனாகிய உன் னிடமிருந்தே தோன்றினர்'' என்று பிரம்மாண்ட புராணமும் கூறுகின்றது.

கைவல்யோபநிஷத்திலும், தஹரவித்யா மூலம் சிவனை உபாசிக்க வேண்டும் என்று சொல்லும் இடத்தில், ''பிரம்மா விஷ்ணு ருத்திரன் அடங்கலாக எல்லா உலகும் சிவனின் லீலாவிபூதியாகும்'' என்று சொன்னதனால் பரமசிவனின் சிறப்பு விளங்கும்.

இதேபோல் இந்தச் சுருதியின் பொருள் வாமன புராணத் தின் ஆறாவது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது. முன்பு

ஆச்வலாயன மகரிஷி பிரம்மதேவனை அணுகி வினவ, அவருக்குப் பதில் கூறும் வாயிலாகச் சிவனைத் தியானிக்கும் முறைகளை முழுமையாக உரைத்து, முடிவில், "எல்லாவற்றுக்கும் ஸாக்ஷியாய், எல்லாம் கடந்ததாய், பூதங்களுக்கு முதற்காரணமாய் உள்ள பிரம்மத்தை இவ்வாறு தியானித்து, தன் ஆத்ம வித்தையால் பரமேச்வரனையடைகிருன் முனிவன்" என்கிருர். மேலும், "முழுமுதற் கடவுளாய், அம்பிகைதுணைவனாய், பிரம்மா விஷ்ணு ருத்திரன் என்ற உருவத்தில் பிரிவு கொண்டவன் போல் விளங்குபவனாய், எந்தச் சிவன் தியானம் செய்யத் தக்கவனுகக் கூறப்பட்டானே அவனே பிரம்மா, அவனே சிவன்" என்றும் "பிரத்யக் ஆத்மாவாக அவனை அறிந்தவன் மிருத்யுவை (மரணத்தை)க் கடக்கிருன். அப்படி அறிவதைத் தவிர முக்திக்கு வேறு வழியில்லை" என்றும் கூறி முடித்திருப்பதனால் முன் சொன்ன கைவல்யோபநிஷத்தின் பொருளே விளக்கப்பட்டது.

மேலும், வேதம் நான்கிலும் பரமேச்வரனைப் பற்றிய மந்திரங்கள் அநேகமாக 'நம:' என்ற நமஸ்காரச் சொல்லைக் கொண்டனவாகவே காண்கின்றன. அது மட்டுமன்று; இந்த நம: என்ற சொல் ஒரு முறையோ, நமோ நம: என்று இரண்டு முறையோ அல்லது பரமேச்வர நாமத்தின் முன்னும் பின்னுமாகவோ இணைக்கப்பட்டுப் பலபடியாகக் காண்கிறது. மற்றத் தேவதைகளைக் குறிக்கும் மந்திரப் பகுதிகளில் சிற்சில இடங்களில் நம: என்ற சொல் இணைக்கப்படினும், அவ்வளவாக இல்லை. ஆகவே மற்றத் தேவதைகளைவிடச் சிவனே பெருமை மிக்கவன் என்பதையே இது காட்டுகிறது. ஆனால் வேறு சில இடத்தில், உனக்கு நமஸ்காரம்; என்னைத் துன்புறுத்தாதே. நமஸ்தே அஸ்து, மா மா ஹிம்ஸீ: என்று காண்கிறது. அதனால் பயம் காரணமாகக்கூட நமஸ்காரம் செய்யப்படுகிறதெனத் தெரிகிறது. சிவனைப் பற்றிய மந்திரங்களிலும் பயம் காரணமாகத்தான் சிவன் நமஸ்கரிக்கப் பெறுகிருன் என்ருல் அதுவே அவன் பரப்பிரம்மம் என்பதற்குச் சான்று. கடவல்லியில் பரப்பிரம்மத்தின் இலக்கணமாக, "அது மிகப்

பயமானது; தூக்கிய வஜ்ராயுதம் போன்றது; அதை அறிந்த வர்கள் அமரர்களாகின்றனர். 'மஹத் பயம் வஜ்ரமுத்யதம் யஏதத் விதுரம்ருதாஸ்தே பவந்தி' என்றல்லவா பேசப்படு கிறது? மேலும் 'நமஸ்தே ஹரயே சோசிஷ' என்ற மந்திரத் தில், பயம் காரணமாகவே செய்யப்படும் நமஸ்காரத்தை, பிராம்மணத்தில், நமஸ்தே ஹரயே சோசிஷ இத்யாஹ, நமஸ்க்ருத்ய ஹி வஸீயாம்ஸமுபசரந்தி. நமஸ்கரித்துத்தான் பெரியோரைப் பெருமைப்படுத்துகின்றனர்'' என்று சொல்லப் படுவதனுல், நமஸ்கரிக்கப்படுவோர் எல்லோரும் பொதுவாகப் பெருமை கொண்டவரே என விளங்கும். பயத்துக்குக் காரணம் கூருமல், சில மந்திரங்கள் (ஸர்வோ வை ருத்ரஸ் தஸ்மை ருத்ராய நமோ அஸ்து என்பவை போன்றவை) ''எல்லாம் ருத்திரனே. அந்த ருத்திரனுக்கு நமஸ்காரம்'' என்று விவரிக்கின்றவே; அங்கு எல்லாமான பரமேச்வரனின் பெருமையைக் கருதியே நமஸ்காரம் செய்யப்படுகிறது என்ப தல்லாது வேறென்ன?

பேச்சுவாக்கில் முனிவர்களுக்குள், 'இது பரம், இது அல்ல' என்ற வாதம் உண்டாயிற்று. பரம்பொருள் இன்ன தென்று குறிப்பிட இயலாததனுல் தீர்வு காணவில்லை. இந்த நிலையில் பிரம்மாவை அணுகி, ''எங்களைப் பெரிய இருள் சூழ்ந்து கொண்டது. பல படியாக வாதித்தும் வருந்தியும், 'பரம்' எதுவென்று தெளிந்தோமில்லை'' என்று பரம்பொருளைப் பற்றிய வினவை எழுப்ப, பிரம்மா வெகு நேரம் தியானித்த பின், ஆனந்தம் மேலிடக் கைகூப்பிய வண்ணம் கூறுவார். ''எவனிடமிருந்து பிரம்மா விஷ்ணு ருத்திரன் இந்திரன் முதலி யவரும், ஏனைய பூதங்களும் தோன்றினரோ அவனே சிவன் என்று அவர் பதில் கூறியதனுல் சிவனே பரதேவதை என நிச்சயமாயிற்று'' என்று சிவபுராணம் கூறுகிறது.

பத்ம புராணத்தைச் சிறிது கவனிப்போம். ரிஷிகள் பலரும் கூடி ஸூத பௌராணிரைப் பார்த்து, பல சாஸ்திரக் களையும் புராணங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் நீர் கூறக்

கேட்டோம். ஆனால் எங்களை மயக்கமுறச் செய்யும் ஒரு சந்தேகம் உள்ளது. சிறந்த தேவன் யார்? அவனை எவ்வாறு பூஜிப்பது? அப்படிப் பூஜிப்பதனால் என்ன பயன்? இதைச் சொல்லியருள வேண்டும்'' என்றனர். ஸூதர் முன்பு ஸனத்குமாரருக்கும் விஷ்ணுவுக்கும் நடந்த பேச்சைக் குறிப்பிட்டு, 'எம்முறையில் கேள்விப்பட்டிருப்பினும் வேதங்கள் வேதாங்கங்கள் புராணங்கள் யாவற்றிலும் சிவன் ஒருவரே பெரியவராகப் போற்றப்படுகிறார்' என்றும், 'ஸாங்கியம், யோகம், பாஞ்சராத்திரம், வேதங்கள், பசுபதிமதம் இவ்வாறு ஐந்து அறிவு நிலைகள் என்றாலும், அறிய வேண்டியவன் மகேச்வரன் ஒருவனே' என்றும் விஷ்ணு கூறியிருப்பதை ஞாபகப்படுத்தும் வாயிலாகச் சிவன் பெருமை மிக்கவன் என்பதைத் தெளிவுபடுத்துகிறார்.

மகாபாரதம் பல இடங்களில் சிவ வழிபாட்டைக் குறிப்பிடுகிறது. முக்கியமாகச் சாந்தி பர்வத்தில் தர்மபுத்திரர் பீஷ்மரைப் பார்த்து, ''பிதாமஹரே, உலகத்தில் பிராணி வர்க்கம் பல இன்னல்களினால் தவிக்கும் பொழுது அவற்றைக் கடக்கும் வழியைக் கூற வேண்டும்'' என்று கேட்டார். அப்பொழுது பீஷ்மர், ''விஷ்ணு இந்திரன் பிரம்மா சம்பு முதலானோர் எந்த மகேச்வரனைப் பல தோத்திரங்களினால் வழிபடுகின்றனரோ, அவரை அர்ச்சித்தால் இடுக்கண்களைக் கடக்கலாம்'' என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும். ஆநுசாஸனிக பர்வத்திலும் மோக்ஷ தர்மத்திலும் சிவபூஜையை வெகுவாக விவரிக்கக் காண்கிறோம். ராமாயணத்திலும் ஸேது பந்தன காலத்தில் ஸ்ரீராமர் சிவபூஜை செய்து வரப்பிரசாதத்தைப் பெற்றார் என்பதை, அவரே ராவணனை ஸம்ஹரித்த பிறகு சீதையுடன் அயோத்திக்குத் திரும்பிய பொழுது அந்த இடத்தைக் காட்டி சீதையிடம், 'இங்கே தான் முன்பு மகாதேவன் எனக்கு அருள் செய்தார்' என்கிறார். சிவகீதையிலும் ஸ்ரீராமர் அகஸ்திய முனிவரின் உபதேசப்படி நான்கு மாதங்கள் சிவபூஜை செய்து அதன் பயனாகச் சிவனின் அருளால் பாசுபதாஸ்திரத்தைப் பெற்றார் என்று முதல் ஐந்து அத்தியாயங்களில் காண்கிறோம்.

எது எப்படி இருப்பினும் 'சிவன் தமோகுணம் படைத்தவ னல்லவா? இது குறையாயிற்றே' எனலாம். அப்படியன்று. இடையருமல் துன்பமயமான இந்த உலக வாழ்க்கையில் உழன்று தவிக்கும் ஜீவர்களுக்குச் சற்றேனும் நீக்கமற நிறைந்த ஆனந்தம் கிடைக்கட்டுமே என்ற நல்லெண்ணம் காரணமாக ஸம்ஹாரத்தைக் கருதித் தமோ குணத்தை மேற் கொண்டது அவனுடைய கருணையை அல்லவா காட்டுகிறது? தீர்க்க முடியாத இரணத்தால் துன்புறும் ஒருவனுக்கு அவ் விரணத்தை ஆற்ற வேண்டி ஆயுதம் தாங்கும் ஒரு நல்ல வைத்தியனைப் போலச் சிவன் தமோ குணத்தில் செயற்படு கிருன். இது அவன் கருணையே அல்லாது வேறல்ல.

மனித வர்க்கத்துக்கு, முக்கியமாக இருபிறவி பெற்ற த்விஜர்களுக்கு, காயத்திரி மிகவும் முக்கியமானது. 'பாடுகிற வனைக் காக்கிறது' என்ற பொருளுக்கேற்ப அமைந்தது காயத்திரி. வேதங்களில் கூறப்பட்ட கர்மாக்களை விட்டொழித் தவன் கூட, காயத்திரியை உபாசித்தால் எவ்விதப் பயமுமின்றி வாழலாம் என்கிறது ஸ்மிருதி. காயத்திரியின் பொருளான தேவதை ஸ்ரீஸதாசிவனே. முக்கியமாக அங்குள்ள 'பர்க:' என்ற சொல் இதை வலியுறுத்தும். 'ஹர: ஸ்மரஹரோ பர்க:' என்பது அமரஸிம்ஹன் வாக்கியம். ஆகவே காயத்திரியின் மூலமாகச் சிவனுக்கு வணக்கம் செய்யாதவன் வேறு எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும் அது பயனற்றது. ஆடையே கட்டிக் கொள்ளாதவனை வெகுவாக அலங்கரிப்பது போன்றது அது.

ஒரு பிரயோஜனத்தைக் கருதிச் சேவகன் பிரபுவைச் சேவிப்பதானுல் பொறுமையுள்ளவனையே சேவிக்க வேண்டும். ஏனெனில், அண்டியவர்கள் அறிவின்மையாலோ அஜாக் கிரதையாலோ தவறு செய்வது இயற்கையாகையால், பிரபு பொறுமையில்லாதவனுகில் இதுவரை செய்த சேவை யெல்லாம் பயனற்றுப் போகும் அல்லவா? தாராளத் தன்மை யுடையவனைவிட அன்பாகப் பழகுபவனும், அவனைவிட அறி

வாளியும், அறிவாளியைவிடப் பொறுமை மிக்கவனுமே சேவிக்கத் தக்கவன் என நீதியும் உண்டு. இப்படிப் பார்த் தால் சிவன் பொறுமை மிக்கவன் என்பதை, 'நமஸ்ஸஹமா நாய, அஷாடாய ஸஹமாநாய மீடுஷே' என்று வேத வாக்கியங்கள் கூறும்.

இவ்வாறு, பொறுமை மிக்கவன், அன்பின் வழிப் பட்டவன், விரைந்து மகிழ்ந்து அளவிலா ஆனந்தத்தை அளிக்க வல்லவன் என்பதனுலும், வேதங்களும் உபநிஷத்துக் களும் புராண இதிஹாஸங்களும் வெகுவாகப் போற்றிப் புகழ் வதனுலும் சிவபெருமானே உபாசனைக்கு உரியவன். ஸம்சாரம் என்ற பெரிய நோயைத் தீர்க்கும் வைத்தியனும் சிவனைச் சரணடைந்தோ, அவன் நாமங்களை ஜபம் செய்தோ, அவன் அருளைப் பெற்று மோக்ஷத்தைப் பெற வேண்டும். அதற் கிடையில் ஞானம் வேண்டும். 'ஈச்வராத் ஜ்ஞாநமந்விச்சேத்' என்று, சிவனிடமிருந்துதான் ஞானம் கிடைக்குமாதலால், ஞானத்தைப் பெறப் பரமேச்வரனைச் சேவிப்போமாக.

மேகதூதத்தில், "கைலாசமலைப் பாறைகளில் அமைந்த மகேசனின் காலடிகளைக் கண்டாலே போதும்; பாவங்கள் நீங்கி நீங்கா நிலையைப் பெறலாம்" என்று மேகத்தை நோக்கிக் கூறும் யக்ஷனை நினைத்தால் ஆச்சரியமாக இருக் கிறது.

கடைசியாக, "சிவமயமாகப் பரம்பொருள் விளங்கத் தகுதிபெற்ற சிவமயமான மனம் எல்லாருக்கும் உண்டா கட்டும். அந்த மனத்தில் தோன்றிய எண்ணங்களெல்லாம் சிவமயமாகவேதான் இருக்கும். அப்படி அந்த எண்ணங் களும் சிவமயமாக அமையட்டும்" என்ற பழம்பெரும் சிவ பக்தரான அபினவகுப்தரின் வார்த்தைகளோடு விரமிக் கிறோம்.

[நன்றி; காமகோடி ப்ரதீபம், மலர் 11, இதழ் 6, 17-7-1970]

சிவம்

உ

श्रीशिवाभ्यां नमः

# ॥ सूतगीतिः ॥

# ஸூதகீதி:

உரை விளக்கம் :

தர்மக்ஞ, வித்யாவாசஸ்பதி

பிரம்மஸ்ரீ மாயூரம் ராமநாத தீக்ஷிதர்

ऐश्वरं परमानन्दं अनन्तं सत्यचिद्घनम् ।
आत्मत्वेनैव पश्यन्तं निस्तरङ्गसमुद्रवत् ॥ १ ॥

निर्विकल्पं सुसंपूर्णं सुप्रसन्नं शुचिस्मितम् ।
भासयन्तं जगद्भासा भानुमन्तमिवापरम् ॥ २ ॥

प्रणम्य मुनयः सूतं दण्डवत् पृथिवीतले ।
ஸ்ரீ தத்வாதீத ஸ்ரீ சிதம்பர நடேச ஸஹஸ்ரநாம மாலிகா என்கிற மஹாமந்த்ரம்.

உமாமஹேச்வர ஸம்பாஷணே ரூபமான
ப்ரத்யக்ஷஸித்தி நல்கும் ஆகாசபைரவ கல்பத்தில்
25 சிவமூர்த்தப்ரகரணமாகிய 59வது அத்தியாயமாக
விளங்கும்

## தத்வாதீத ஸ்ரீசிதம்பர நடேசஸஹஸ்ரநாம ஸ்தோத்ர உபதேசம்

# ஸ்ரீசிதம்பர நடேசஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் பூர்வபீடிகா

ஓம்

கைலாஸசிகரே ரம்யே ரத்னஸிம்ஹாஸனே ஸ்திதம்
சங்கரம் கருணாமூர்த்திம் ப்ரணம்ய பரயா முதா 1

விநயா வநதாபூத்வா பப்ரச்ச பரமேச்வரீ
பகவந் பவ ஸர்வக்ஞ பவதாப ஹராவ்யய 2

த்வத்த:ச்ருதம் மஹாதேவ ஸர்வம் நாமஸஹஸ்ரகம்
நடேசஸ்ய து நாமானி ந ச்ருதானி மயா ப்ரபோ 3

அஸக்ருத் ப்ரார்த்திதோऽபித்வம் ந தத் கதிதவாநஸி
இதானீம் க்ருபயா சம்போ வத வாஞ்சாऽபிபூர்த்தயே 4

ஸ்ரீ சிவ:

ஸாது ஸாது மஹாதேவி ப்ருஷ்டம் ஸர்வஜகத்திதம்
புரா நாராயண: ஸ்ரீமாந் லோகரக்ஷா பராயண: 5

க்ஷீராப்தௌ ஸுசிரம் காலம் ஸாம்பமூர்த்தி தரம் சிவம்
மாமேகாக்ரேண சித்தேன த்யாயந் ந்யவஸதச்யுத: 6

தபஸா தஸ்ய ஸந்துஷ்ட: ப்ரஸன்னேஹம் க்ருபாவசாத்
த்யானுத்ஸமுத்திதோ விஷ்ணுர்லக்ஷ்ம்யா மாம் பர்யபூஜயத் 7

துஷ்டாவ விவிதை: ஸ்தோத்ரைர் வேதவேதாந்த ஸம்மிதை:
வரம் வரய ஹே வத்ஸ யதிஷ்டம் மனஸி ஸ்திதம் 8

தத்தே தாஸ்யாமி நசிராதித்யுக்த: கமலேக்ஷண:
ப்ராஹ மாம் பரயா பக்த்யா வரம் தாஸ்யஸிசேத் ப்ரபோ 9

ரக்ஷார்த்தம் ஸர்வஜகதாம் அஸுராணும் க்ஷயாயச
ஸார்வாத்ம்ய யோகஸித்யர்த்தம் மந்த்ரமேகம் மமாதிச 10

இதி ஸம்ப்ரார்த்திதஸ்தேன மாதவேனுஹமம்பிகே
ஸஞ்சிந்த்யானுத்தமம் ஸ்தோத்ரம் ஸர்வேஷாம் ஸர்வ
ஸித்திதம் 11

நடேசநாம ஸாஹஸ்ரமுக்தவானஸ்மி விஷ்ணவே
தேன ஜித்வாऽஸுரான் ஸர்வான் ரரக்ஷ ஸகலம் ஜகத் 12

ஸார்வாத்ம்ய யோகஸித்திஞ்ச ப்ராப்தவானம்புஜேக்ஷண:
ததேவ ப்ரார்த்தயஸ்யத்ய நாமஸாஹஸ்ரமம்பிகே 13

படனுன்மனனுத்யஸ்ய ந்ருத்தம் தர்சயதி ப்ரபு:
ஸர்வபாபஹரம் புண்யம் ஸர்வரக்ஷாகரம் ந்ருணும் 14

ஸர்வைச்வர்யப்ரதம் ஸர்வஸித்திதம் முக்திதம் பரம்
வக்ஷ்யாமி ச்ருணு ஹே தேவி நாமஸாஹஸ்ரமுத்தமம் 15

இதி பூர்வபீடிகா ||

ஓம்

அஸ்ய ஸ்ரீநடேச்வர நாமஸாஹஸ்ர மாலாமஹாமந்த்ரஸ்ய
ஸதாசிவ ரிஷி: மஹா விராட்சந்த:
ஸ்ரீமந் நடேச்வரோ தேவதா
ஓம் ஸ்ரீ சிவாய நம: இதி பீஜம்.

ஓம் அனந்தசக்தயே நம: இதி சக்தி:
ஓம் ஸ்ரீ மஹேச்வராய நம: இதி கீலகம்.
ஸ்ரீ நடேச்வர ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே (அர்ச்சனே) விநியோக:

ஓம் நம்யாய நம:— அங்குஷ்டாப்யாம் நம:
ஓம் ஸ்வாஹா நம:- தர்ஜனீப்யாம் ஸ்வாஹா
ஓம் வஷட்காராய நம:- மத்யமாப்யாம் வஷட்
ஓம் ஹும்காராய நம:- அனாமிகாப்யாம் ஹும்
ஓம் வெளஷட்காராய நம:- கனிஷ்டிகாப்யாம் வெளஷட்
ஓம் பட்கராய நம:- கரதலகரப்ருஷ்டாப்யாம் பட்
ஓம் நம்யாய நம:—ஹ்ருதயாய நம:
ஓம் ஸ்வாஹா நம:— சிரஸே ஸ்வாஹா
ஓம் வஷட்காரய நம:— சிகாயை வஷட்
ஓம் ஹும்காராய நம:— கவசாய ஹும்
ஓம் வெளஷட்காராய நம:— நேத்ரத்ரயாய வெளஷட்
ஓம் பட்கராய நம:—அஸ்த்ராய பட்
''ஓம் பூர்ப்புவஸ்ஸுவரோம்'' இதி திக்பந்த:

த்யானம்

த்யாயேத் கோடி ரவிப்ரபம் த்ரிணயனம் சீதாம்சுகங்காதரம்
தக்ஷாங்க்ரிஸ்தித வாமகுஞ்சிதபதம் சார்த்தூலசர்மாம்பரம்
வன்ஹிம் டோலகராபயம் டமருகம் வாமே சிவாம்ச்யாமலாம் (ஸ்திதாம்)
கல்ஹாரம் ஜபஸ்ருக் சுகம் கடிகராம் தேவீம் நடேசம் ப்ரபும்
(கல்ஹாரம் தததீம் ப்ரலம்பித கராம்) 1

ஊருந்யாஸ ஸுடோல வன்ஹி சுகப்ருத்வாமம் கராம்-போருஹம்
டக்காச்சாக்ஷ ஸ்ரகுத்பலாபயகரம் வாமம் பதம் குஞ்சிதம்
உத்ருத்யாதர பூத ப்ருஷ்ட விலஸத் தக்ஷாங்க்ரிமர்த்தாம்பிகம்
ஸாமீவஸ்த்ர ஸுவேணி த்ருக்குசபரம் த்யாயேந்நடம் மேளனம் 2

த்யாயேதாத்மவிமோஹ ஸம்ஸ்திதபதம் ரக்தாம்சுகம்சங்கரம்
கிஞ்சித்குஞ்சித வாமபாதமதுலம் வ்யாலம்ப பாஹூம் த்ரிபி:
வாமே பௌண்ட்ரதனுச்ச பாசதஹநௌ தக்ஷேகரைச்சாபயம்
பௌஷ்பம் மார்கணமங்குசம் டமருகம் பிப்ராணமச்சச்சவிம் 3

லம் ப்ருத்வ்யாத்மநே கந்தான் தாரயாமி
ஹம் ஆகாசாத்மநே புஷ்பாணி ஸமர்ப்பயாமி
யம் வாய்வாத்மநே தூபமாக்ராபயாமி
ரம் வஹ்ந்யாத்மநே தீபம் தர்சயாமி
வம் அம்ருதாத்மநே அம்ருதநிவேதனம் நிவேதயாமி
ஸம் ஸர்வாத்மநே ஸர்வோபசாரான் ஸமர்ப்பயாமி

## அத தத்வாதீத ஸ்ரீ சிதம்பர நடேச்வர நாமஸாஹஸ்ர ஸ்தோத்ரமாலா மஹாமந்த்ர:

ஓம்

ஸ்ரீசிவ: ஸ்ரீசிவாநாத: ஸ்ரீமாந் ஸ்ரீபதிபூஜித:
சிவங்கர: சிவதர: சிஷ்டஹ்ருஷ்ட: சிவாகம: 1

அகண்டானந்தசித்ரூப: பரமானந்ததாண்டவ:
அபஸ்ம்ருதிந்யஸ்தபாத: க்ருத்திவாஸா: க்ருபாகர: 2

காலீவாதப்ரிய: கால: காலாதீத: கலாதர:
காலநேதா காலஹந்தா காலசக்ரப்ரவர்த்தக: 3

காலக்ஞ: காமத:: காந்த: காமாரி: காமபாலக:
கல்யாணமூர்த்தி: கல்யாணீரமண: கமலேக்ஷண: 4

காலகண்ட: காலகால: காலகூடவிஷாசன:
க்ருதக்ஞ: க்ருதிஸாரக்ஞ: க்ருசாநு: க்ருஷ்ணபிங்கள: 5

கரிசர்மாம்பரதர: கபாலீ கலுஷாபஹ:
கபாலமாலாபரண: கங்கால: கலிநாசன: 6

கைலாஸவாஸீ காமேச: கவி: கபடவர்ஜித:
கமனீய: கலாநாதசேகர: கம்புகந்தர: 7

கந்தர்பகோடிஸத்ருச: கபர்தீ கமலானன:
கராப்ஜத்ருதகாலாக்னி: கதம்பகுஸுமாருண: 8

கமனீயநிஜானந்தமுத்ராஞ்சிதகராம்புஜ :
ஸ்புரட்டமருநித்வானநிர்ஜிதாம்போதிநிஸ்வன: 9

உத்தண்டதாண்டவ: சண்ட ஊர்த்வதாண்டவபண்டித:
ஸவ்யதாண்டவஸம்பன்னோ மஹாதாண்டவவைபவ: 10

ப்ரஹ்மாண்டகாண்டவிஸ்போடமஹாப்ரளயதாண்டவ:
மஹோக்ரதாண்டவாபிக்ஞ: பரிப்ரமணதாண்டவ: 11

நந்திநாட்யப்ரியோநந்தீ நடேசோ நடவேஷப்ருத்
காலிகாநாட்யரஸிகோ நிசாநடனநிச்சல: 12

ப்ருங்கிநாட்யப்ரமாணஜ்ஞோ ப்ரமராயிதநாட்யக்ருத்
வியதாதிஜகத்ஸ்ரஷ்டா விவிதானந்ததாயக: 13

விகாரரஹிதோ விஷ்ணுர் விராடீசோ விராண்மய:
விராட்ஹ்ருதயபத்மஸ்தோ விதிர்விச்வாதிகோ விபு: 14

வீரபத்ரோ விசாலாக்ஷோ விஷ்ணுபாணோ விசாம்பதி:
வித்யாநிதிர்விரூபாக்ஷோ விச்வயோநிர்வ்ருஷத்வஜ: 15

விரூபோ விச்வதிக்வ்யாபீ வீதசோகோ விரோசன:
வ்யோமகேசோ வ்யோமமூர்த்திர்வ்யோமாகாரோऽவ்ய
யாக்ருதி: 16

வ்யாக்ரபாதப்ரியோ வ்யாக்ரசர்மத்ருத் வ்யாதிநாசன:
வ்யாக்ருதோ வ்யாப்ருதோ வ்யாபீ வ்யாப்யஸாக்ஷீ
விசாரத: 17

வ்யாமோஹநாசனோ வ்யாஸோ வ்யாக்யாமுத்ராலஸத்கர:
வரதோ வாமனோ வந்த்யோ வரிஷ்டோ வஜ்ரவர்மப்ருத் 18

வேதவேத்யோ வேதரூபோ வேதவேதாந்த வித்தம:
வேதார்த்தவித் வேதயோநிர்வேதாங்கோ வேதஸம்ஸ்துத: 19

வைகுண்டவல்லபோऽவர்ஷ்யோ வைச்வாநரவிலோசன:
ஸமஸ்தபுவனவ்யாபீ ஸம்ருத்திஸ்ஸததோதித; 20

ஸூக்ஷ்மாத்ஸூக்ஷ்மதர: ஸூர்ய: ஸூக்ஷ்மஸ்தூலத்வ
வர்ஜித:
ஜந்ஹூகந்யாதரோ ஜன்மஜராம்ருத்யுநிவாரக: 21

சூரஸேன: சுபாகார: சுப்ரமூர்த்தி: சுசிஸ்மித:
அனர்க்கரத்னகசிதகிரீடோ நிகடேஸ்தித: 22

ஸூதாரூப: ஸூராத்யக்ஷ: ஸூப்ரு: ஸூககன: ஸூதீ:
பத்ரோ பத்ரப்ரதோ பத்ரவாஹனோ பக்தவத்ஸல: 23

பகநேத்ரஹரோ பர்கோ பவக்னோ பக்திமந்நிதி:
அருண: சரண: சர்வ: சரண்ய: சர்மத: சிவ: 24

பவித்ர: பரமோதார: பரமாபந்நிவாரக:
ஸனாதன: ஸமஸ்ஸத்ய: ஸத்யவாதீ ஸம்ருத்தித: 25

தந்வீ தநாதிபோ தந்யோ தர்மகோப்தா தராதிப:
தருணஸ்தாரகஸ்தாம்ர: தரிஷ்ணுஸ்தத்வபோதக: 26

ராஜராஜேச்வரோ ரம்யோ ராத்ரிஞ்சரவிநாசன:
கஹ்வரேஷ்டோ கணாதீசோ கணேசோ கதிவர்ஜித: 27

பதஞ்ஜலிப்ராணநாத: பராபரவிவர்ஜித:
பரமாத்மா பரம்ஜ்யோதி: பரமேஷ்டீ பராத்பர: 28

நாரஸிம்ஹோ நகாத்யக்ஷோ நாதாந்தோ நாதவர்ஜித:
நமதானந்ததோ நம்யோ நகராஜநிகேதன: 29

தைவ்யோ பிஷக் ப்ரமாணக்ஞோ ப்ரஹ்மண்யோ
ப்ராஹ்மணாத்மக:
க்ருதாக்ருத: க்ருச: க்ருஷ்ண: சாந்தித: சரபாக்ருதி: 30

ப்ரம்மவித்யாப்ரதோ ப்ரம்ஹ ப்ருஹத்கர்போ ப்ருஹஸ்பதி:
ஸத்யோஜாதஸ்ஸதாராத்ய: ஸாமகஸ்ஸாமஸம்ஸ்துத: 31

அகோரோऽத்புதசாரித்ர ஆனந்தவபுரக்ரணீ:
ஸர்வவித்யானாமீசான ஈச்வரணாமதீச்வர: 32

ஸர்வார்த்த: ஸர்வதாதுஷ்ட: ஸர்வசாஸ்த்ரார்த்தஸம்மத:
ஸர்வக்ஞஸ்ஸர்வதஸ்ஸ்தாணு: ஸர்வேசஸ்ஸமரப்ரிய: 33

ஜனார்தனோ ஜகத்ஸ்வாமீ ஜந்மகர்மநிவாரக:
மோசகோ மோஹவிச்சேத்தா மோதனீயோ மஹாப்ரபு: 34

வ்யுப்தகேசோ விவிசதோ விஷ்வக்ஸேனோ விசோதக:
ஸஹஸ்ராக்ஷஸ்ஸஹஸ்ராங்க்ரிஸ்ஸஹஸ்ரவதனோம்புஜ: 35

ஸஹஸ்ராக்ஷார்ச்சிதஸ்ஸம்ராட் ஸந்தாதா ஸம்பதாலய:
பப்ருர்பஹுவிதாகாரோ பலப்ரமதனோ பலீ 36

மனோபர்தா மனோகம்யோ மனனைகபராயண:
உதாஸின உபத்ரஷ்டா மௌனகம்யோ முனீச்வர: 37

அமானீ மதனோऽமன்யுரமானோ மானதோமனு:
யசஸ்வீ யஜமானாத்மா யக்ஞபுக் யஜனப்ரிய: 38

மீடுஷ்டமோ ம்ருகதரோ ம்ருகண்டுதனயப்ரிய:
புருஹூத: புரத்வேஷீ புரத்ரயவிஹாரவான் 39

புண்ய: புமாந் புரிசய: பூஷா பூர்ண: புராதன:
சயான: சந்தம: சாந்த: சாஸக: ச்யாமளாப்ரிய: 40

பாவக்ஞோ பந்தவிச்சேத்தா பாவாதீதோऽபயங்கர:
மனீஷீ மநுஜாதீசோ மித்யாப்ரத்யயநாசன: 41

நிரஞ்ஜனோ நித்யசுத்தோ நித்யபுத்தோ நிராச்ரய:
நிர்விகல்போ நிராலம்போ நிர்விகாரோ நிராமய: 42

நிரங்குசோ நிராதாரோ நிரபாயோ நிரத்யய:
குஹாசயோ குணாதீதோ குருமூர்த்திர் குஹப்ரிய: 43

ப்ரமாண: ப்ரணவ: ப்ராஜ்ஞ: ப்ராணத: ப்ராணநாயக:
ஸூத்ராத்மா ஸுலப: ஸ்வச்சஸ்ஸூதரஸ்ஸுந்தரானன: 44

கபாலமாலாலங்கார: காலாந்தகவபுர்தர:
துராராத்யோ துராதர்ஷோ துஷ்டதூரோ துராஸத: 45

துர்விஜ்ஞேயோ துராசாரநாசனோ துர்மதாந்தக:
ஸர்வேச்வரஸ்ஸர்வஸாக்ஷீ ஸர்வாத்மா ஸாக்ஷிவர்ஜித: 46

ஸர்வத்வந்த்வக்ஷயகர: ஸர்வாபத்விநிவாரக:
ஸர்வப்ரியதமஸ்ஸர்வதாரித்ர்யக்லேசநாசன: 47

த்ரஷ்டா தர்சயிதா தாந்தோ தக்ஷிணாமூர்த்திரூபப்ருத்
தக்ஷாத்வரஹரோ தக்ஷோ தஹரஸ்தோ தயாநிதி: 48

ஸமத்ருஷ்டிஸ்ஸத்யகாமஸ்ஸநகாதிமுனிஸ்துத:
பதி: பஞ்சத்வநிர்முக்த: பஞ்சக்ருத்யபராயண: 49

பஞ்சயஜ்ஞப்ரிய: பஞ்சப்ராணாதிபதிரவ்யய:
பஞ்சபூதப்ரபு: பஞ்சபூஜாஸந்துஷ்டமானஸ: 50

விக்னேச்வரோ விக்னஹந்தா சக்திபாணி: சரோத்பவ:
கூடோ குஹ்யதமோ கோப்யோ கோரக்ஷிகணஸேவித: 51

ஸுவ்ரதஸ்ஸத்யஸங்கல்ப: ஸ்வஸம்வேத்யஸ்ஸுகாவஹ:
யோககம்யோ யோகநிஷ்டோ யோகானந்தோ யுதிஷ்டிர: 52

தத்வாவபோதஸ்தத்வேச: தத்வபாவஸ்தபோநிதி:
அக்ஷரஸ்த்ர்யக்ஷரஸ்த்ர்யக்ஷ: பக்ஷபாதவிவர்ஜித: 53

மாணிபத்ரார்ச்சிதோ மாந்யோ மாயாவீ மாந்த்ரிகோ மஹான்
குடாரப்ருத் குலாத்ரீச: குஞ்சிதைகபதாம்புஜ: 54

யக்ஷராட் யக்ஞபலதோ யஜ்ஞமூர்த்திர்யசஸ்கர:
ஸித்தேசஸ்ஸித்தஜனக: ஸித்தாந்தஸ்ஸித்தவைபவ: 55

ரவிமண்டலமத்யஸ்தோ ரஜோகுணவிவர்ஜித:
வந்ஹிமண்டலமத்யஸ்தோ வர்ஷீயாந் வருணேச்வர: 56

ஸோமமண்டலமத்யஸ்தஸ் ஸோமஸ்ஸௌம்யஸ் ஸுஹ்ருத் வர:
தக்ஷிணாக்னிர்கார்ஹபத்யோ தமனோ தானவாந்தக: 57

சதுர்வக்த்ர: சக்ரதர: பஞ்சவக்த்ர: பரந்தப:
விச்வஸ்யாயதனோ வர்யோ வந்தாருஜனவத்ஸல: 58

காயத்ரீவல்லபோ கார்க்யோ காயகானுக்ரஹோந்முக:
அனந்தரூப ஏகாத்மா ஸ்வஸ்தருர்வ்யாஹ்ருதிஸ்ஸ்வதா 59

ஸ்வாஹாரூபோ வஸுமனா: வடுக: க்ஷேத்ரபாலக:
ச்ராவ்ய: சத்ருஹர: சூலீ ச்ருதிஸ்ம்ருதிவிதாயக; 60

அப்ரமேயோऽப்ரதிரத: ப்ரத்யும்ன: ப்ரமதேச்வர:
அநுத்தமோऽநுதாஸீநோ முக்திதோ முதிதாநந: 61

ஊர்த்வரேதா ஊர்த்வபாத: ப்ரௌடநர்த்தனலம்பட:
மஹாமாயோ மஹாக்ராஸோ மஹாவீர்யோ மஹாபுஜ: 62

மஹானந்தோ மஹாஸ்கந்தோ மஹேந்த்ரோ மஹஸாம்நிதி:
ப்ராஜிஷ்ணுர்பாவனுகம்யோ ப்ராந்திஜ்ஞானவிநாசன: 63

மஹர்த்திர்மஹிமாதாரோ மஹாஸேனகுருர்மஹ:
ஸர்வத்ருக் ஸர்வப்ருத் ஸர்கஸ்ஸர்வஹ்ருத்கோசஸம்ஸ்தித:

தீர்க்கபிங்கஜடாஜூடோ தீர்க்கபாஹுர் திகம்பர:
ஸம்யத்வாமஸ்ஸம்யமீந்த்ரஸ் ஸம்சயச்சித் ஸஹஸ்ரத்ருக் 65

ஹேதுத்ருஷ்டாந்தநிர்முக்தோ ஹேதுர்ஹேரம்பஜன்மபூ:
ஹேலாவிநிர்மிதஜகத் ஹேமச்மச்ருர் ஹிரண்மய: 66

ஸக்ருத்விபாதஸ்ஸம்வேத்தா ஸதஸத்கோடிவர்ஜித:
ஸ்வாத்மஸ்த: ஸ்வாயுதஸ்ஸ்வாமீ ஸ்வாநந்யஸ்
ஸ்வாம்சிதாகில: 67

ராதிர்தாதி: சதுஷ்பாதஸ்ஸ்வாத்மபந்தஹர: ஸ்வபூ:
வசீ வரேண்யோ விததோ வஜ்ரப்ருத் வருணத்மக: 68

சைதந்ய: சிச்சிதத்வைத: சின்மாத்ர; சித்ஸபாதிப:
பூமா பூதபதிர்பாவ்யோ பூர்ப்புவோவ்யாஹ்ருதிப்ரிய: 69

வர்ச்யவாசகநிர்முக்தோ வாகீசோ வாககோசர:
வேதாந்தக்ருத் துர்யபாதோ வைத்யுதஸ்ஸூக்ருதோத்பவ: 70

அசுபக்ஷயக்ருத் ஜோதிரநாகாசோऽவிலேபக:
[illegible] 71
ஆப்தகாமாநுமந்தாத்மாऽ காமோऽபிந்நோऽநணுர்ஹர: 71

அஸ்நேஹஸ்ஸங்கநிர்முக்தோऽஹ்ரஸ்வோऽதீர்கோऽவிசேஷக:
ஸ்வச்சந்தஸ்ஸ்வச்சஸம்வித்தி அந்வேஷ்டவ்யோऽ ச்ருதோऽ
ம்ருத: 72

அபரோக்ஷோऽவ்ருணோऽலிங்கோऽவித்வேஷ்டா ப்ரேமஸாகர:
ஜ்ஞானலிங்கோ கதிர்ஜ்ஞானீ ஜ்ஞானகம்யோऽவபாஸக: 73

சுத்தஸ்படிகஸங்காச: ச்ருதிப்ரஸ்துதவைபவ:
ஹிரண்யபாஹுஸ்ஸேனனீர் ஹரிகேசோ திசாம்பதி: 74

ஸஸ்பிஞ்ஜர: பசுபதிஸ்த்விஷீமாநத்வனும்பதி:
பப்லுசோ பகவாந் பவ்யோ வ்யாதிர் விகதஜ்வர: 75

அன்னனும்பதிரத்யுக்ரோ ஹரிகேசோऽத்வயாக்ருதி:
புஷ்டானும்பதிரவ்யக்ரோ பவஹேதிர்ஜகத்பதி: 76

ஆததாவீ மஹாருத்ர: க்ஷேத்ரானும்பதிரக்ஷய:
ஸூதஸ்ஸதஸ்பதிஸ்ஸூரிரஹந்த்யோ வனபோऽவர: 77

ரோஹிதஸ்ஸ்தபதி:வ்ருக்ஷபதிர்மந்த்ரீ ஸுவாணிஜ:
கக்ஷாதிபோ புவந்தீசோ பவாக்யோ வாரிவஸ்க்ருதி: 78

ஓஷதீசஸ்ஸதாமீச உச்சைர்கோஷோ விபீஷண:
பத்தீனமதிப: க்ருத்ஸ்னவீதோ தாவந் ஸஸத்வப: 79

ஸஹமானஸ்ஸத்யதர்மா நிவ்யாதீ நியமோயம:
ஆவ்யாதிபதிராதித்ய: ககுப:காலகோவித: 80

நிஷங்கீஷுதிமானிந்த்ரஸ்தஸ்கரானமதீச்வர:
நிசேருக: பரிசரோऽரண்யானம்பதிரத்புத: 81

ஸ்ருகாவீ முஷ்ணதாம்நாத: பஞ்சாசத்வர்ணரூபப்ருத்
நக்தஞ்சர: ப்ரக்ருந்தானும்பதிர்கிரிசரோ குரு: 82

குலுஞ்சானும்பதி: கூப்யோ தந்வாவீ தனதாதிப:
ஆதன்வான: சதானந்தோ க்ருத்ஸோ க்ருத்ஸபதிஸ்ஸுர: 83

வ்ராதோ வ்ராதபதிர்விப்ரோ வரீயாந் க்ஷுல்லக: க்ஷமீ
பில்மீ வரூதீ துந்துப்ய ஆஹனன்ய: ப்ரமர்சக: 84

த்ருஷ்ணுர் தூதஸ் தீக்ஷ்ணதம்ஷ்ட்ரஸ்ஸுதன்வா ஸுபகஸ்ஸுகீ
ஸ்ருத்ய:பத்ய: ஸ்வதந்த்ரஸ்த: காட்யோ நீப்ய:கரோடி-ப்ருத் 85

ஸூத்யஸ்ஸரஸ்யோ வைசந்தோ நாத்யோऽவட்ய:ப்ரவர்ஷஜ:
வித்யுத்யோவிசதோமேக்யோ ரேஷ்மியோவாஸ்துபோவஸு;

அக்ரேவதோऽக்ரேஸம்பூஜ்யோ ஹந்தா தாரோ மயோபவ:
மயஸ்கரோ மஹாதீர்த்ய:கூல்ய: பார்ய: பதாத்மக: 87

சங்க: ப்ரதரஞோऽவார்ய: பேன்ய: சஷ்ப்ய: ப்ரவாஹஜ:
முனிராதார்ய ஆலாத்யஸ்ஸிகத்ய: கிம்சிலாபித: 88

புலஸ்தி: க்ஷயஞே க்ருஹ்யோ கோஷ்ட்யோ கோபரிபாலக:
சுஷ்க்யோ ஹரித்யோ லோப்யாக்யஸ்ஸூர்ம்ய:பர்ண்யோऽ
ணிமாதி பூ: 89

பர்ணசத்ய: ப்ரத்யகாத்மா ப்ரஸன்ன: பரமோன்னத:
சீக்ரிய: சீப்ய ஆனந்த: க்ஷயத்வீர: க்ஷராக்ஷர: 90

பாசிபாதகஸம்ஹர்த்தா தீக்ஷ்ணேஷூஸ்திமிராபஹ:
வராபயப்ரதோ ப்ரம்ஹபுச்சோ ப்ரம்ஹவிதாம்வர: 91

ப்ரம்ஹவித்யாகுருர்குஹ்யோ குஹ்யகைஸ்ஸமபீஷ்டுத:
க்ருதாந்தக்ருத் க்ரியாதார: க்ருதீ க்ருபணரக்ஷக: 92

நைஷ்கர்ம்யதோ நவரஸஸ்த்ரிஸ்தஸ்த்ரிபுரபைரவ:
த்ரிமாத்ருகஸ்த்ரிவ்ருத்ரூப:த்ருதீயஸ்த்ரிகுணாதிக: 93

த்ரிதாமா த்ரிஜகத்தேது:த்ரிகர்தா திர்யகூர்த்வக:
ப்ரபஞ்சோபசமோ நாமரூபத்வயவிவர்ஜித: 94

ப்ரக்ருதீச: ப்ரதிஷ்டாதா ப்ரபவ: ப்ரமத: பதீ
ஸூநிச்சிதார்த்தோ ராத்தாந்தஸ்தத்வமர்த்தஸ்தபோநிதி:

ஹித: ப்ரமாதா ப்ராக்வர்த்தீ ஸர்வோபநிஷதாச்ரய:
விச்ருங்கலோ வியத்தேது: விஷமோ வித்ருமப்ரப: 96

அகண்டபோதோऽகண்டாத்மா கண்டாமண்டலமண்டித:
அனந்தசக்திராசார்ய: புஷ்கரஸ்ஸர்வபூரண: 97

புரஜித் பூர்வஜ: புஷ்பஹாஸ: புண்யபலப்ரத:
த்யானகம்யோ த்யாத்ருரூபோ த்யேயோ தர்மவிதாம்வர: 98

அவச: ஸ்வவசோऽஸ்தாணுரந்தர்யாமீ சதக்ரது:
கூடஸ்த:கூர்மபீடஸ்த:கூச்மாண்டக்ரஹமோசக: 99

கூலங்கஷக்ருபாஸிந்து: குசலீ குங்குமேச்வர:
கதாதரோ கணஸ்வாமீ கரிஷ்டஸ்தோமராயுத: 100

ஜவனோ ஜகதாதாரோ ஜமதக்னிர் ஜராஹர:
ஜடாதரோऽம்ருதாதாரோऽம்ருதாம்சுரம்ருதோத்பவ: 101

வித்வத்தமோ விதூரஸ்தோ விச்ரமோ வேதனமய:
சதுர்புஜ: சததனு: சமிதாகிலகௌதுக: 102

வௌஷட்காரோ வஷட்காரோ ஹுங்கார: பட்கர: படு:
ப்ரம்ஹிஷ்டோ ப்ரம்ஹஸூத்ரார்த்தோ ப்ரம்மஜ்ஞோ
ப்ரம்மசேதன: 103

காயகோ கருடாரூடோ கஜாஸுரவிமர்தன:
கர்விதோ ககனவாஸோ க்ரந்தித்ரயவிபேதன: 104

பூதமுக்தாவளீதந்துர்பூதபூர்வோ புஜங்கப்ருத்
அதர்க்யஸ்ஸுகரஸ்ஸார: ஸத்தாமாத்ரஸ்ஸதாசிவ: 105

சக்திபாதகர: சக்த: சாச்வத: ச்ரேயஸாம்நிதி:
அஜீர்ணஸ்ஸுகுமாரோऽன்ய: பாரதர்சீ புரந்தர: 106

அனாவரணவிக்ஞானோ நிர்விபாகோ விபாவஸு:
விக்ஞானமாத்ரோ விரஜா: விராமோ விபுதாச்ரய: 107

விதக்தமுக்தவேஷாட்யோ விச்வாதீதோ விசோகத:
மாயாநாட்யவினோதக்ஞோ மாயாநடனசிக்ஷக: 108

மாயாநாடகக்ருன்மாயீ மாயாயந்த்ரவிமோசக:
வ்ருத்திக்ஷயவிநிர்முக்தோ வித்யோதோ விச்வவஞ்சக: 109

காலாத்மா காலிகாநாத: கார்க்கோடகவிபூஷண:
ஷடூர்மிரஹிதஸ்ஸ்தவ்ய: ஷட்குணைச்வர்யதாயக: 110

ஷடாதாரகதஸ்ஸாங்க்ய: ஷடக்ஷரஸமாச்ரய:
அநிர்தேச்யோऽநிலோऽகம்யோऽவிக்ரியோऽமோகவைபவ: 111

ஹேயாதேயவிநிர்முக்தோ ஹேலாகலிததாண்டவ:
அபர்யந்தோऽபரிச்சேத்யோऽகோசரோருக்விமோசக: 112

நிரம்சோ நிகமானந்தோ நிரானந்தோ நிதானபூ:
ஆதிபூதோ மஹாபூத: ஸ்வேச்சாகலிதவிக்ரஹ: 113

நிஸ்பந்த: ப்ரத்யயானந்தோ நிர்னிமேஷோ நிரந்தர:
ப்ரபுத்தோ஽பரமோதார: பரமானந்தஸாகர: 114

ஸம்வித்ஸார: கலாபூர்ணஸ்ஸுராஸுரநமஸ்க்ருத:
நிர்வாணதோ நிர்வ்ருதிஸ்தோ நிர்வைரோ நிருபாதிக: 115

ஆபாஸ்வர: பரம்தத்வமாதிம: பேசல: பவி:
ஸம்சாந்தஸர்வஸங்கல்பஸ்ஸம்ஸதீச: ஸதோதித: 116

பாவாபாவவிநிர்முக்தோ பாரூபோ பாவிதோ பர:
ஸர்வாதீத: ஸாரதர: ஸாம்ப: ஸாரஸ்வதப்ரத: 117

ஸர்வக்ருத் ஸர்வஹ்ருத் ஸர்வமயஸ்ஸத்வாவலம்பக:
கேவல: கேசவ: கேலிகர: கேவலநாயக: 118

இச்சாநிச்சாவிரஹிதோ விஹாரீ வீர்யவர்த்தன:
விஜிகத்ஸோவிகதபீ: விபிபாஸோ விபாவன: 119

விச்ராந்திபூர்விவஸனோ விக்னஹர்த்தா விபோதக:
வீரப்ரியோ வீதபயோ விந்த்யதர்ப்பவிநாசன: 120

வேதாளநடனப்ரீதோ வேதண்டத்வக் க்ருதாம்பர:
வேலாதிலங்கிகருணோ விலாஸீ விக்ரமோன்னத: 121

வைராக்யசேவதிர்விச்வபோக்தா ஸர்வோர்த்வஸம்ஸ்தித:
மஹாகர்த்தா மஹாபோக்தா மஹாஸம்வின்மயோமது: 122

மனோவசோபிரக்ராஹ்யோ மஹாபிலக்ருதாலய:
அனஹங்க்ருதிரச்சேத்ய: ஸ்வானந்தைககனாக்ருதி: 123

ஸம்வர்த்தாக்ன்யுதர:ஸர்வாந்தரஸ்தஸ்ஸர்வதுர்க்ரஹ:
ஸம்பந்நஸ்ஸங்க்ரமஸ்ஸத்ரீ ஸந்தோக்தா ஸகலோர்ஜித: 124

ஸம்ப்ரவ்ருத்தஸ்ஸந்நிக்ருஷ்டஸ் ஸம்விம்ருஷ்டஸ்-
ஸமக்ரத்ருக்
ஸம்யமஸ்தஸ் ஸம்ஹ்ருதிஸ்த: ஸம்ப்ரவிஷ்டஸ்ஸமுத்ஸுக:

ஸம்ப்ரஹ்ருஷ்டஸ்ஸந்நிவிஷ்ட: ஸம்ஸ்பஷ்டஸ்ஸம்ப்ர-
மர்தன:
ஸூத்ரபூதஸ்ஸ்வப்ரகாச: ஸமசீலஸ்ஸதாதய: 126

ஸத்வஸம்ஸ்தஸ்ஸுஷுப்திஸ்த: ஸுதல்பஸ்ஸத்ஸ்வரூபக:
ஸங்கல்போல்லாஸநிர்முக்த: ஸமநீராகசேதன: 127

ஆதித்யவர்ணஸ்ஸம்ஜ்யோதி: ஸம்யக்தர்சனதத்பர:
மஹாதாத்பர்யநிலய: ப்ரத்யக் ப்ரம்ஹைக்யநிச்சய: 128

ப்ரபஞ்சோல்லாஸநிர்முக்த: ப்ரத்யக்ஷ: ப்ரதிபாத்மக:
ப்ரவேக: ப்ரமதார்தாங்க: ப்ரநர்த்தனபராயண: 129

யோகயோநிர்யதாபூதோ யக்ஷகந்தர்வவந்தித:
ஜடில: சடுலாபாங்கோ மஹாநடனலம்பட: 130

பாடலாம்சு: படுதர: பாரிஜாதத்ருமூலக:
பாபாடவீப்ருஹத்பானு: பானுமதகோடிகோடிப: 131

கோடிகந்தர்பஸௌபாக்யஸுந்தரோ மதுரஸ்மித:
லாஸ்யாம்ருதாப்திலஹரீபூர்ணேந்து: புண்யகோசர: 132

ருத்ராக்ஷஸ்ரங்மயாகல்ப: கல்ஹாரகிரணத்யுதி:
அமூல்யமணிஸம்பாஸ்வத்பணீந்த்ரகரகங்கண: 133

சிச்சக்திலோசனனந்தகந்தல: குந்தபாண்டுர:
அகம்யமஹிமாம்போதிரநௌபம்யயசோநிதி: 134

சிதானந்தநடாதீச: சித்கேவலவபுர்தர:
சிதேகரஸஸம்பூர்ணஞீசிவ: ஞீமஹேச்வர: 135

ஓம் தத்ஸத்

இதி தத்வாதீத ஞீ சிதம்பர நடேச்வரநாம
ஸாஹஸ்ர ஸ்தோத்ரமாலாமஹாமந்த்ரஸ்ஸமாப்த:

ஓம்

# ஸ்ரீசிதம்பர நடேச்வர ஸஹஸ்ரநாம ஸ்தோத்ர உத்தரபீடிகா

இதி தே கதிதம் தேவி நடராஜஸ்ய ஸுந்தரம்
நாம்னும் ஸஹஸ்ரமத்யந்தம் கோப்யம் நேதம் ப்ரகாசயேத் 1

ஸர்வஸித்திகரம் புண்யம் ஸர்வவித்யா விவர்தனம்
ஸம்பத்ப்ரதமிதம் ந்ருணும் ஸர்வாபத்க்ன மகாபஹம் 2

ஆபிசார ப்ரயோகாதி மஹாக்ருத்ய நிவாரணம்
அபஸ்மார மஹாவ்யாதி ஜ்வர குஷ்டாதி நாசனம் 3

அத்யுத்பாதபயக்ஷோப க்ஷுத்ரசாந்தித காரணம்
கூச்மாண்ட ருத்ர வேதாள சாகின்யாதி பயாபஹம் 4

ஸ்மரணுதேவ ஜந்தூனும் ப்ரம்ஹஹத்யாதி நாசனம்
அஸ்மாத்பரதரம் ஸ்தோத்ரம் நாஸ்திலோகத்ரயேऽம்பிகே 5

ஏதந்நாம ஸஹஸ்ரஸ்ய படனுத் ஸக்ருதேவஹி
மஹாபாதகயுக்தோऽபி சிவஸாயுஜ்யமாப்னுயாத் 6

ப்ரயோகலக்ஷணம் வக்ஷ்யே ச்ருணு சைலஸுதேऽதுனு
பஞ்சம்யாமதவாऽஷ்டம்யாம் தசம்யாம் வா விசேஷத: 7

ஸ்னுத்வா சுபாஸனே ஸ்தித்வா த்யாயன் ஸ்ரீநடநாயகம்
ப்ரஜபேத் த்வாதசாவ்ருத்யா ஸர்வான் காமான் லபேன்நர: 8

ஆர்த்ராயாம் ப்ராதராரப்ய நடராஜஸ்ய ஸன்னிதௌ
ஆஸாயம் ப்ரஜபேதேததேவம் ஸம்வத்ஸரத்ரயம் 9

தஸ்ய பக்தஸ்ய தேவேசோ நடனம் தர்சயேத்ப்ரபு:
பில்வவ்ருக்ஷஸ்ய நிகடே த்ரிவாரம் ப்ரஜபேதிதம் 10

ஷட்பிர்மாஸைர் மஹைச்வர்யம் லபதே நசிரான்நர:
அனேன ஸ்தோத்ரராஜேன மந்த்ரிதம் பஸ்மதாரயேத் 11

பஸ்மாவலோகனுன்ம்ருத்யு: வச்யோபவதி தத்க்ஷணுத்
ஸலிலம் ப்ராசயேத் தீமாந் மந்த்ரேணுனேன மந்த்ரிதம் 12

ஸர்வவித்யாமயோபூத்வா வ்யாகரோத்ய ச்ருதாதிகம்
நாடகாதி மஹாக்ரந்தம் குருதே நாத்ரஸம்சய: 13

சதுர்த்யந்தம் ஸமுச்சார்ய நாமைகைகம் ததோ ஜபேத்
பஞ்சாக்ஷரம் ததாநாம்நாம் ஸஹஸ்ரம்ப்ரஜபேத் க்ரமாத் 14

ஏவம் த்ரிவாரம் மாஸானும் அஷ்டாவிம்சதிகே கதே
நிக்ரஹானுக்ரஹௌ கர்த்தும் சக்திரஸ்யோபஜாயதே 15

நாம்ஞமாதௌ ததாந்தேச பஞ்சாக்ஷர மஹாமநும்
ஜப்த்வா மத்யஸ்திதம் நாம நிர்நமோந்தம் ஸதாஸக்ருத் 16

சதுர்த்யந்தம் ஜபேத் வித்வாந் த்ரிவர்ஷஞ்ச த்ரிமாஸகை:
அணிமாதி மஹாஸித்தீரசிராத் ப்ராப்னுயாத்த்ருவம் 17

ஸர்வேஷ்வபிச லோகேஷு ஸித்தஸ்ஸந்விசரேந்நர:
லக்ஷ்மீபீஜத்வய க்ஷிப்தமாத்யந்தம் நாம ய: சிவே 18

வாஞ்சிதாம் ச்ரியமாப்னோதி ஸத்யமுக்தம் வரானனே
ஹ்ருல்லேகா மந்த்ரஸம்யுக்தம் பூர்வவத்ஸம்யுதம் ஜபேத் 19

யோகஸித்திர்பவேத்தஸ்ய த்ரிசது: பஞ்சவத்ஸரை:
கிமத்ர பஹுனோக்தேன யாயா ஸித்திரபீப்ஸிதா 20

தாம்தாம் ஸித்திம் லபேந்மர்த்ய: ஸத்யமேவமயோதிதம்
கண்டதக்ன ஜலே ஸ்தித்வா த்ரிவாரம் ப்ரஜபேதிதம் 21

ரிபூனுச்சாடயேச்சீக்ரமேகேனைவ தினேன ஸ:
தக்ஷிணுபிமுகோ பூத்வா த்ருத்வார்த்ர வஸனம் சுசி: 22

சத்ரு நாம ஸமுச்சார்ய மாரயேதி பதாங்கிதம்
படேதிதம் ஸ்தவம் க்ரோதாத் ஸப்தக்ருத்வஸ் த்ரிபிர்தினை: 23

ஸ ரிபுர்ம்ருத்யுகேஹஸ்ய த்ருவமாதித்யபாக் பவேத்
ஹரித்ரயா நடாதீசம் க்ருத்வா ப்ராணுன் ப்ரதிஷ்டிபேத் 24

பீதபுஷ்பைஸ்ஸமப்யர்ச்ய ஸ்தோத்ரமேதஜ்ஜபேந்நர:
ஸ்தம்பயேத் ஸகலாந்லோகாந் கிமிஹ க்ஷுத்ரமானுஷாந் 25

ஆகர்ஷணய ஸர்வேஷாமுத்தராபிமுகோ ஜபேத்
வாஞ்சிதா யோஷிதஸ்ஸர்வா: ததா லோகாந்தரஸ்திதா: 26

யக்ஷா: ச கின்னரா: சாபி ராஜாஜ்ஞே வசமாப்னுயு:
கும்பஸ்திதம் ஜலம் ஸ்ப்ருஷ்ட்வா த்ரிவாரம் ப்ரஜபேதிதம் 27

மஹாக்ரஹ கணக்ரஸ்தாநபிஷேகம் ச காரயேத்
ஜல ஸ்பர்சன மாத்ரேண முச்யதே ச க்ரஹாதிபி: 28

கிமத்ரபஹுனோக்தேன ஸித்யந்த்யகில ஸித்தய:
ஸாக்ஷாந்நடேச்வரோ தேவோ வச்யோபவதி சைலஜே 29

அஸ்மாத் பரதரா ஸித்தி: காவாஸ்தி கதயப்ரியே
நிஷ்காமஸ்யாசிராதேவ ப்ரம்ஹஞ்ஞானமவாப்யதே 30

தஸ்மாத் ஸர்வப்ரயத்னேன யதிபிர்ப்ரம்ஹசாரிபி:
வனஸ்தை:ச க்ருஹஸ்தை:ச ஸர்வைர்ஜப்யம் ப்ரயத்னத: 31

நித்யகர்மவதே வேதம் ஸ்தோத்ரம் ஜப்யம் ஸதாதராத்
ப்ரம்ஹாதயோऽபியந்நாம பாடஸ்யைவ ப்ரஸாதத: 32

ஸ்ருஷ்டி ஸ்த்தித்யந்தகர்த்தாரோ ஜகதாம் சிரஜீவின:
யதிதம் முனயஸ்ஸர்வே ஹயக்ரீவாதய: புரா 33

படித்வா பரமாம் ஸித்திம் புனராவ்ருத்தி வர்ஜிதாம்
ப்ராபிரே ததிதம் ஸ்தோத்ரம் படத்வமபி சைலஜே 34

அஸ்மாத்பரதரம்வேத்யம் நாஸ்திஸத்யம் மயோதிதம் 34½

இத்யுத்தரபீடிகா

இத்யாகாசபைரவகல்பே, ப்ரத்யக்ஷஸித்திப்ரதே
உமாமஹேச்வரஸம்வாதே, பஞ்சவிம்சதிமூர்த்தி
ப்ரகரணே, தத்வாதீதஸ்ரீசிதம்பரநடேச்வர
ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமாலா மஹாமந்த்ரோபதேசோ
நாம ஏகோனஷஷ்டிதமோத்யாய:

ஓம்

சிவமஸ்து.

உ
சிவமயம்
ஸ்ரீ மஹாதேவஜயம்
சித்ஸபேசாய மங்களம்.

# சிதம்பரம்

# ஸ்ரீநடேச ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

சிதம்பரம் பிரம்மஸ்ரீ
க. மீ. ராஜகணேச தீக்ஷிதரவர்களது
திராவிடபாஷ்யம்.

(ஸ்ரீ நடராஜரின் ஆயிரம் திருநாமங்களின் பொருள் விளக்கம்)

## பூர்வபீடிகை

(எண்கள் சுலோகங்களைக் குறிக்கும்)

ஸ்ரீ தேவியின் வினா:—

1. (முன்னொரு காலம்) திருக்கயிலையில் அழகு வாய்ந்த இரத்தினங்களாலிழைக்கப்பட்ட சிம்மாசனத்தில் வீற்றிருந்த கருணையே வடிவான சங்கரனை நமஸ்கரித்து மிகவும் சந்தோஷத்துடன்,

2. வினயத்தால் வணங்கிக் கொண்டு பரமேச்வரியான அம்பிகை வினவினுள். "ஓ பகவானே! அனைத்து

உலகத்துக்கும் உற்பத்தி காரணரே! எல்லாமறிந்தவரே! ஸம்ஸார தாபத்தைப் போக்கடிப்பவரே! அழிவற்றவரே!

3. மஹாதேவரே! தேவரீரிடமிருந்து எல்லாத் தேவதைகளின் ஸஹஸ்ரநாமங்களும் என்னால் கேட்கப்பட்டது. ஸ்ரீ நடராஜரின் ஆயிரம் திருநாமங்கள் மட்டும் கேட்கப் படவில்லை. ஓ, மஹாப்ரபுவே!

4. அடிக்கடி பிரார்த்தித்தும் தேவரீர் அதனைக் கூறவில்லை. ஓ சம்புவே! இப்போது கருணையோடு எனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய வேண்டி கூறியருளுவீராக''

ஸ்ரீ பரமன் விடை:-

5. ஓ மஹாதேவியே! நன்று, நன்று, எல்லா உலகங்களுக்கும் நன்மையானது (உன்னால்) கேட்கப்பட்டது. முன்னொரு காலம் ஸ்ரீ மானும் உலகரக்ஷணையையே கைக்கொண்டவனுமான நாராயணன் (திருமால்),

6. அம்பிகையோடு கூடினவனும் மங்களரூபியுமான எம்மை (ஸோமாஸ்கந்த மூர்த்தியை) வெகு காலம் பாற்கடலில் அசைவற்ற மனத்தோடு அதிலிருந்து நழுவாமல் தியானித்திருந்தனன்.

7. (அச்சுதனுடைய) தவத்தினால் களிப்புற்ற நாம் கருணையோடு அவன்முன் தோன்றினோம். (பிறகு) அத்தியானத்தினின்றும் விழித்துக் கொண்ட மஹாவிஷ்ணு லக்ஷ்மியோடு கூட எம்மை நன்கு பூசித்தனன்.

8. வேத வேதாந்த ஸம்ஹிதைகளில் கூறப்பட்டுள்ள பற்பல துதிகளால் போற்றினன். ''ஓ குழந்தாய்! உனது மனதில் யாது வரம் இஷ்டம் உளதோ அதனைக் கேட்பாயாக.

9. அதைச் சீக்கிரம் அளிக்கிறேன்'' என்று (எம்மால்) கூறப்பட்ட அத்தாமரைக்கண்ணன் மிகுந்த பக்தியோடு எம்மைக் குறித்துக் கேட்கலாயினன். ''ஓ ப்ரபோ! எனது இஷ்டத்தைக் கொடுப்பீராயின்.

10. உலகை ரக்ஷிப்பதற்கும், அசுரர்களை சிக்ஷிப்பதற்கும் எல்லாமாக இருக்கும் யோகத்தை அடைவதற்கும் ஒரு மந்திரத்தை உபதேசம் செய்தருளுவீராக'' (என்று அத் திருமால் விண்ணப்பித்தனன்)

11. இவ்விதம் அந்த மாதவனுல் நன்கு பிரார்த்திக்கப்பட்ட நாம், ''ஓ அம்பிகையே! ஒப்புயர்வற்றதும், அவரவர் இஷ்டங்களை அளிப்பதுமான

12. ஸ்ரீ நடராஜராஜரின் ஆயிரம் திருநாமங்கள் அமைந்த தோத்திரத்தை அந்த விஷ்ணுவுக்கு உபதேசித்தோம். அத்துதியின் பாராயணத்தால் எல்லா அசுரர்களையும் ஜயித்து ஸகல உலகங்களையும் காப்பாற்றினன்.

13. எல்லாமாயிருக்கும் யோக ஸித்தியையும் அக்கமலக் கண்ணன் அடைந்தனன். ஓ, அம்பிகையே அவ்வாயிரம் நாமங்களுள்ள துதியை நீ கேட்க விரும்புகிருய்!

14. (எந்த ஒரு தோத்திரத்தை) படிப்பதனுலும் நினைப் பதனுலும் பிரபுவான பரமன் தனது நர்த்தனத்தைக் காண்பிக்கின்ருரோ, மனிதர்கட்கு ஸர்வபாபங்களை அகற்றுவதும் புண்ணியத்தை அளிப்பதும், ஸர்வ ரக்ஷையைக் கொடுப்பதும்,

15. ஸர்வைச்வர்யங்களையும் அளிப்பதும், ஸர்வஸித்திகளை உண்டு பண்ணுவதும், முத்தியின்பத்தைச் சேர்ப்பிப்பதும் நனி சிறந்ததுமான (ஸ்ரீ நடராஜராஜரின் அவ்வாயிரம் திருநாமங்கள் உள்ள) தோத்திரத்தைச் சொல்லுகிறேன். ஓ தேவீ! கேட்பாயாக''.

என்றிவ்வாறு பூர்வபீடிகை முற்றிற்று.

(பின் குறிப்பு) இப்பூர்வபீடிகையின் ஆக்ஷேப ஸமா தானத்தோடு கூடிய ரஹஸ்யமான அர்த்தங்கள் பல ''சிந்தா மணி'' என்னும் பெயரிய வடமொழிப் பேருரையில் உள்ளன. அப்பேருரையும் தமிழ் விளக்கத்துடன் வெகு விரைவில் வெளி வர கூத்தப் பெருமானுடைய அருளை விரும்புகிருேம்.

## ஸ்ரீ நடேச ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரமாலா மஹாமந்த்ர ஜப ந்யாஸ முறைகள்.

இந்த நடேச்வர ஸஹஸ்ர நாம ஸ்தோத்ர மாலா மஹா மந்திரத்துக்கு ரிஷி ஸதாசிவன் (சிரஸில் கை வைக்கவும்) மந்திரங்களைக் கண்டு பிடித்த ரிஷிகளுக்கு மரியாதை செலுத்துவது இது. சந்தஸ் மஹா விராட் என்பதாகும். (முகத்தைத் தொடவும்) சந்தஸ் என்பது எத்தனை எழுத்துக்கள் என்று தெரிவிப்பதாகும். எழுத்துக்கள் எல்லாம் வாயிலிருந்தே வருவதால் அந்த இடத்தில் தொட வேணும். தேவதை நடேச்வரன் ஆவார். அதாவது இந்த மந்திரத்தால் துதிக்கப் படுபவர் ஸ்ரீ நடேச்வரர் என்பதாம். (ஹ்ருதயத்தைத் தொடவும்) ஹ்ருதயத்தில் இறைவர் வீற்றிருக்கிறார் என்பதன் அறிகுறி இது.

ஓம் ஸ்ரீசிவாய நம: பீஜம் — மார்பில் வலப்பக்கம் வலது கையால் தொட வேண்டும்.

ஓம் அனந்த சக்தயே நம: சக்தி: மார்பு இடப்பக்கம் தொடவும்.

ஓம் ஸ்ரீ மஹேச்வராய நம: கீலகம்—மார்பு நடுவில் தொடவும்.

(ஸ்ரீ நடேச்வர மந்திர ஜபத்திலோ அல்லது ஜபிப்பவர்களிடமோ குற்றமிருந்தாலும் தடைகள் ஏற்பட்டாலும் மேற்படி மூன்றும் நீக்கிவிடும்)

ஸ்ரீ நடேச்வரப் பெருமானின் பிரஸாத சித்தியின் பொருட்டு ஜபம் (அர்ச்சனை) என்பது விநியோகம்.

### கரந்யாஸ அங்கந்யாஸங்கள்

ந்யாஸம் என்பது உடலின் பல பாகங்களைத் தொடுவது. கடவுளின் மந்திரங்களைச் சொல்லி சரீரத்தில் ந்யாஸம் செய்தால் நமது உடல் அவர் குடியிருக்கும் கோயிலாகிவிடும், பிறகு ஜபம் செய்தால் அருள் விரைவில் கிடைக்கும்.

ஓம் நம்யாய நம: — அங்குஷ்டாட்யாம் நம: - கட்டை விரலைத் தொடவும் — வணங்கத்தக்கவர் கட்டை விரலில் இருக்கட்டும்.

ஓம் ஸ்வாஹா நம: — தர்ஜனீப்யாம் ஸ்வாஹா - ஆள்காட்டி விரலைத் தொடவும். — ஹோமங்களில் நாம் கொடுக்கும் திரவியங்களை வாங்கிக்கொள்பவர் ஆள்காட்டி விரலில் இருக்கட்டும்.

ஓம் வஷட்காராய நம: — மத்யமாப்யாம் வஷட் - நடுவிரலைத் தொடவும் — உச்சரிக்கப்படும் வேதமாயிருப்பவர் நடு விரலில் இருக்கட்டும்.

ஓம் ஹூம்காராய நம: — அநாமிகாப்யாம்ஹூம் — மோதிர விரலைத் தொடவும் — இதயாகாசத்தில் வீற்றிருப்பவர் மோதிரவிரலில் இருக்கட்டும்.

ஓம் வௌஷட்காராய நம: — கனிஷ்டிகாப்யாம் வௌஷட் — சுண்டு விரலைத் தொடவும்—கடவுளை அழைக்கும் மந்திர மாயிருப்பவர் சுண்டு விரலில் இருக்கட்டும்.

ஓம் பட்கராய நம: — கரதலகரப்ருஷ்டாப்யாம் பட் - உள்ளங் கை புறங்கை இரண்டையும் தொடவும். ஏற்றுக் கொள் ளும்படி வேண்டுதல்.

ஓம் நம்யாய நம: — ஹ்ருதயாய நம: — மார்பில் தொடவும் — ஹ்ருதயத்தில் இருக்க வேண்டுதல்.

ஓம் ஸ்வாஹா நம: சிரஸே ஸ்வாஹா — தலை முன் பக்கம் தொடவும். தலை வணங்கிக் கொடுத்தல்.

ஓம் வஷட்காராய நம: — சிகாயை வஷட் — தலையின் பின் புறம் தொடவும் — பின் புறம் மறைந்திருப்பவரை வேண்டுதல்.

ஓம் ஹூம்காராய நம: — கவசாய ஹூம் — இரண்டு தோள் பட்டைகளையும் தொடவும் — தோள்களில் இருக்க வேண்டுவது.

ஓம் வௌஷட்காராய நம: — நேத்ரத்ரயாய வௌஷட் — இரண்டு கண்களேயும் புருவ நடுவையும் மூன்று விரல் களால் தொடுவது. முக்கண்ணனே வேண்டுதல்.

ஓம் பட்கராய நம: — அஸ்த்ராய பட் — வலது கை விரலால் இடது கையில் தட்டவும்.

பூர்புவஸ்ஸுவரோம் இதி திக்பந்த: — மூவுலகத்திலும் உள்ள வரான பெருமான் ஜபம் முடியும் வரை என் உள்ளத்தில் வீற்றிருக்க வேண்டும்.

(பதிப்பாசிரியர் குறிப்பு: ந்யாஸம் இல்லாமல் செய்யப்படும் மந்திரப் பிரயோகங்கள் பயன் அளிக்காது என்று மந்திரநூல் கூறும் என உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளதால் ந்யாஸ முறைகளேயும் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளோம். மேலும் ஐயங்கள் ஏற்படின் மந்திர சாஸ்திர வல்லுனர்களேயண்டி நன்கு தெரிந்து கொண்டு செய்யவும்)

## தியான சுலோகங்களின் பொருள் விளக்கம்

தியான சுலோகங்கள் பல. அவற்றுள் சிறந்தவை மூன்று. அவற்றின் கருத்து வருமாறு.

1. கோடி சூரிய காந்தி, முக்கண், சந்திரன், கங்கை இவை களேக் கொண்ட திருமுடி; வலதுகாலே ஊன்றி இடது காலேச் சிறிது தூக்கி வளேத்து நீட்டி, புலித்தோல் ஆடையணிந்து, அங்கி, நீட்டல் (வீசிய — டோளம்) அபயம், உடுக்கை இவைகளேக் கொண்டதும், இடப்பாகத்தில் (ஒரே பீடத்தில் தனிமையாக) மங்களத்தைப் புரிகின்ற பச்சை நிற மேனி யாள்; i. நீலோத்பலம் உடைய வலக்கை, தொங்க விட்ட இடக்கை ஆகியவற்றையுடைய அம்பிகை.

ii. (மற்றொரு உருவம்) வலது கைகள் இரண்டில் செப மாலேயும் நீலோத்பலமும்; இடது கைகள் இரண்டில் ஒன்றில் கிளியும் மற்றொன்று தொடையின் மேல் வைத்ததும் ஆகிய

நான்கு திருக்கரங்கள் உடையவனைத் தியானம் செய்க. இதில் பெருமானின் இடது பாகத்தில் அம்மை இரண்டு அல்லது நான்கு திருக்கைகள் உடையவளாகத் தனித்தனியே கூறப்படுகிறது. அம்மையும் அப்பனும் ஓர் உருவமாக இருப்பதை ஸம்மேளன சபா நடன மூர்த்தி என்பர். சிதம்பர யந்திரத்தில் இம்முறைப்படி அம்மையும் அப்பனும் தனித் தனியாகவும் மாதிருக்கும்பாதியனாகவும் வரைதல் கூறப்படு கிறது.

2. 1) தொடையில் வைத்தகை 2) நீட்டியகை 3) எரி ஏந்திய கை 4) கிளி ஏந்தியகை ஆகிய இடது கைகள் நான்கும் 1) உடுக்கை 2) செபமாலை 3) நீலோத்பலம் 4) அபயம் ஆகிய வலதுகைகள் நான்கும்; இடதுகாலைச் சிறிது தூக்கி வளைத்தும், வலதுகாலைப் பூதத்தின் மேல் ஊன்றியும், திரு மேனியில் செம்பாதி அம்மையின் திருவுருவமும், பாதி ஆடை பின்னல்சடை, நெற்றிக்கண், குசம் ஆகிய இவை ஒன்று சேர்ந்த அம்மையப்பன் வடிவத்தைத் தியானம் செய்க.

3. மோஹம் விளைவிக்கின்ற பூதத்தின் மேல் ஊன்றிய திருவடியும், செந்நிற ஆடையுடுத்து, (எப்போதும்) உலகுக்கு மங்களத்தைச் செய்கின்றதும், சிறிது தூக்கி வளைத்த இடது திருவடியும் இடது பக்கம் கரும்பு வில், பாசம், அங்கி, வீசிய (நீட்டிய-டோளம்) கைகளும்; வலது பக்கம் அபயம், மலர் அம்பு, அங்குசம், உடுக்கை ஆகிய இவைகளை எட்டு திருக்கை களில் கொண்ட தூய ஸ்ரீ நடராஜ வடிவ ஜோதியை தியானம் செய்க.

சுலோகம் 2ம், 3ம் சிவகாமசுந்தரி திரிபுரசுந்தரி உருவங் கள் இறைவனுடன் ஒன்றுபட்ட நிலையைக் கூறுகின்றன. இரண்டு திருக்கைகளுடன் கூடிய அம்மையின் தியான வடி வங்கள் வேறுபாடுகளுடன் மேலும் பலவுள.

பதிப்பாசிரியர் குறிப்பு: தியான சுலோகங்களின் பொருள் விளக்கம் உரையாசிரியர் பிரம்மஸ்ரீ க. மீ. ராஜகணேச தீக்ஷிதரவர்களால் தொகுக்கப்பட்டு கிரந்த எழுத்துக்களில்

வெளியிடப்பட்ட ஸ்ரீ நடேச ஸஹஸ்ர நாம ஸ்தோத்ர நூலின் முகவுரைப் பகுதியில் உள்ளபடி இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

### பஞ்சோபசாரங்கள்

லம் — ப்ருதிவ்யாத்மனே — கந்தான் தாரயாமி — கட்டை விரலைத் தொடவும்.

ஹம் — ஆகாசாத்மனே — புஷ்பாணி ஸமர்ப்பயாமி — ஆள் காட்டி விரலைத் தொடவும்.

யம் — வாயுவாத்மனே — தூபமாக்ராபயாமி — நடுவிரலைத் தொடவும்.

ரம் — வன்னியாத்மனே — தீபம் தர்சயாமி—மோதிரவிரலைத் தொடவும்.

வம் — அம்ருதாத்மனே — அம்ருதநிவேதனம் நிவேதயாமி — சுண்டு விரலைத் தொடவும்.

ஸம் — ஸர்வாத்மனே — ஸர்வோபசாரான் ஸமர்ப்பயாமி இரண்டு கைகளையும் கூப்புதல்.

குறிப்பு:- ஈச்வரன் அஷ்டமூர்த்தி 1. ப்ருத்வி (பூமி) 2. ஆகாயம் 3. வாயு 4. வன்னி (தீ) 5. நீர் (அம்ருதம்) 6. சூரியன் 7. சந்திரன் 8. யஜமானன். இவற்றுள் பஞ்ச பூதங்கள் எனப்படும் முதல் ஐந்தும் முக்கியமானவை. இந்த ஐம்பெரும் பூதங்களிலும் ஈசன் நிறைந்திருக்கின்ருன். நமது இதயத்தில் நிறுத்திய ஈசனை மனதால் வழிபட இம்முறையைக் கையாண்டால் ஐம்பூத வடிவனும் அஷ்டமூர்த்தியுமான அப்பெருமானது அருள் விரைவில் கிடைக்கும். இதுவே ''லமித்யாதி'' பஞ்சோபசாரங்களின் தத்வம்.

## இனி ஸ்ரீ நடராஜரின் ஆயிரம் திருநாமங்களின் சுருக்கமான பொருள் கூறப்படுகிறது.

(நாமாக்கள் முதல்வேற்றுமையால் கூறப்படுவதால் அவ்விதமே சொற்களைப் பிரித்துப் பொருள்களும் எழுதப்படுகின்றன. பரமனைப் பூசிக்கும் காலத்திலும், போற்றும் காலத்தி

லும் வேள்வியிலும் அவற்றுக்குரிய வேற்றுமைகளை ஊகித்து அக்கிரியைகளைச் செய்யவும். எல்லாவற்றிலும் 'பிரணவத்தை' முன்டற்றவும். வளைவுக் கோடுகளில் உள்ள எண்கள் சுலோக எண்களையும், மற்ற எண்கள் நாமாக்களின் எண்களையும் குறிக்கும்)

(சுலோகம் 1) 1. ஸ்ரீசிவ: — ஸ்ரீ என்னும் சொல்லுக்குப் பொருள்கள் பல. அவற்றில் வேதம், லக்ஷ்மி, ஸரஸ்வதி, புத்தி, ஐச்வர்யம், அழகு, திரிபுரஸுந்தரி என்பன போன்றவைகளும் மேலும் பல அர்த்தங்களும் கூறப்படுகின்றன. சிவ: எனில் பரப்பிரம்மம், மங்களம், ஒளி, நிஷ்களசொருபம், மோக்ஷம், எல்லாவற்றிலும் ஸமமாக இருக்கும் தன்மை, இரண்டாக இருக்கும் தன்மை, எல்லாவற்றிலும் உள்ளுறைந் திருக்குந் தன்மை முதலிய பொருள்களாம். எனவே, ஸ்ரீயோடுகூடிய உருவன் இறைவன், அம்பிகையோடு கூடிய இறைவன், பின்னும் கூறப்பட்ட அத்தனைப் பொருள்களோடும் கூடின இறைவன் "ஸ்ரீ நடராஜராஜர்." இந்நாமாவுக்கு மேலும் பலவாருகப் பொருள்கள் உள. விரிவஞ்சி விடுத்தாம். "ஸ்ரீ" என்று தொடங்குவதால் இதை ஓதுபவர்கட்கு எல்லா இஷ்டங்களும் எளிதில் நிறைவேறும், பரமன் அருளும் கிட்டும் என உணரப்படுகிறது. 2. ஸ்ரீசிவாநாத: — மங்களத்தைச் செய்கிறவளான அம்பிகையோடு யாசிக்கிறவன் (அல்லது) அவ்வம்பிகையால் யாசிக்கப்பட்டவன். அவ்வம்பிகைக்குப்பதி. 3. ஸ்ரீமான் — அணிமா முதலிய சம்பத்துக்களைத் தரித்தவன். எல்லாவற்றுக்கும் மேலான அழகு உள்ளவன். உலகைக் காக்கும் திருமால் உருவம் தாங்கிய படியால் லக்ஷ்மியை மார்பில் உடையவன். விபூதி அணிந்தவன். 4. ஸ்ரீபதிபூஜித: —லக்ஷ்மியின் கணவனை திருமாலால் பூஜிக்கப்பட்டவன். 5. சிவம்கர: — சிவம் என்பது அவ்யயச் சொல் (வழுவாச் சொல்) அதற்குத் தங்கம் எனப் பொருள். தங்கத்தைக் கையிலுள்ளவன் (தங்கமயமான மேருவை வில்லாகக் கொண்டவன்) தனதுருவைக் கண்டவனுக்கும், தன் மந்திரத்தை ஜபித்தவனுக்கும் இந்த தனது தோத்திரத்தால்

துதித்தவனுக்கும் இம்மையில் எல்லாவற்றையும் அளித்து இறுதியில் மோக்ஷம் அளிப்பவன். 6. சிவதர: — மிகவும் மங்களமானவன், மங்களமளிப்பவன். 7. சிஷ்டஹ்ருஷ்ட: — தரும வழியில் இருப்பவர்களிடம் பிரியமுள்ளவன். 8. சிவாகம: — பர்வதராஜகுமாரியான கௌரியால் (தவம் இயற்றி) அடையப்பட்டவன். தனது பக்தர்களுக்கு மோக்ஷத்தை அடைவிப்பவன். (ஸ்ரீ மணிவாசகரைக்காக்க வேண்டி குதிரை (உருக்கொண்ட) நரிகளை வரவழைத்தவன். சிவசப்தத்தை முன்பற்றின ஆகமங்களை (சிவாகமங்களை) போதித்தவன். அம்பிகையின் தவநிலையையறிய வேண்டி அவள் அமர்ந்த இமயமலையில் உள்ள கௌரி சிகரத்தை அடைந்தவன்.

இவ்விதம் பரமனுடைய மஹிமையைச் சிறிது விளக்கி அவனது உருவ அமைப்பு விளக்கப்படுகிறது.

(2) 9. அகண்டானந்தசித்ரூப: — பெரிய ஆனந்தத்தை அளிக்கின்ற திருமேனியன். பேரின்பத்தை அருளும் ஞான வடிவன். 10. பரமானந்ததாண்டவ: — மிக உயர்ந்த ஆனந்தத்தை உண்டுபண்ணும் கூத்த வடிவினன். 108 கூத்துகளுக்கு முதல் கூத்தானதாலும் ஐந்தொழிலுக்கு காரணமானதாலும் நிஷ்களம் இவ்வடிவை முதலில் ஏற்ற படியாலும் 'பரம' என்ற சிறப்புக்கூறு அமைந்தது. தண்டு முனிவரால் கூறப்பட்டுள்ள பல கூத்துகளில் அதிகப் பிரிய முள்ளவன். அம்பிகையை அல்லது யோகிகளை இன்புறச் செய்ய வேண்டி எடுத்த கூத்தனுருவன். 11. அபஸ்ம்ருதி ந்யஸ்தபாத: — அபஸ்ம்ருதி என்பது ஒரு ரோகமாகும். அந்த ரோகமுள்ளவனுக்கு தன் நினைவு இராது. அவனைப் பிறர் பார்க்கவும் கூடாது என்பர். அந்த ரோகமே உருக் கொண்டு தாருகவன முனிவர்களுடைய ஆபிசார வேள்வி குண்டத்தில் உண்டாகிப் பரமனைத் தீண்டவர அதன் முதுகில் தனது வலத்திருக்காலை வைத்து மிதித்தவன். 12. க்ருத்தி வாஸா: - நரசிம்மத்தின் தோலையணிந்தவன். க்ருத்தி என்பது

பிராணியின் தோலாகும். பரமன் யானை, புலி, சிங்கம் இவற்றின் தோல்களை அணிந்தவன் எனப் புராணங்கள் கூறும். யானை, புலி இவற்றின் தோல்களை அணிந்தவன் என்று மேல் வரும் நாமாக்களில் கூறப்படுவதால் இங்கு நரசிம்மத்தின் தோல் என்பது தேற்றம். 13. க்ருபாகர: - அடியாருக்கு அருள்பவன். அருளுக்கு இருப்பிடம். கிருபர் முதலானவர்களுக்கு (எழு சிரஞ்ஜீவிகளுக்கு) பாபமகற்றி அருளினவன்.

(3) 14. காளீவாதப்ரிய: - காளியின் வாதக்கூத்தில் ப்ரியமுள்ளவன். காளீ காளீ என உச்சரிக்கும் அடியவர்களிடம் ப்ரியமுள்ளவன். (காளீ என்று கூறுதல் கூடாதென்று சாக்த பரசுராம கல்ப சூத்திரம் கூறுவதானது கேவலம் சக்தி உபாஸகர்களுக்கேயாகும்) 15. கால: — முக்கால உருவன் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகக் காலங்கள் மூன்ருகும். எல்லா வடிவமாயும் இருந்து யாவற்றையும் செய்கிறவன். 16. காலாதீத: — காலங்களைக்கடந்தவன், யமனுக்கு அப்பாலன். 17. கலாதர: — சந்திர கலையை அணிந்தவன். 64 கலைகளைத் தரித்தவன். 18. காலநேதா— முக்காலங்களை அல்லது யமனை ஏவுபவன். 19. காலஹந்தா— யமனைக் கொன்றவன். காலஸம்ஹார மூர்த்தி. 20. கால சக்ரப்ரவர்த்தக: — கல்பம், யுகம், வருஷம், அயனம், ருது, மாதம், பக்ஷம், வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம், முகூர்த்தம், நாழிகை. மாத்திரை, லவம் முதலான காலக் கூட்டங்களை முன்போலவே ஏவி நடத்துபவன்.

(4) 21. காலக்ஞ: — முற்கூறிய காலங்களை அறிந்தவன். 22. காமத: — விருப்பங்களை அளிப்பவன்; திருமாலுக்கு காமன் என்னும் மைந்தனை ஈந்தவன். 23. காந்த: — அழகு வாய்ந்தவன். பிரம்மனை அருகில் இருக்க அருளினவன் 24. காமாரி: — மன்மதனுக்குப் பகைவன் (மன்மதனை எரித்தவன், 25. காமபாலக: — காமனை ரக்ஷித்தவன் (பிழைப்பித்தவன்) 26. கல்யாணமூர்த்தி: — மங்கள உருவன், பொன்னார் மேனியன். தேவியின் கல்யாணத்தின் பொருட்டு

உருவம் கொண்டவன். (இதைக் காளிதாஸரும் தேவீ ஸ்துதியில் விளக்குகிருர்). 27. கல்யாணீரமண: — அம்பிகை யோடு விளையாடுகிறவன். 28. கமலேக்ஷண: — தாமரை போன்ற கண்ணன், விஷ்ணுரூபன்.

(5) 29. காலகண்ட: — காளமேகம் போல் கறுத்த கழுத்துடையவன், நீலகண்டன். 30. காலகால: — யமனுக்கும் யமனுனவன். 31. காலகூடவிஷாசன: — அம்ருதம் விரும்பிய தேவாஸுரர்கள் கடைந்த பாற்கடலிலிருந்து உண்டான காலகூடம் என்னும் விஷத்தை உண்டவன். 32. க்ருதக்ஞ: — தான் செய்ததை அறிந்தவன், பிராணிகளால் செய்யப்பட்ட வினைகளை அறிந்தவன். 33. க்ருதிஸாரக்ஞ: — செய்கைகளின் உயர்வை அறிந்தவன். 34. க்ருசானு: — அக்னி உருவன், 35. க்ருஷ்ண பிங்கள: — நீலம், பொன் இவ்விரண்டு வர்ணமுள்ள உருவன்.

(6) 36. கரிசர்மாம்பரதர: — யானைத்தோலை ஆடையாகக் கொண்டவன் (கஜ ஸம்ஹார மூர்த்தி). 37. கபாலி — அம்ருதபாத்திரம் கைக்கொண்ட மூர்த்தி; பிரம்மனின் தலையைக் கொய்து அவ்வோட்டைத் தரித்தவன், பிரமசிரக் கண்ட கபாலீ. (பைரவ மூர்த்தி) 38. கலுஷாபஹ: — பிராணிகளின் பாபத்தை (அஞ்ஞானத்தை) அகற்றுபவன், விஷ்ணுவின் மச்ச உருவைத் தண்டித்தவன். (மத்ஸ்யாரி மூர்த்தி). 39. கபாலமாலாபரண: — பிரம கபாலங்களை மாலையாக அணிந்தவன். (இவ்வித பிரம கபாலங்கள் முப்பத்திரண்டு கொண்ட ஆபரணம் சிதம்பரம் ஸ்ரீ நடராஜருக்கு உளது). 40. கங்காள: — வாமனனைத் தண்டிக்க வேண்டி கங்காளபைரவ உருக்கொண்டவன், வாமன நிக்ரஹ மூர்த்தி; சட்டை நாதர். (கங்காளம் தோள் மேலே காதலித்தான் காணேடி என்பது திருவாசகம்). 41. கலிநாசன: — பாபத்தை அகற்றுபவன். கலியுக முடிவில் கல்கி உருக்கொண்ட திருமாலால் துஷ்டர்களை நசிப்பிக்கிறவன்.

(7) 42. கைலாஸவாஸீ — கைலாஸமென்னும் மலையில் வீற்றிருப்பவன். பிரம்ஹரந்திரத்தில் விளங்குபவன். ஸ்படிக லிங்கத்தில் எப்போதும் ஸாந்நித்யமுள்ளவன். (இதனுலேயே சிதம்பர சபையில் ஸ்படிகலிங்க பூஜை விசேஷமாக நடைபெற்று வருகிறது). 43. காமேச: — ஸ்ரீசக்ரபிந்து பீடத்தில் விளங்குபவளான சிவகாமேச்வரியின் பதி. அனுபவிக்கத் தக்க வஸ்துக்களுக்கெல்லாம் ஈசன். (பிரம்ம விஷ்ணு உருவன்). 44. கவி: — ஸகல காவியங்களைச் செய்தவன், வால்மீகி உருவன். 45. கபடவர்ஜித: — உள்ளொன்று வைத்துப் புறமொன்று கூருதவன். ஒரு பதார்த்தத்தை மறைத்து வேறு பதார்த்தத்தைக் காண்பித்தல் கபடமாம். 46. கமனீய: — அழகன், மனேஹரன். 47. கலாநாத சேகர: — சந்திரனைத் தலையில் அணிந்தவன். 48. கம்பு கந்தர: — சங்கம் போன்ற கழுத்துள்ளவன்.

(8) 49. கந்தர்பகோடிஸத்ருச:—கோடி மன்மதர்களுக்கு ஒப்பானவன். 50. கபர்தீ — கபர்தம் என்று பெயரிய ஜடை உள்ளவன். 51. கமலானன:—தாமரை போன்ற முகமுள்ளவன். 52. கராப்ஜத்ருதகாலாக்னி: — கரகமலத்தில் அனல் ஏந்தியவன். அவ்வனல் பிரளயகாலமஹாக்னி. 53. கதம்ப குஸுமாருண: — அடைப்பைப் பூ போல் சிறிதே சிவந்த மேனியன்.

(9) 54. கமநீயநிஜானந்த முத்ராஞ்சித கராம்புஜ: — அழகு வாய்ந்ததும், தனது ஆனந்த தாண்டவத்தைக் காண்பிப்பதுமான கையை உடையவன். (இதனுல் பரமனின் நீட்டித் தொங்கவிடப்பட்ட 'டோலஹஸ்தம்' என்னும் இடக்கீழ்த்திருக்கரம் கூறப்பட்டது). 55. ஸ்புரட்டமரு நித்வான நிர்ஜிதாம் போதி நிஸ்வன: — தனது வலது மேல் திருக்கையில் விளங்குகிற உடுக்கை ஒலியால் அடக்கப்பட்ட கடலோசையை உடையவன் (தனது உடுக்கையில் தோன்றின அ, இ, உண் என்பன வாதியான பதினுன்கு ஸூத்திரங்களால் அளவு கடந்த பிழைச்சொற்களை நிராகரித்தவன்; வடமொழி இலக்கணம் அருளிச்செய்தவன்.

(10) 56. உத்தண்டதாண்டவ: — (இனி, சிவ தாண்டவ பேதங்கள் கூறப்படுகின்றன) தண்டம் போல உயர்ந்து நின்று ஆடுபவன். பரிக்கோல் கொண்டு ஆடுகிறவன். 57. சண்ட: — அதிக கோபத்தோடு ஆடுகிறவன் அல்லது சண்டன் உருவன். 58. ஊர்த்வதாண்டவ பண்டித:- ஒரு காலை உயரே வீசி ஆடுபவன். தில்லை, திருவாலங்காடு ஸ்தலங்களில் இவ்வுருவம் விளங்கா நிற்கின்றது. பூமி ஸ்பர்சமின்றி ஆகாசக் கூத்தியற்றுவதில் வல்லவன். 59. ஸவ்ய தாண்டவ ஸம்பன்ன:-மேற்கூறிய ஊர்த்வதாண்டவத்தையும் ஆனந்த தாண்டவத்தையும் இடசாரி வலசாரியாக மாறி ஆடுவதில் ஸமர்த்தன். இக்கூத்தில் முன்னது வலக்கால் தூக்கியும், ஆனந்த தாண்டவம் இடக்காலைத்தூக்கியும் தில்லையில் ஆடியபின் ஊர்த்வதாண்டவத்தில் இடக்காலைத்தூக்கி திருவாலங்காட்டிலும், வலக்காலைத்தூக்கி ஆனந்தநடனம் மதுரையிலும் நிகழ்த்தியதைக் குறிக்கும். 60. மஹாதாண்டவபைரவ: —கல்பம், பிரளயத்துக்கு முன் இயற்றும் பெருங்கூத்தினுல் மஹிமை வாய்ந்தவன்.

(11) 61. ப்ரஹ்மாண்டகாண்ட விஸ்போட மஹாப்ரளய தாண்டவ: — பிரம்மனுல் படைக்கப்பட்ட எல்லா அண்டங்களும் அற்றுப்போகுங்காலமாகிய மஹாஸம்ஹார காலத்தில் தனியனுக ஆடுபவன். 62. மஹோக்ரதாண்டவாபிக்ஞ: — மஹோக்ரன் ஓர் ருத்திரன் அல்லது பெருங்காற்று, இவர்களின் கூத்து அறிந்தவன். (அல்லது) தன் தாண்டவ நுட்பம் அறிந்த மஹோக்ரர்களையுடையவன். 63. பரிப்ரமண தாண்டவ:—நாற்புறமும் சுழன்று ஆடுபவன்.

(12) 64. நந்திநாட்யப்ரிய: — நந்தியின் ஆட்டத்தில் அன்புள்ளவன். தாளவாத்தியங்கள் நிறைந்த கூத்து நந்திக்கூத்து, அக்கூத்தில் இசைந்தவன். 65. நந்தீ — தனது கூத்தினுல் எப்போதும் உலகை ஆனந்திக்கச் செய்கிறவன், ஆனந்தமுள்ளவன், நந்தியின் உருவன். 66. நடேச: — இந்நாமா இத்துதிக்கு அபிமானமான தேவதைக்கு முக்கிய

மாகும். இந்நாமாவை ஒருமுறை சொன்னாலும் பாபங்களை அகற்றப் போதுமானதே. நடன் என்பது பரதனையும் அவன் சீடர்களையும் குறிக்கும். அவர்களுக்கு நியாமகன் ஈசன் என்றும் கூறுவர். நடன் என்னும் சொல் பரதனைக் குறிப்ப தால் அவனது கண்டத்தில் உள்ள நாமெல்லோரும் பாரதாளே. நமக்கும் உபாஸ்ய மூர்த்தி நடேசரே. ஆகவே இப்பாரத தேசத்தினர் எல்லாரும் நடேசரைத்தான் சரணம் அடைய வேண்டும் எனக் கருத்து. 67. நடவேஷப்ருத் — கூத்தன் வேஷம் பூண்டவன். 68. காளிகாநாட்யரஸிக: — ஸர்வஸம்ஹார காலத்தில் 'காளராத்ரி' என்ற காளியோடு ஆட இசைந்தவன். 69. நிசாநடன நிச்சல: — இரவுக் கூத்தால் அசைவற்ற உலகன். தன் கூத்துக் கண்டு அசை வற்ற காளியைக் கொண்டவன்.

(13) 70. ப்ருங்கி நாட்ய ப்ரமாணக்ஞ: — பிருங்கி முனிவரின் கூத்தின் வரம்பு அறிந்தவன். இம்முனிவரின் கதை பிரஸித்தமே. 71. ப்ரமராயிதநாட்யக்ருத் — வண்டு கள் சுற்றுவது போலும், அதன் ஒலி போல் ஒலித்துக் கொண்டும் கூத்தாடுகிறவன். 72. வியதாதி ஜகத்ஸ்ரஷ்டா- ஆகாசம் முதலான உலகங்களைப் படைத்தவன். 73. விவிதா னந்ததாயக: — ஸ்ரக் - சந்தன - வநிதா போகங்களால் உண்டாகும் பல ஆனந்தங்களை அளிப்பவன் அல்லது உப நிஷத்தில் கூறப்பட்டுள்ள மனுஷ்ய, கந்தர்வ, தேவ ஆனந் தங்களை தகுதிக்கேற்ப அளிப்பவன்.

(14) 74. விகாரரஹித: — மாறுபாடு அற்றவன்; எக் காலத்திலும் எவ்விதச் சேர்க்கையாலும் கெடாதவன். 75. விஷ்ணு: — எங்கும் நிறைந்தவன், எங்கும் உள்ளவன். திருமால் உருவன். 76. விராடீச: — மிகவும் விளங்குகிற ஈசன்; பிரமனுக்கு ஈசன்; பக்ஷி அரசன்; பக்ஷிகளை வாகனங் களாகக் கொண்டவன். 77. விராண்மய:—உலகு உருவினன். 78. விராட்ஹ்ருதய பத்மஸ்த: — பூமியின் இதயத் தாமரை யில் (சிதம்பர சபையில்) விளங்குபவன். ச்யேன சயனம்

என்னும் வேள்விக்குண்டத்தில் விளங்குபவன். கருடனை வாகனமாகக் கொண்ட திருமாலின் மார்பில் இருப்பவன். (தியாகேசன்). 79. விதி: — பிரமனின் வடிவன். வேதங்களில் கூறப்பட்டுள்ள லிங், லேட், லோட் ப்ரத்யயங்களின் அர்த்தரூபன். 80. விச்வாதிக: — உலகைக் கடந்தவன். 81. விபு: — ஹரி, ஹர, துர்கா, விநாயக, ஸ்கந்த உருவங்களோடு இருந்து ஆங்காங்கு போற்றப்பட்டு அருளுகிறவன். எல்லோருக்கும் ஈசனான இறைவன், தர்மங்களை நிலை நிறுத்த வேண்டி அந்தந்த காலங்களில் உருக்கொள்பவன்.

(15) 82. வீரபத்ர: — தக்ஷன் வேள்வியை அழிக்க வீரபத்ரன் என்னும் உருவங்கொண்டவன். வீரர்களுக்கு சுவர்க்கம் அருள்புரிபவன். 83. விசாலாக்ஷ: — நீண்ட கண்ணன், விசாலாக்ஷியின் பதி (விச்வநாதர்). 84. விஷ்ணு பாண: — திரிபுராஸுரர்களை அழிக்குங்கால் திருமாலை அம்பாகக் கொண்டவன். (இந்த ஸ்தலம் அஷ்ட வீரட்டங்களில் ஒன்றாகிய, வீரட்டேசுவரர் ஆக விளங்கும், ''திருவதிகை'' ஆகும். இதனருகில் ''சரநாராயணப் பெருமாள்'' ஸ்தலமும் இருக்கிறது). இக்கதை வேதத்திலுங் கூறப்பட்டுள்ளது. ''அம்பதுவானவனே'' என்பது திருமங்கையாழ்வார் பாடல். 85. விசாம்பதி: — மூன்றாவது வர்ணத்தாருக்குத் தலைவன். 86. வித்யாநிதி: — பதினெட்டு வித்யைகளுக்கும் இருப்பிடமானவன். 87. விரூபாக்ஷ:—நெற்றிக் கண்ணன், ஒளியகற்றும் தேவன் உருவன். விரூபாக்ஷஸ்தல மூர்த்தி, (ஹம்பி). 88. விச்வயோநி: — உலகத் தோற்றத்துக்குக் காரணன் அல்லது தனது ஸகள நிஷ்கள உருவத்துக்கு (லிங்கத்துக்கு) விச்வனை — விஷ்ணுவை (யோநியாக) ஆவுடையாராகக் கொண்டவன். 89. வ்ருஷத்வஜ: — இடபக் கொடியுடையவன்.

(16) 90. விரூப: — உருவமற்றவன், பக்ஷி உருவன். 91. விச்வதிக்வ்யாபீ — உலகையும் திக்குகளையும் நிறைத்தவன். 92. வீதசோக: – துக்கமற்றவன். 93. விரோசன: —

மிகவும் விளங்குபவன். 94. வ்யோமகேச: — ஆகாயத்தைக் கேசமாகக் கொண்டவன். 95. வ்யோமமூர்த்தி: — ஆகாய வடிவன்; அதிபூதத்தில் ஆகாசத்தலமான சிதம்பரத்தையே தனது திருமேனியாகக் கொண்டவன். 96. வ்யோமாகார:- ஆகாயத்தைப் படைத்தவன். பஞ்சமுக ஸதாசிவ உருவன், வெளி வடிவன். 97. அவ்யயாக்ருதி:—அழிவற்ற உருவன்,

(17) 98. வ்யாக்ரபாதப்ரிய: — வ்யாக்ரபாதர் என்னும் புலிக்கால் முனிவரிடம் அன்பு கொண்டவன். இம் முனிவரின் பெயர் வேதத்தில் கூறப்பட்டதே. இவரின் கதையை கோயிற்புராணம், ஸபாபதி விலாஸம் (தில்லைத்திருநடனம்) முதலிய நூல்களில் கண்டு கொள்க. 99. வ்யாக்ரசர்மத்ருத் —தாருகாவனத்திலுள்ள முனிவர்களின் ஆபிசாரவேள்விக் குண்டத்தினின்றும் கிளம்பித் தன்னைத் தாக்கவந்த புலியை உரித்து அத்தோலைக் (ஆடையாக) அணிந்து கொண்டவன். 100. வ்யாதிநாசன: — வியாதிகளைப் போக்கடிப்பவன். தன் வந்த்ரி முதலான ஸித்தர்களின் உருவந்தாங்கினவன் என்பது கருத்து. 101. வ்யாக்ருத: — (மிகவும்) எல்லா இடங்களி லும் எல்லாவற்றையும் செய்பவன். உருவம் நாமம் கொண்டவன். 102. வ்யாப்ருத: — வியாபாரமுள்ளவன் (வியாபாரம்—செய்கை) 103. வ்யாபீ - எங்கும் நிறைந்தவன் 104. வ்யாப்யஸாக்ஷீ — உள்ளிருந்து அறிபவன். 105. விசாரத: —புலவன்.

(18) 106. வ்யாமோஹநாசன: — அஞ்ஞானம், சரீரம் இவற்றில் அபிமானத்தையும், மூர்ச்சையென்னும் பிணியை யும் அகற்றுபவன். 107. வ்யாஸ: — வேதம் முதலிய எல்லாக்கலைகளையும் வகுத்து அருளினவன். இவ்வகுத்தல் ‘சிந்தாமணி’ எனும் வடமொழிப் பேருரையில் காண்க. வியாஸமுனிவரின் உருவன். 108. வ்யாக்யாமுத்ராலஸத் கர: — சொல்லாமற் சொல்லும் அடையாளம் கொண்ட திருக்கரத்தன், ஆலமர் கடவுள். 109. வரத: — அடியவர் களுக்கு அவர்கள் விரும்பியதை அளிப்பவன். 110. வாமன:

— முமுக்ஷுக்களால் ஸேவிக்கப்பட்டவன். சிறிய உருவன்: மஹாபலியின் கர்வத்தை அடக்கவேண்டி அவதரித்த திருமால் வடிவன். 111. வந்த்ய: — எல்லோராலும் வணங்கப்படு கிறவன். 112. வரிஷ்ட: — எல்லாவற்றுக்கும் மேலானவன். 113. வஜ்ரவர்மப்ருத் — வைரக்கவசம் அணிந்தவன், வஜ்ரம் என்ற ஆயுதத்தையும், போர்வையையும் பூண்டவன்.

(19) 114. வேதவேத்ய: — வேதங்களால் அறியத் தகுந்தவன். 115. வேதரூப: — மறை வடிவானவன். 116. வேதவேதாந்தவித்தம: — வேதங்களையும் அவற்றின் முடிவை யும் அறிந்தவன். 117. வேதார்த்தவித் — வேதப்பொருளை அறிந்தவன். 118. வேதயோநி: — வேதங்களுக்கு இருப்பிட மானவன். 119. வேதாங்க: — வேதங்களை அவயவங்களாகக் கொண்டவன். 120. வேதஸம்ஸ்துத: — மறைகளால் துதிக்கப்பட்டவன்.

(20) 121. வைகுண்டவல்லப: — திருமாலைப் பத்தினி யாகக் கொண்டவன். (கந்தபுராணத்தில் இக்கதை விரிவாக கூறப்பட்டுள்ளது). 122. அவர்ஷ்ய: — மழையின்றி உண் டாகும் வஸ்துக்களின் உருவன் (அல்லது) கடல் வடிவன். 123. வைச்வானரவிலோசன: — தீக்கண்ணன் (அல்லது) அந்தர்வேதி என்னும் க்ஷேத்திரத்தில் பிரமனுல் செய்யப்பட்ட வேள்வியின் ஆஹவனீய அக்னி குண்டலத்திலிருந்து சாண் உருவில் இரத்தினமயமான வடிவோடு வெளிவந்தவன். இரத்தினசபாபதி மூர்த்தி. இக்கதையைச் சிதம்பரபுராணம் சிதம்பர ரஹஸ்யம் இவைகளினுல் கண்டு கொள்ளலாம். இம்மூர்த்தி சிதம்பரத்தில் மத்யான்ன காலத்தில் பூஜிக்கப்படு கிறது. 124. ஸமஸ்தபுவனவ்யாபீ — எல்லா உலகங்களி லும் நிறைந்தவன். 125. ஸம்ருத்தி: — அதிக ஐச்வர்யம் உடையவன். 126. ஸததோதித: — அடிக்கடிதோன்றுபவன், எப்போதும் விளங்குபவன்.

(21) 127. ஸூக்ஷ்மாத்ஸூக்ஷ்மதர: — பாரிமாண்டல் யம் என்கிற அணுவுக்கும் அணுவானவன். 128. ஸூர்ய: —

ஸூர்ய ரூபன். 129. ஸூக்ஷ்மஸ்தூலத்வவர்ஜித: — சிறிதும் பெரிதும் அற்றவன். 130. ஜன்ஹுகன்யாதர: — ஜன்ஹு முனிவரின் குமாரியான கங்கையை அணிந்தவன். 131. ஜன்ம ஜரா ம்ருத்யுநிவாரக: — பிறவி, மூப்பு, இறப்பு இவைகளை அகற்றுபவன்.

(22) 132. சூரஸேன: — சூரர்களான சேனைகளை உடையவன். 133. சுபாகார: — மங்கள உருவன். விஷ்கம்பம் முதலான யோகங்களில் அவ்வப்பெயருள்ள யோக வடிவன். 134. சுப்ரமூர்த்தி: — வெண்மையான உருவன். 135. சுசிஸ்மித: — வெளுப்பான அல்லது தீப்போன்ற சிரிப்புள்ளவன். (பக்தர்களைக் காக்க வெண்மையாயும், திரிபுராசுரர்களை மாய்க்க தீச்சிரிப்பும் உள்ளவன்) 136. அனர்க்க ரத்னகசிதகிரீட: — விலையுயர்ந்த இரத்தினங்களால் இழைக்கப்பட்ட முடியணியன். 137. நிகடேஸ்தித: — அடியார்களுக்கு அருகில் இருப்பவன், புண்யநதிகளின் ஸமீபத்தில் ஆலயம் கொண்டவன்.

(23) 138. ஸுதாரூப: — அமிருத வடிவன். 139. ஸுராத்யக்ஷ: — தேவர்கட்குத் தலைவன். 140. ஸுப்ரூ: — அழகிய புருவம் கொண்டவன். 141. ஸுககன: — சுகங்களுக்கு மேகம் போன்றவன் (அதாவது சுகங்களை மேகம் போல் பொழிபவன்) 142. ஸுதீ: — நன்மதியன். 143. பத்ர: —மங்கள உருவன், பத்ரம் என்கிற காரணகாலரூபி, இடப உருவன். 144. பத்ரப்ரத: — மங்களங்களை அளிப்பவன். 145. பத்ரவாஹன: — (இடபத்தை, யானையை) வாஹனமாகக் கொண்டவன். 146. பக்தவத்ஸல: — அடியவர்களிடம் அன்பு கொண்டவன்.

(24) 147. பகநேத்ரஹர: — சூரியனுடைய கண்ணைப் பிடுங்கியவன் 148. பர்க்க: — சூரியனின் ஒளி ரூபி (காயத்ரியின் இதயத்தில் விளங்குபவன்) 149. பவக்ன: — ஸம்ஸார பந்தத்தை அகற்றுபவன். 150. பக்திமன்நிதி: — அடியவர்களுக்கு கருவூலம். 151. அருண: — சிவந்த மேனியன்,

இரவியின் ஸாரதி. 152. சரண: — காக்கிறவன். 153. சர்வ: — எல்லா சப்தங்களேயும் ஒரேகாலத்தில் அறிந்தவன்; சப்த ப்ரும்ம ரூபன் ஆனபடியால் ஸமூஹாலம்ப தோஷம் பரமனேப்பற்ருது. பிருதிவீ தத்வாபிமானிநீ தேவதை. அங்காரக கிரஹத்தை ஈன்றவன். பரமனின் எட்டு நாமங்களில் இரண்டாவதாகும். 154. சரண்ய: — காப்பவரில் சிறந்தோன். 155. சர்மத: — சுகத்தையளிப்பவன். 156. சிவ: — இதன் பொருள் முதல் நாமாவில் கூறப்பட்டதே. சிகாரம் பரமனேயும், வகாரம் அம்பிகையையும் உணர்த்தும். இதன் பெருமை அளவு கடந்தது. மறைநடுவில் மணி போல் விளங்குவது. அதுபோல் இந்நாமாக்கள் நடுவிலும் விளங்கப் பெறுவது.

(25) 157. பவித்ர: — பரிசுத்தன். இந்திரனின் வஜ்ராயுதத்திலிருந்து பக்தனேக் காத்தவன். 158. பரமோதார: — மிகவும் உதாரசீலன், நன்கொடையாளன். 159. பரமாபந்நிவாரக: — பெரிய ஆபத்தினின்றும் விடுவிப்பவன். 160. ஸநாதன: — பழமையானவன், மூவகைப் பரிச்சேதமற்றவன். 161. ஸம: — எல்லாம் ஸமமாகக் கொண்டவன். 162. ஸத்ய: — மெய்ப்பொருள். 163. ஸத்யவாதீ — மறை வடிவன் ஆனதால் உண்மை விளம்பி. 164. ஸம்ருத்தித: — செல்வத்தை அளிப்பவன்.

(26) 165. தன்வீ — வில்லே ஏந்தினவன் (பிநாகமன்று) மேருமலே அவ்வில்லாம். 166. தநாதிப: — பொருளுக்கு ஓரதிபதி, குபேரன். 167. தன்ய: — புண்யவான், பொருள் சம்பாதிக்கும் உபாயமறிந்தவன். 168. தர்மகோப்தா — தர்மம், விருஷபம், யமன், பாண்டவரில் மூத்தவனுன தர்மகத்திரன் இவர்களேக் காத்தவன். 169. தராதிப: — பூமி, மலே, வஸு, கர்ப்பநாடி இவைகட்குத் தலேவன். 170. தருண: — இளேஞன். 171. தாரக: — ஸம்ஸார பந்தத்தினின்றும் தாண்டுவிப்பவன், சிதம்பரம் காசி முதலான ஸ்தலங்களில் மரணமுறுவோர்க்கு பைரவனுல் உபதேசிக்கப்படும் தாரபு

மந்திரப் பொருளானவன். 172. தாம்ர: — செம்மேனியன். 173. தரிஷ்ணு: - தாண்டுபவன். 174. தத்வபோதக: — தத்துவங்களை அறிவுறுத்துபவன்.

(27) 175. ராஜராஜேச்வர: — ஸ்ரீவித்யாதிபதி, குபேரனுக்கு ஈச்வரன், சக்கரவர்த்திகளான பிருது-மருத்தன்-பரதன் சசி-பிந்து-கயன்-சிபி-தசரதராமன்-பரசுராமன் - அம்பரீஷன்-மாந்தாதா-திலீபன்-அங்கன் - பகீரதன் - ஸகோத்ரன் - நந்திதேவன்-யயாதி-ஸகரன் இவர்களுக்கு ஈச்வரன். 176. ரம்ய: - அழகன். 177. ராத்ரிஞ்சரவிநாசன: — அரக்கர்களை அழிப்போன். 178. கஹ்வரேஷ்ட: — (இதய) குகையில் வசிப்பவன். 179. கணேச: — பிரமத கணங்களுக்குத் தலைவன். 180. கணேச: — விநாயகன் உருவன். ஆதித்யன் முதலான கண தேவதைகளுக்கு எஜமானன், ஜீவன் உருவன். 181. கதிவர்ஜித: — நடையற்றவன், ஆத்மரூபி.

(28) 182. பதஞ்ஜலிப்ராணநாத: — பதஞ்ஜலி முனிவரால் போற்றப்பட்டவன். 183. பராபர விவர்ஜித: — தன்னைக் காட்டிலும் உயர்ந்தவனோ வேருனவனோ அற்றவன். 184. பரமாத்மா — பரம் பொருள், ஸ்ரீ நடராஜ மூர்த்தி. 185. பரம்ஜ்யோதி: — சூரியன் முதலான ஒளிப்பிழம்புகட்கும் மேலான ஒளி வடிவன். 186. பரமேஷ்டீ — ஆசுவலாயன முனிவருக்கு பிரம்ம வித்யையை உபதேசித்தவன். படைப்போன். உயர்ந்த பதத்தில் இருப்பவன். 187.பராத்பர: — பிரசித்தமான வஸ்துக்களுக்கு அப்பாலுள்ளவன்.

(29) 188. நாரஸிம்ஹ: — நரசிம்மத்தின் உருவானவன். 189. நகாத்யக்ஷ: — மலையரசன், இமாலய உருவன். 190. நாதாந்த: — ஸப்த முடிவை அடைந்தவன், மேலை சமுத்திர உருவன். 191. நாதவர்ஜித: — சப்தமற்றவன். யோகீ. 192. நமதானந்தத: - வணங்கியவர்கட்கு ஆனந்தமளிப்பவன். 193. நம்ய: — எல்லோராலும் எப்போதும் வணங்கப்படுபவன். 194. நகராஜநிகேதன; — மேரு, கைலாயம்

முதலிய மலைகளில் ஆலயம் கொண்டவன். மாவடியமர்ந்தோன் (ஸாக்ஷாத் ஏகாம்ரநாதன்).

(30) 195. தைவ்ய: — தேவர்களைக் காப்பதில் வல்லவன். 196. பிஷக் — வைத்யன். 197. ப்ரமாணக்ஞ: — சாஸ்த்ரங்களில் கூறப்பட்டுள்ள பிரமாணங்களை அறிந்தவன். 198. ப்ரம்மண்ய: — பிரணவப் பொருளுரைக்கத் தவறிய பிரம்மதேவரை (சுப்ரஹ்மண்ய சிக்ஷையினின்று) காத்தவன். 199. ப்ராம்மணாத்மக: — மறையோர் வடிவன், தேவர்களுள் பிராம்மண வடிவன். 200. க்ருதாக்ருத: — கார்ய காரண உருவன், சகுண நிர்குண வடிவன். 201. க்ருச: — ஸூக்ஷ்ம உருக்கொண்டவன். 202. க்ருஷ்ண: — கருத்த மேனியன், பஞ்சப்ரம்மத்தில் அகோரமூர்த்தி, கீதாசார்யனான வாஸுதேவ சொரூபன். 203. சாந்தித: — அமைதி அளிப்பவன். 204. சரபாக்ருதி: — சரப மூர்த்தியின் உருக்கொண்டவன். இம் மூர்த்தியின் பெருமை உபநிஷத்துக்களிலும் புராணங்களிலும் விரிவுறக் கூறப்பட்டதே.

(31) 205. ப்ரஹ்மவித்யாப்ரத: — ஸனகாதிகட்கு பிரம்ம வித்யையை உபதேசிப்பவன். 206. ப்ரஹ்ம — சச்சிதானந்தலக்ஷணன், ஆத்மரூபன், 207. ப்ருஹத்கர்ப: — பெரிதான பிரம்மாண்டத்தைத் தரித்தவன் அல்லது ஈன்றவன். 208. ப்ருஹஸ்பதி: — தேவபுரோஹிதன். 209. ஸத்யோஜாத: — உடனே உண்டானவன் அல்லது ஸத்யோஜாத மூர்த்தி (பஞ்சப்ரம்மத்துள் முதன்மையானவன்). 210. ஸதாராத்ய: — எப்போதும் பூஜிக்கத்தக்கவன். 211. ஸாமக: — ஸாம வேதத்தை கானம் பண்ணுகிறவன், ஸாமம் என்னும் முதல் உபாயத்தைக் கைப்பற்றுபவன். 212. ஸாமஸம்ஸ்துத: — ஸாமவேதத்தில் துதிக்கப்பட்டவன்.

(32) 213. அகோர: — சாந்தமான உருவன்; திருவெண்காட்டுடையான். (பஞ்ச ப்ரம்மத்துள் மூன்றாவதான

அகோரமூர்த்தி) 214. அத்புதசாரித்ர: — ஆச்சரியத்தை உண்டுபண்ணும் திரிபுரஸம்ஹாரம் முதலிய தனது சரித்திரங்களை உடையவன். 215. ஆனந்தவபு: — ஆனந்தமளிக்கும் மேனியன். 216. அக்ரணீ: — முதன்மையானவன். 217. ஸர்வவித்யானுமீசான: — எல்லாவித்யைகட்கும் ஈச்வரன், குரு. 218. ஈச்வராணுமதீச்வர: - எல்லா அரசர்கட்கும் மேற்பட்டவன், சக்ரவர்த்தி.

(33) 219. ஸர்வார்த்த: — எல்லாப் பிராணிகளாலும் பிரயோஜனம் வேண்டப்பட்டவன். 220. ஸர்வதாதுஷ்ட: — எப்போதும் ஸந்தோஷமுள்ளவன். 221. ஸர்வசாஸ்த்ரார்த்த ஸம்மத: — எல்லா சாஸ்த்ரங்களிலும் கூறப்பட்டுள்ள பொருள்களை இஷ்டமாகக் கொண்டவன். 222. ஸர்வக்ஞ: —எல்லாமறிந்தவன். 223. ஸர்வத: — எல்லாமளிப்பவன். 224. ஸ்தாணு: — சலிக்காதவன் (சலனமற்றோன்) உலகுக்கு ஆதாரமானவன், ருத்ரன், ஸ்திரலிங்கவடிவன். 225. ஸர்வேச: — அனைவருக்கும் ஈசன், தலைவன். ''என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்'' என்பது திருவாசகம். 226. ஸமரப்ரிய: — போரில் மகிழ்பவன்.

(34) 227. ஜநார்தன: — பாபிகளை நரகம் முதலானவற்றில் பீடிப்பவன், (அல்லது) ச்ராத்த காலத்தில் பூஜிக்கப்படுகிறவன். 228. ஜகத்ஸ்வாமீ — உலக எஜமான். 229. ஜன்மகர்மநிவாரக: — பிறவிப்பிணி அகற்றுவோன். 230. மோசக: — விடுவிப்பவன். 231. மோஹவிச்சேத்தா — மனத்தில் உண்டாகும் மோஹத்தைப் போக்கடிப்பவன். 232. மோதநீய: - எல்லோராலும் கொண்டாடப்படுகிறவன். 233. மஹாப்ரபு: — ஒப்புவமையற்ற பெரிய முதலாளி. இச்சொல் மஹேச்வர:, மஹாதேவ: என்பன போல இப்பரமனைத் தவிர வேறு எந்த தேவனையும் உணர்த்தாது.

(35) 234. வ்யுப்தகேச: — சிகையற்றவன், பரமஹம்ஸசொரூபி (அல்லது) தொங்கு சடையன். ''பின்தாழ்சடை

யானை'' எனத் திருமுறை கூறும். அல்லது பரந்த சடையன். 235. விவிசத: — மிக்க வெண்மையன். 236. விஷ்வக்ஸேன: — நாற்புறமும் பிரமதகண ஸேனைகளை உடையவன் (அல்லது) விஷ்வக்ஸேனன் என்னும் பெயர் கொண்ட ஓர் தேவன். 237. விசோதக: — பாபங்களை அகற்றுபவன். பக்தர்களை மிகவும் சோதிப்பவன். 238. ஸஹஸ்ராக்ஷ: — ஆயிரங்கண்கள் உள்ளவன், இந்திரனுருவன். 239. ஸஹஸ்ராங்க்ரி: — ஆயிரக்கணக்கான திருவடியன். 240. ஸஹஸ்ர வதனாம்புஜ: — ஆயிரக்கணக்கான முகங்களாகிய தாமரைகளையுடையவன். இம்மந்திரம் சிதம்பரத்வனி மந்திரம் என்னும் வடிவத்தின் தியான மூர்த்தியாம்.

(36) 241. ஸஹஸ்ராக்ஷார்ச்சித: — இந்திரனால் பூஜிக்கப்பட்டவன். 242. ஸம்ராட் — மிகவும் விளங்குபவன், ராஜஸூய யாகம் செய்த அரச உருவன். 243. ஸந்தாதா — எல்லோர்க்கும் வினைப்பயன்களைக் கூட்டிவைப்பவன். 244. ஸம்பதாலய: — அணிமா முதலிய செல்வங்கட்கு இருப்பிடம். 245. பப்ரு: — பொற்கொன்றை வண்ணன், உலகைத் தாங்குபவன், இடப வடிவினன். 246. பஹுவிதாகார: — அனேக உருவினன். 247. பலப்ரமதன: — பலன் என்னும் அசுரனைக் கொன்றவன். இந்நாமா வாமனன் எனும் மூர்த்தியைக் குறிக்கும். 248. பலீ — பலம் வாய்ந்தவன்.

(37) 249. மனோபர்த்தா — அறிவுக்கு அறிவானவன், 250. மனோகம்ய: — அறிவால் அடையத் தகுந்தவன். 251. மனனைகபராயண: — தவமியற்றுபவன். 252. உதாசீன: — புண்ய பாவங்களில் ஒட்டாதவன், நடுநிலையான். 253. உபத்ரஷ்டா — எல்லோராலும் செய்யப்படும் கர்மங்களை அருகிலிருந்து காண்பவன். 254. மௌனகம்ய: — மோனத்தினால் அடையத் தகுந்தவன். 255. முனீச்வர: — முனிவர்கட்குத் தலைவன். திரிஸஹஸ்ர முனீச்வரர்கள் என்னும் தில்லைத்திருவுடை அந்தணர்கட்குத் தலைமையானவன்.

(38) 256. அமாநீ — அளவற்றவன் 257. மதன: — எல்லோரையும் மோஹிக்கும்படி செய்பவன், அல்லது மன் மதன் 258. அமன்யு: — கோபமற்றவன் 259. அமாந: — அளவிடற்கரியவன் 260. மாநத: — அளவையளிப்பவன். 261. மநு: — மந்திரவடிவன் அல்லது மனுச்சக்ரவர்த்தி 262. யசஸ்வீ — கீர்த்திவாய்ந்தவன். 263. யஜமானுத்மா — வேள்வி செய்பவனின் உருவன். பரமனின் அஷ்ட மூர்த் தங்களில் ஒருவன். 264. யக்ஞபுக் — வேள்விப் பயனை புசிப்பவன். 265. யஜ்ஞப்ரிய: — வேள்வியில் பிரிய முள்ளவன்.

(39) 266. மீடுஷ்டம: — மேக உருக்கொண்டு பொழிபவன். உயர்ந்த புருஷரூபங் கொண்டவன். 267. ம்ருகதர: — மானை ஏந்தினவன் 268. ம்ருகண்டுதனயப்ரிய: — மார்க்கண்டேய முனிவரிடம் அன்புள்ளவன். 269. புருஹூத: — வேதங்களில் அதிகமாகச் சொல்லப்பட்டவன். 270. புரத்வேஷி — திரிபுரர்களை துவேஷித்தவன். 271. புரத்ரயவிஹாரவான் — ஜாக்ரத் முதலிய மூன்றவஸ்தைகளில் விளையாடுபவன்.

(40) 272. புண்ய: — புண்ய சொரூபன். 273. புமான் — புருஷ உருவன். 274. புரிசய: — எல்லாச் சரீரங்களிலும் இருப்பவன். 275. பூஷா — எல்லோரையும் போஷிக்கிறவன், ஆதித்யன் உருவன். 276. பூர்ண: — எல்லாவற்றையும் வியாபித்தவன். 277. புராதன: — பழமையானவன். 278. சயான: — ஸுஷுப்தி அவஸ்தா பன்னன், தூங்குபவன் போலப் படுத்திருப்பவன். 279. சந்தம: — மிகவும் ஸுகத்தோடு கூடியவன். 280. சாந்தம: — விருப்பு வெறுப்பற்றவன். 281. சாஸக: — எல்லோரை யும் ஏவுபவன். 282. ச்யாமளாப்ரிய: — அம்பிகையிடம் காதல் கொண்டவன்.

(41) 283. பாவக்ஞ: — உள்ளக்கிடக்கை அறிந்தவன். 284. பந்தவிச்சேத்தா — பிறவிக் கட்டறுப்பவன். 285.

பாவாதீத: — அறிவுக்கப்பாலுள்ளவன். 286. அபயங்கர: — பயமின்மையை அருள்பவன். அபயகரம் தாங்கினவன். இக்கரம் ஸ்திதியைக் குறிக்கும். 287. மநீஷீ — அறிவாளி 288. மனுஜாதீச: — மனிதர்களுக்கு அரசன். 289. மித்யாப்ரத்யயநாசன: — பொய்யில் உண்டாகும் நம்பிக்கையைப் போக்கடிப்பவன்,

(42) 290. நிரஞ்ஜன: — அஞ்ஜனமற்றவன். 291 நித்யசுத்த: — எப்போதும் சுத்தி உள்ளவன். 292. நித்ய புத்த: — எப்போதும் (எல்லாவற்றையும்) அறிந்தவன். 293. நிராச்ரய: — ஒருவனையும் அணுகாத தனியன். 294. நிர். விகல்ப: — மாற்றுதலற்றவன். 295. நிராலம்ப: — பிடிப் பற்றவன். 296. நிர்விகார: — விகாரமற்றவன். (விகாரம்— மாறுதல்). ·297. நிராமய: — ரோகமற்றவன்.

(43) 298. நிரங்குச: — தகையப்படாதவன். 299. நிராதார: — ஆதாரமற்றவன். 300. நிரபாய: — அழிவற்ற வன். 301. நிரத்யய: — தோஷமற்றவன். 302. குஹாசய: - இதயத்தில் அல்லது புத்தியில் விளங்குபவன். (சுப்ரமண்ய ரிடம் (நல்) அபிப்ராயம் கொண்டவன்). 303. குணாதீத: — ஸத்வ ரஜஸ் தமோ குணங்கட்கு அப்பாற்பட்டவன். 304. குருமூர்த்தி: — (மணிவாசகருக்குக் குருந்தமரத்தடியிலிருந்து உபதேசித்த) ஆசாரியன். 305. குஹப்ரிய: — குகனிடம் அன்பு கொண்டவன்.

(44) 306. ப்ரமாண: — பிரத்யக்ஷம் முதலிய ஆதார மானவன் (நிரூபணன்). 307. ப்ரணவ: — ஓங்கார வடிவன். 308. ப்ராக்ஞ: — ஆக்ஞாஸ்தானத்தில் (புருவ மத்தியில்) விளங்குபவன். ஸுஷுப்தி அவஸ்தை அனுபவிப்பவன். ஒருவராலும் தகைய முடியாத ஆணையாளி. 309. ப்ராணத: — பிராணனை அளிப்பவன். 310. ப்ராணநாயக: — பஞ்ச பிராணன்களுக்கு அதிபதியானவன். 311. ஸூத்ராத்மா: — ஆடைக்கு நூல் போல உலகில் நுழைந்தவன். யக்ஞ ஸூத்ர வடிவன். 312. ஸுலப: — சுகமாக அடையத் தகுந்தவன்.

313. ஸ்வச்ச: — தூய்மையானவன். 314. ஸுஉதர: — அழகான வயிறுள்ளவன். 315. ஸுந்தரானன: - அழகான முகமுள்ளவன், ஸுந்தரமூர்த்தி நாயனரிடம் அன்புள்ளவன்.

(45) 316. கபாலமாலாலங்கார: -பிரம்மகபாலமாலையைப் பூண்டவன், 317. காலாந்தகவபுர்தர: — கால ஸம்ஹார மூர்த்தியின் வடிவன். (இம்மூர்த்தி அஷ்ட வீரட்டஸ்தலங் களுள் ஒன்ருன திருக்கடவூரில் இருக்கிறது) 318. துராராத்ய: —முயற்சி செய்தே வழிபடத்தக்கவன். 319. துராதர்ஷ: — ஒருவனுலும் பீடிக்கப்படாதவன். 320. துஷ்டதூர: — பாபிகளுக்கு அப்பாலுள்ளவன் (எட்டாதவன்) 321. துராஸத: —பாபிகளால் அடையத்தகாதவன்.

(46) 322. துர்விக்ஞேய: — துஷ்டர்களால் அறியப் படாதவன். 323. துராசாரநாசன: — அநாசாரங்களை அகற்றுபவன். 324. துர்மதாந்தக: — துஷ்டர்களைக் கொல்லுபவன், துர்மதன் என்பவனைச் சிக்ஷித்தவன். (இக் கதை சிதம்பர புராணம் கூறும்) 325. ஸர்வேச்வர: — எல்லா வற்றுக்கும் ஈசன். 326. ஸர்வஸாக்ஷீ - எல்லாவற்றுக்கும் சாக்ஷியாக இருப்பவன். 327. ஸர்வாத்மா — எல்லா வடிவன். 328. ஸாக்ஷிவர்ஜித: — ஸாக்ஷி (தனக்கு) அற்றவன் (இன்னவன் இத்தன்மையன் என எவராலும் நிரூபணம் செய்ய முடியாதவன். (''எழுதிக்காட்ட ஒண்ணுதே'' —அப்பர்)

(47) 329. ஸர்வ த்வந்த்வக்ஷயகர: — பசி - தாகம், சோக-மோஹம், விருப்பு — வெறுப்பு, இன்பம் — துன்பம், புண்யம் — பாபம் இம்மாதிரியான இரட்டைத் தன்மையுள்ள யாவற்றையும்போக்குபவன். 330. ஸர்வாபத்விநிவாரக: — எல்லாவிதமான ஆபத்துக்களையும் அகற்றுபவன். 331. ஸர்வ ப்ரியதம: — எல்லோருக்கும் மிகச்சிறந்த அன்பன். 332. ஸர்வ தாரித்ரய க்லேசநாசன: —எவ்வித தரித்திரத்திலுண்டாகும் துக்கத்தைப் போக்குபவன்,

(48) 333. த்ரஷ்டா—எல்லாவற்றையும் பார்ப்பவன். 334. தர்சயிதா — (வியாக்ரபாதர், பதஞ்சலி முதலிய பக்குவான்மாக்களுக்குத் தனது நடனத்தைக்) காண்பிப்பவன். 335. தாந்த:—தவத்தினுலுண்டாகும் சிரமங்களைப் பொறுப்பவன், தனரூபன். 336. தக்ஷிணமூர்த்திரூபப்ருத் — தென்முகக்கடவுள் வடிவமெடுத்தவன். 337. தக்ஷாத்வரஹர: — தக்கன் வேள்வியையழித்தவன். 338. தக்ஷ:—(பஞ்சகிருத்யம் என்னும் ஐந்தொழிலையும் ஸமகாலத்தில் ஆற்றுவதில்) வல்லவன். 339. தஹரஸ்த: —இதயத்தாமரையில் விளங்குபவன். அதிபூதத்தில் சிதம்பரத்தில் விளங்கும் சித்ஸபையின் கண்ணே கூத்தனுக விளங்குபவன். 340. தயாநிதி:—கருணை நிரம்பியவன்.

(49) 341. ஸமத்ருஷ்டி:—எல்லாவற்றிலும் வேறுபடாது காண்பவன், ஸம நோக்குடையவன். 342. ஸத்யகாம: — உண்மையில் ஆசையுள்ளவன். 343. ஸனகாதிமுனிஸ்துத: - ஸனகாதி முனிவர்களால் போற்றப்பட்டவன். 344. பதி:— உலகத்துக்கு நிமித்தோபாதான காரணன், ஈசுவரன். 345. பஞ்சத்வநிர்முக்த: — அழிவற்றவன். 346. பஞ்சக்ருத்ய பராயண: — படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் புரிபவன்.

(50) 347. பஞ்சயக்ஞப்ரிய: — பிரம்மயக்ஞம், தேவயக்ஞம், பித்ருயக்ஞம், மனுஷ்யயக்ஞம், பூதயக்ஞம் என்னும் ஐவகை வேள்விகளில் அன்புள்ளவன். 348. பஞ்சப்ராணுதிபதி: — ஐவகைப் பிராணன்களுக்குப் பதியானவன். 349. அவ்யய: — அழிவற்றவன். 350. பஞ்சபூதப்ரபு: — நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பெரும் பூதங்களுக்கும் எஜமான். 351. பஞ்சபூஜா ஸந்துஷ்டமானஸ: —சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், நைவேத்தியம் இவற்ருேடு கூடிய பூஜையில் பிரியமுள்ளவன், (அல்லது) ஐந்து ஆவரண பூஜையில் பிரியமுள்ளவன்.

(51) 352. விக்னேச்வர: — கார்யங்களைச் செய்யக் கூடாமல் தடை செய்யும் வினைகளை ஏற்கிறவன். 353. விக்ன ஹந்தா-அவ்வினைகளை அழிப்பவன். 354. சக்திபாணி: - சக்தி என்னும் ஆயுதத்தைக் கைக்கொண்டவன். 355. சரோத் பவ:—ஜீவராசியை உண்டுபண்ணினவன். நாணல் காட்டில் உண்டான குமாரன் உருவன். 356. கூட:—மாயையினால் மறைக்கப்பட்டவன். (ரஹஸ்யமானவன்) 357. குஹ்யதம:- மிகவும் ரஹஸ்யமானவன். 358. கோப்ய: — வேதரூபன் ஆனதால் பக்குவமற்ற ஆன்மாக்களுக்கு புலப்படத்தகாதவன். இதனால் ஆத்மார்த்த பூஜை லிங்கத்தை பிறருக்குக் காட்டுதல் கூடாது எனவும், கோபிகா ஸ்த்ரீகளுக்கு நன்மையருள்பவன் எனவும் பொருள்பட இடமுண்டு. 359. கோரக்ஷிகண ஸேவித: - கோரக்ஷி என்கிற சித்தர்களிண் (அல்லது) கோபாலர்களின் கூட்டத்தால் வணங்கப்பட்டவன்.

(52) 360. ஸுவ்ரத: - அழகான நியமமுள்ளவன். (விரதங்களை அனுஷ்டிப்பவன்) 361. ஸத்யஸங்கல்ப: – மெய்யான எண்ணமுள்ளவன். (மெய்யையே கருதுபவன்). 362. ஸ்வஸம்வேத்ய: - தன்னைத் தானறிந்தவன். ஸ்வாதிஷ்டான சக்கரத்தில் போற்றப்படுகிறவன். இது காரணம் பற்றியே ஆறு ஆதாரஸ்தானங்களில் நிகழ்த்தப்படும் அந்தர்யாக பூஜையைப் பின்பற்றி சிதம்பரத்தில் ஸ்ரீ நடராஜருக்கு பாஹ்யத்திலும் ஆறு கால பூஜைகளும் தேவமான ரீதியாக வருஷத்தில் ஆறு அபிஷேகங்களும் நடைபெறுகின்றன. இதில் ஸ்வாதிஷ்டான சக்ர பூஜைக்குச் சமமாக பகல் இரண்டாங்கால பூஜையும், தேவமான ரீதியான அபிஷேகத்தில் மாசிமாத அபிஷேகமும் கருதப்படுகிறது 363. ஸுகாவஹ: - ஸுகமாக இருப்பவன் 364. யோககம்ய: -யோகாப்யாஸத்தால் அடையத் தக்கவன். 365. யோகநிஷ்ட: - யோகநிஷ்டையோடு இருப்பவன். 366. யோகாநந்த: - யோகத்தில் பிரியமுள்ளவன். 367. யுதிஷ்டிர -போரில் புறங்காட்டாது நிற்பவன்.

(53) 368. தத்வாவபோத: - ஆகாயம் முதலிய தத்து வங்களைக் காண்பிக்கிறவன். 369. தத்வேச: - தத்துவங் களுக்கு எஜமானன். 370. தத்வபாவ: - தத்துவங்களாக இருப்பவன். 371. தபோநிதி: - தபஸ்ஸுக்கு இருப்பிடமா னவன். 372. அக்ஷர: - அழிவற்றவன், எழுத்து வடிவன். 373. த்ர்யக்ஷர: - மூவெழுத்துள்ள ஓங்கார வடிவன். 374. த்ர்யக்ஷ: - முக்கண்ணன். 375. பக்ஷபாதவிவர்ஜித: - வேற்றுமையற்றவன், உண்மை கைக்கொண்டவன்.

(54) 376. மாணிபத்ரார்ச்சித: - குபேரனுக்குத் தோழ னை மாணிபத்ரனுல் பூஜிக்கப்பட்டவன். (இவனே குபேரனது ஆத்மபூஜாமூர்த்தியான ஸ்வர்ணாகர்ஷண பைரவரைச் சிதம்பர ஸபையில் எழுந்தருளப்பண்ணியவன்) 377. மான்ய: — கொண்டாடத் தகுந்தவன். 378. மாயாவீ - மாயையைக் கைக்கொண்டவன். 379. மாந்த்ரிக: - மந்திரம் கற்றவன். 380. மஹான் - பெரியவன். 381. குடாரப்ருத்: - குடார (கோடாலி) ஆயுதம் தரித்தவன். 382. குலாத்ரீச: - மஹேந் திரம் முதலிய குலபர்வதங்களுக்கு அரசன். 383. குஞ்சிதைக பதாம்புஜ: - சிறிதே வளைத்துத்தூக்கிய திருவடித்தாமரை யான்.

(55) 384. யக்ஷராட்: - தலவகார உபநிஷத்தில் கூறப் பட்டுள்ள யக்ஷஸ்வரூபி, பரப்பிரம்மம், குபேர உருவன், அக்ஞாத வாஸத்தில் பாண்டவர்களுக்கு அனுக்ரஹம் புரிந்த யக்ஷ உருவன். 385. யக்ஞபலத: - வேள்வியின் பயனை அருள்பவன். 386. யக்ஞமூர்த்தி: - வேள்வியே உருவாகக் கொண்டவன். 387. யசஸ்கர: - புகழ் அளிப்பவன். 388. ஸித்தேச: - திருமூலர், புசுண்டர் முதலிய ஸித்தர்களுக்குத் தலைவன். 389. ஸித்திஜனக: - ஸித்திகளை உண்டாக்கி யவன். 390. ஸித்தாந்த: - முடிவுப்பொருள். 391. ஸித்த வைபவ: - அழிவற்ற மஹிமை உள்ளவன்.

(56) 392. ரவிமண்டலமத்யஸ்த: — ஸூரியபிம்ப நடு வில் விளங்குபவன். 393. ரஜோகுணவிவர்ஜித: — ராஜஸ

குணத்தை அகற்றினவன். 394. வன்ஹிமண்டலமத்யஸ்த: - தீயின் நடுவில் உள்ளவன், மூலாதாரத்தில் விளங்குபவன். 395. வர்ஷீயான் - வயது முதிர்ந்தவன், ஞானம் நிறைந்த வன். 396. வருணேச்வர: - வருணனுக்கு ஈச்வரன்.

(57) 397. ஸோமமண்டலமத்யஸ்த: - சந்திரபிம்ப நடுவில் விளங்குபவன். 398. ஸோம: - உமையோடு கூடினவன், சந்திரனுருவன். 399. ஸௌம்ய: - ஸோமம் என்கிற வேள்வியில் வரிக்கப்பட்டவன், மனோக்ஞன். 400. ஸுஹ்ருத் - நல்ல எண்ணம் உள்ளவன், அழகான ஹ்ருதயன். 401. வர: - சிரேஷ்டன். (காத்யாயன முனிவரின் ஆச்ரமம் சென்று (திருவீழிமிழலை) மாப்பிள்ளை உருவங் கொண்டவன். மாப்பிள்ளை ஸ்வாமி (குறிப்பு). 402. தக்ஷிணாக்னி: - வேள்விச்சாலையில் தென்புறமுள்ள தீ வடிவன். 403. கார்ஹபத்ய: - வேள்விச்சாலை மேற்கிலுள்ள அக்னி வடிவன். 404. தமன: - தண்டிப்பவன். 405. தானவாந்தக: - அரக்கர்களைக் கொல்லுபவன்.

(58) 406. சதுர்வக்த்ர: - நான்கு முகமுள்ளவன், ஈசான வடிவம் நீக்கி மற்ற நான்கு பிரம்ம வடிவன். படைக்கிறவனின் உருவன். 407. சக்ரதர: - ஸுதர்சனம் என்னும் சக்கரம் ஏந்தினவன். (பின் அச்சக்கரத்தைத் திருமாலுக்கு அளித்துத் தரிக்கும்படிச் செய்தவன். இச் சக்கரம் ஜலந்தரனை அழித்ததாகும்) 408. பஞ்சவக்த்ர: - ஐந்து முகமுள்ளவன், ஈசான மூர்த்தி. அவ்விதம் ஸ்ரீ நடராஜர் உருவபேதங்களும் உள. 409. பரந்தப: - சத்துருக்களைக் தபிக்கப் பண்ணுபவன், அப்பெயரன். 410. விச்வஸ்யாயதன: - உலகுக்கு இடமானவன். 411. வர்ய: - வரிக்கத்தகுந்தவன். 412, வந்தாருஜனவத்ஸல: - வணங்கினவர்களிடம் அபிமானம் கொண்டவன்.

(59) 413. காயத்ரீவல்லப: - த்விஜர்களால் முக்காலமும் போற்றப்படும் காயத்திரிக்குப் பதியானவன். 414. கார்க்ய - கர்க கோத்திரத்தில் உண்டானவன், அப்பெயருள்ளவன்:

415. காயகானுக்ரஹோன்முக: - பாடுகிறவனிடம் அருள் நோக்குள்ளவன். 416. அனந்தரூப: - எண்ணற்ற உருவம் கொண்டவன். ஸர்ப்பராஜன் உருவன். 417. ஏகாத்மா - உள்ளும் புறம்பும் வேற்றுமையற்ற ஒன்றானவன், ஜீவ ப்ருஹ்மைக்யம். 418. ஸ்வஸ்தரு: - பாரிஜாதம் முதலிய ஸ்வர்க்க விருக்ஷவடிவன். 419. வ்யாஹ்ருதி: - இது ஒரு மந்திரம். இதன் வடிவமானவன். 420. ஸ்வதா - இது அவ்யயபதம். பிதுருக்களுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணும் மந்திரவடிவன், இதன் பொருளானவன்.

(60) 421. ஸ்வாஹா-இதுவும் அவ்யயபதம். தேவதைகளுக்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணும் இந்த மந்திர வடிவன், இதன் பொருளானவன். 422. அரூப: - உருவம் அற்றவன். நிஷ்கள சொரூபம் (இது சிதம்பர ஸபையிலுள்ள ரஹஸ்யத்தைக் குறிக்கும்) 423. வஸுமநா: - அஷ்ட வஸுக்களிடங்களில் பிரியம் உள்ளவன். 424. வடுக: - இளமை பைரவரூபன், பைரவன். 425. க்ஷேத்ரபாலக: - க்ஷேத்ரங்களைக் காப்பாற்றுபவன். 426. ச்ராவ்ய: - கேட்கத் தகுந்தவன். 427. சத்ருஹர: – சத்துருக்களை அகற்றுபவன் 428. சூலீ - சூலம் என்ற ஆயுதம் தரித்தவன். 429. ச்ருதி ஸ்ம்ருதி விதாயக: - மறைகளில் கூறப்பட்டுள்ளவற்றை நடத்துபவன்.

(61) 430. அப்ரமேய: - எண்ண முடியாதவன், நீரில் கிருத்தகுந்தவன். 431. அப்ரதிரத: - எதிரி இல்லாதவன், தன்னைப்போன்ற ரதாதி படைகள் கொண்டவனற்றவன். 432. ப்ரத்யும்ந: - அதிகமான பொருள்பலம் வாய்ந்தவன், மன்மதன். 433 ப்ரமதேச்வர: - நந்திமுதலானவர்களுக்கு ஈசன். 434. அனுத்தம: – தன்னைக் காட்டிலும் வேறு உத்தமன் இல்லாதவன் 435. அனுதாஸீன:-சத்துருவையோ மித்திரனையோ ஏதோ ஒரு பக்ஷத்தை பின்பற்றினவன் 436. முக்தித: - மோக்ஷத்தையளிப்பவன் 437. முதிதானன: - ஸந்தோஷித்த முகங் கொண்டவன்.

(62) 438. ஊர்த்வரேதா: - பிரம்ஹரந்தரத்தில் மணி போல் கட்டப்பட்ட பும்ஸ்த்வத்தை உடையவன். 439. ஊர்த்வ பாத:-காளியை அடக்கவேண்டி உயரத்தூக்கிய திருவடியன். மேல்வேர்களும் கீழ்கிளைகளும் உடைய பிரம்ஹவடிவான விருக்ஷரூபன. 440. ப்ரௌடநர்த்தனலம்பட: - கூத்தில் தானே ஸமர்த்தன் என்று கூறி அங்கங்களை அசைத்து ஆடுவதில் பிரியமுள்ளவன். 441. மஹாமாய: - பெரியமாயையைக் கொண்டவன். 442. மஹாக்ராஸ: - அதிகம் புசிப்பவன், குண்டோதரன் ரூபன். 443. மஹாவீர்ய: - அதிகம்வீர்யமுள்ளவன். 444. மஹாபுஜ: - பெரியகைகளுள்ளவன்.

(63) 445. மஹானந்த: - பேரானந்தமுள்ளவன். 446. மஹாஸ்கந்த: - பெருத்த தோளுடையான். 447. மஹேந்த்ர: - மஹேந்திரன் உருக்கொண்டவன். 448. மஹஸாம்நிதி: - ஒளிகளுக்கு இருப்பிடம். 449. ப்ராஜிஷ்ணு: - எப்போதும் விளங்குபவன். 450. பாவனுகம்ய: - பாவனையால் அடையத் தகுந்தவன். 451. ப்ராந்திஜ்ஞானவிநாசன: - அஜ்ஞானத்தைப் போக்கடிப்பவன்.

(64) 452. மஹர்தி: - அதிகம் ஐச்வர்யமுள்ளவன். 453. மஹிமாதார: - மஹிமைக்கு ஆதாரமானவன். 454. மஹாஸேனகுரு: - ஷண்முகனுக்கு ஆசான் அல்லது ஷண்முகசீடன். 455. மஹ: - தேஜோரூபன். 456. ஸர்வத்ருக் — எல்லாவற்றையும் பார்க்கிறவன். 457. ஸர்வப்ருத் — எல்லாவற்றையும் தாங்குபவன் 458. ஸர்க: - படைக்கிறவன். 459. ஸர்வஹ்ருத்கோச ஸம்ஸ்தித: - எல்லா ஹ்ருதய கோசத்திலும் இருப்பவன்.

(65) 460. தீர்கபிங்கஜடாஜூட: - நீண்ட பொன்னிறச் சடை முடியன். 461. தீர்கபாஹு: - நீண்ட தோளுடையான் 462. திகம்பர:- திசைகளை உடையாகக் கொண்டவன், ஆடை இல்லான். 463. ஸம்யத்வாம: - மங்களம் கொண்டவன், போரில் வலியன். பொருள்களை ஸ்த்ரீகளை நியமித்தவன் 464.

ஸம்யமீந்த்ர: - முனிச்ரேஷ்டன் 465. ஸம்சயச்சித் — ஸந்தேகத்தைத் தெளிவிப்பவன். 466. ஸஹஸ்ரத்ருக் - ஆயிரங் கண்ணன்.

(66) 467. ஹேதுத்ருஷ்டாந்தநிர்முக்த: - காரண உதாரண சூன்யன். 468. ஹேது: - உலகுக்கு நிமித்தோபாதான காரணன். 469. ஹேரம்பஜன்மபூ: - விநாயகனைப் படைத்தவன். 470. ஹேலாவிநிர்மிதஜகத் — சிரமமின்றி விளையாட்டாக உலகைப் படைத்தவன். 471. ஹேமச்மச்ரு - பொன்மீசையான. 472. ஹிரண்மய: - பொன்மயமானவன்.

(67) 473. ஸக்ருத்விபாத: - பதஞ்ஜலி வேண்டுகோளால் ஒரு தடவை விளங்கினவன். ஒரு தடவை தனது காந்தி ஸம்பத்தால் விளக்கம் பூண்ட ரவி மதீத்யன். 474. ஸம்வேத்தா - நன்கு அறிந்தவன். 475. ஸதஸத்கோடிவர்ஜித: - ஒரு பொருளிலும் ஆதரவு அநாதரவு அற்றவன். 476. ஸ்வாத்மஸ்த: - ஸ்வாத்ம ரூபமாக, சிவரூபமாக இருப்பவன். 477. ஸ்வாயுத: - கெட்டுப்போகாத ஆயுதம் உள்ளவன். 478. ஸ்வாமீ - எப்போதும் எல்லோராலும் போற்றப்படுகிறவன். 479. ஸ்வாநன்ய: - தன்னைக்காட்டிலும் வேறு இல்லாதவன், சொல்லுருவன், சொல்லே பரமனென்பான், வடமொழி இலக்கணத்தான். 480. ஸ்வாம்சிதாகில: - தனது அம்சத்தால் விளங்குகிறவைகளும், அங்கங்களுமான இதர தேவதைகளை உடையவன். (அல்லது) தனது அம்சத்தால விளங்குகிற இப் புவியில் உள்ள சிவ விஷ்ணுவாதி ஸகல க்ஷேத்திரங்களிலும் ஆராதிக்கப்படுகின்ற மூர்த்திகளையுடையவன்.

(68) 481. ராதி: - பொருள், தோழன், சுகம் இவைகளின் ரூபன். 482. தாதி: - ஈகை உள்ளவன், சுத்தன். 483. சதுஷ்பாத: - நான்கு கால்கள் உள்ளவன், நான்கு வேதங்களைக் கால்களாகக் கொண்டவன். 484. ஸ்வாத்மபந்தஹர:- ஆத்மபந்தத்தை (தடையை) போக்கடிப்பவன். 485. ஸ்வபூ:- தானே உண்டானவன், தன்னிடமிருந்து எல்லாவற்றையும்

உண்டு பண்ணினவன். 486. வசீ - எல்லாவற்றையும் வசமாக்கினவன் இந்திரியங்களை ஜயித்தவன், துக்கமற்றவன். 487, வரேண்ய: - வரிக்கப்பட்டவன், பூஜிக்கப்பட்டவன். 488. விதத: - நீண்டவன், வீணையைத் தரித்தவன். வீணையைத் தரித்த நடராஜர் உருவம் சில்பத்தில் கூறப்படுகிறது. 489. வஜ்ரப்ருத் - வஜ்ராயுதம் கொண்டவன். 490. வருணாத்மக:- வருணனின் வடிவன்.

(69) 491. சைதன்ய: -ஆத்மரூபி. 492. சித்சித்-ஆத்மானந்தத்தால் மாயையை அகற்றினவன். 493. அத்வைத: - இரண்டில்லாதவன். 494. சின்மாத்ர:-ஞானரூபி. 495. சித்ஸபாதிப:- திருச்சிற்றம்பலமுடையான், ஈசன். 496. பூமா - அனேகன், விவரிக்கமுடியாதவன். 497. பூதபதி: - பூதங்களுக்குப் பதியானவன். 498. பாவ்ய: - நித்யனுனபடியால் கருதத் தகுந்தவன். ஸாத்விகம் முதலிய பாவங்களை உண்டு பண்னினவன். 499. பூர்புவோவ்யாஹ்ருதிப்ரிய: - மூன்று உலகங்களைக் கூறுகிற மந்திரத்தில் பிரியமுள்ளவன்.

(70) 500. வாச்யவாசக நிர்முக்த: - பொருள், சொல் அற்றவன். 501. வாகீச: - பரா, பச்யந்தி, மத்யமா, வைகரீ என்னும் நான்குவித வாக்குகளுக்கு ஈசன், ப்ருஹஸ்பதி ரூபன். 502. வாககோசர: - சொல்லுக்கு அப்பாலான். 503. வேதாந்தக்ருத் - வேத வேதாந்தங்களை வெளியாக்குகிறவன், பிரளயத்தில் அவைகளை அடக்கிக் கொண்டவன். 504. துர்யபாத: - மூன்று அவஸ்தைகளுக்கு அப்பாலுள்ளவன். 505. வைத்யுத: - மின்னல் வடிவன். 506. ஸுக்ருதோத்பவ: - நற்காரிய பலத்தை உண்டு பண்ணுபவன்.

(71) 507. அசுபக்ஷயக்ருத் - அமங்களங்களைப் போக்கடிப்பவன். 508. ஜ்யோதி: - ஒளிரூபன். 509. அநாகாச: - ஆகாசம் முதலானவைகளுக்கு வேறுபட்டவன். ஸுவர்க்கத்தை விரும்பாதவன். 510. அவிலேபக: - மிகவும் மாயையால் உலகை மறைப்பவன். 511. ஆப்தகாம: - எல்லாப் பொருள்களையுமடைந்தவன். 512. அனுமந்தா-பிராணிகளின்

செய்கையை அனுமதித்தவன். 513. ஆத்மா - பரப்ரும்மம், ஸ்ரீ நடராஜர். 514. அகாம: - இச்சையற்றவன். 515. அபின்ன: - வேருகாதவன், பேதிக்கப்படாதவன். 516. அநணு: - சிறுமையற்றவன். 517. ஹர: - அடியவர்களின் பாவங்களை அகற்றுபவன். இச்சொல்லை ஓதுவாருக்கு பாபம் அணுகா. ஓதிக்கொண்டே மூழ்கில் கங்கையின் பலனும், உண்ணில் பிணியணுகா.

(72) 518. அஸ்நேஹ: - ஸ்நேஹமற்றவன். 519. ஸங்க நிர்முக்த: - ஒருவனிடமும் கூடாதவன், தனியன், "தான் தனியன் காணேடி" என்பது திருவாசகம். 520. அஹ்ரஸ்வ: - சிறுமையற்றவன். 521. அதீர்க: - பெரிதற்றவன், ரொம்பவும் உயரமில்லாதவன். 522. அவிசேஷக: - விசேஷமற்றவன், ஸாதாரணன், அடையாளமற்றவன். (அடியார்க்கெளியன்) 523. ஸவச்சந்த: - இஷ்டம் போலிருப்பவன். 524. ஸ்வச்சஸம்வித்தி: - அழகான ஞானவான், சுத்தஞானி. 525. அன்வேஷ்டவ்ய: - தஹராகாசத்தில், சிதம்பர திருச்சிற்றம்பலத்தில், தேடத்தகுந்தவன். 526. அச்ருத: - ஒருவராலும் கேட்கப்படாதவன். 527. அம்ருத: - மரணமற்றவன், மோக்ஷரூபன், அமிர்தரஸமயன்.

(73) 528. அபரோக்ஷ: - எல்லாவற்றையும் நேரில் பார்ப்பவன். 529. அவ்ரண: - சப்தம் அற்றவன், போரில் காயமற்றவன். 530. அலிங்க: - லிங்கமற்றவன். ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் என்னும் முப்பாலும் அற்றவன் 531. அவித்வேஷ்டா - ஒருவரிடமும் பகையில்லாதவன். 532. ப்ரேமஸாகர: - அன்புக்கடல். 533. ஞானலிங்க: - ஞானத்திற்கு அடையாளமானவன். 534. கதி: - எல்லோருக்கும் வழி அளிப்பவன் 535. ஞானீ - ஞானமுள்ளவன் 536. ஞானகம்ய: - ஞானத்தால் அடையத்தகுந்தவன். 537. அவபாஸக: - எல்லாவற்றையும் விளக்குபவன்

(74) 538. சுத்தஸ்படிகஸங்காச: - ஸ்படிகத்துக்கு ஒப்பான மேனியன், ஒவ்வொரு நாளும் ஆறு காலங்களிலேயும்

மூலாதாரம் முதலான ஆறு ஸ்தானங்களில் பரமனை ஸ்படிக லிங்கத்தில் பூஜிப்பதால் அவ்விதம் ஸ்படிக லிங்கத்தில் விளங்குபவன் என்றும் கூறுவர். 539. ச்ருதிப்ரஸ்துதவைபவ: - வேதங்களில் மிகவும் போற்றப்படுகிற சிறப்புடையவன். 540. ஹிரண்யபாஹு: - தங்கத்தைக் கையில் ஏந்தியவன், ஸவர்ணாகர்ஷண கணபதி, ஸ்வர்ணாகர்ஷண பைரவர் உருவன், பொன்னிறமான தோளை உடையவன். 541. சேனானீ: - சேனைகளை வகுப்பவன் அல்லது ஸ்கந்தன். 542. ஹரிகேச: - நீலவர்ணமான கேசத்தை உடையவன், பச்சிலை களைக் கூந்தலாய் உடையவன். 543. திசாம்பதி: - திக்கு களுக்கு ஈசன்.

(75) 544. ஸஸ்பிஞ்ஜர: - இளம்புல் நிறமுள்ளவன், வேள்வி த்ரோஹிகளைச் சிக்ஷிப்பவன். 545. பசுபதி: - பசுக் களுக்குப் பதியானவன். பசு என்பது இங்கு நான்கு கால்களு டைய பிராணிகள் மட்டுமின்றி இரண்டு கால்கள் உள்ளவை உள்பட எல்லா உயிர் வர்க்கத்தையும் குறிக்கும். பிரம்மா முதல் சிற்றெறும்பு வரை உள்ள அனைத்தும் உயிர்க் கூட்டங் களேயாகும். அவற்றைப் பரிபாலனம் செய்யும் தலைவர் பசு பதியான பரமேசுவரரேயாவர். 546. த்விஷீமான் - காந்தி யுள்ளவன். 547. அத்வனாம்பதி: - பத, புவன, வர்ண. தத்துவ, கலா, மந்த்ர என்று பிரித்து ஆகமங்களில் கூறப்பட்டுள்ள ஆறு அத்துவாக்களுக்கும் தலைவன் (அல்லது) சைவ, வைஷ் ணவ, சாக்த, வைநாயக, ஸௌர, ஷண்முக என்கிற ஆறு ப்ரஸ்தாரங்களுக்கும் பதியானவன். மார்கஸஹாயன் (வழி நடைக் காப்பவன்) 548. பப்லுச: - விருஷபத்தின் மேல் ஏறி யவன், பிங்கள வர்ணன்.. 549. பகவான்-ஐச்வர்யம், வீர்யம், யசஸ், ஸ்ரீ, ஞானம், வைராக்கியம் இவ்வாறு குணங்களும் பகம் எனப்படும். இவற்றை உடையவன் பகவான் எனப் படுவர். இச்சொல் சிவபெருமானைத் தான் (இங்கு ஸ்ரீநட ராஜரை) முக்கிய விருத்தியால் கூறும். மற்ற தேவதைகளைக் குறிக்கும்போது வெறும் உபசாரமேயாகும். 550. பவ்ய: -

அடியவர்களுக்கு எளியவன். 551. விவ்யாதின் - பசி ரூப மாக இருப்பவன், பிணி இல்லாதவன். (விரோதிகளுக்கு நோய் செய்பவன்) 552. விகதஜ்வர: - ஜ்வர ரோகத்தைப் போக்கடிப்பவன், ஜ்வராபக்ன மூர்த்தி.

(76) 553. அன்னானாம்பதி: - புசிக்கத்தகுந்த அன்னங்களுக்கு அல்லது ஓஷதிகளுக்கு ஸ்வாமி. 554. அத்யுக்ர: - மிகவும் உக்ரமானவன். 555. ஹரித்கேச: - திக்குகளைக் கேசங்களாக உடையவன் அல்லது திக்குகளில் பரந்த கேசங்களையுடையவன். 556. அத்வயாக்ருதி: - ஸஜாதீய விஜாதீய ஸ்வகதபேதமற்றவன். 557. புஷ்டானாம்பதி:- வாக், ஞானம், சரீரம், இந்த்ரியம், க்ஷேத்ரம், தனம், தான்யம், ப்ரஜை, பசு, கிராமம், தர்மம் என்கிற பதினொரு புஷ்டங்களுக்கும் ஸ்வாமீ. 558. அவ்யக்ர: - மிகவும் ஜாகரூகன். 559. பவஹேதி: - ஸம்ஸாரபந்தத்துக்கு ஆயுதம் போன்றவன். 560. ஜகத்பதி:- உலகத்துக்குக் கர்த்தா.

(77) 561. ஆததாவீ - நாண் ஏற்றின வில்லால் உலகைக் காப்பவன். 562. மஹாருத்ர: - மஹாப்ரளயத்தில் தாண்டவம் செய்யும் பெரிய உருத்திரன். 563. க்ஷேத்ராணாம் பதி: - சிதம்பரம் முதலிய புண்ய க்ஷேத்திரங்களுக்கு ஸ்வாமீ. சரீரங்களுக்கு அதிபதி. 564. அக்ஷய: - அழிவற்றவன். 565. ஸூத: - தேர்ப்பாகன், வேள்விச்சாலையில் பிழிகிற சோமக் கொடிரூபன். 566. ஸதஸ்பதி: - சித்ஸபை முதலிய ஸபைகளுக்கு ஸ்வாமி. 567. ஸூரி: - ஸூர்யன், வித்வான். 568. அஹந்த்ய: - சத்ருக்களால் கொல்ல முடியாதவன். 569. வனப: - காடுகளைக் காப்பவன், சாஸ்தாவின் வடிவன், ஐயப்ப சுவாமி. 570. அவர: - தனக்கு மேற்பட்டவன் அற்றவன்.

(78) 571. ரோஹித: — உலகுக்கு இனிமைச் சொற்களால் இதம் செய்பவன், சிவந்த மேனியன். 572. ஸ்தபதி:— உருவங்களை அமைப்பவன், எங்கும் இருந்து எல்லாவற்றையும் ரக்ஷிப்பவன். 573. விருக்ஷபதி: - மரங்களுக்கு எஜமானன்,

574. மந்த்ரீ — அரசபோதகன். ஸகல மந்திரங்களையும் அறிந்தவன், கூறினவன். 575. ஸுவாணிஜ:—நன்கு வியாபாரம் செய்பவன். 576. கக்ஷாதிப: — புல்பூண்டு முதலியவைகட்கு ஸ்வாமீ. அடவிகளுக்குப் பதி. 577. புவந்தீச: - உலகைப் படைக்கும் பிரமனுக்கும் ஈசன். 578. பவாக்ய: — பவன் என்ற பெயருள்ளவன். 579. வாரிவஸ்க்ருத: — பக்தர்களிடம் வசிப்பவன், தனத்தை அளிப்பவன், தனம் ஸம்பாதிப்பவர்களுக்குத் துணையாக இருப்பவன்.

(79) 580. ஓஷதீச: — ஓஷதிகளுக்குப் பதி, சந்திரன். 581. ஸதாமீச: — ஸத்புருஷர்களுக்கு ஈசன். 582. உச்சைர்கோஷ:—உரக்க ஒலி செய்பவர். கார்காலத்து மேக உருவன். (ப்ரதி ப்ரயோஜனம் எதிர்பாராது பொழியும் மேகம் போல பக்தர்கட்கு அருளைப்பொழிபவன் என்பதாம்) 583. விபீஷண:- மிகவும் பயமுறுத்துகிறவன். 584, பத்தீனுமதிப: — ஒரு ரதம், ஒரு யானை, ஐந்து காலாள், மூன்று குதிரைகள் இவைகளைக் கொண்ட யுத்த பத்தி வரிசைகளுக்கு நியாமகன். 585. க்ருத்ஸ்னவீத: — சரீரத்தைப் பூராவும் மறைத்துக் கொண்டவன். சேனைகளால் சூழப்பட்டவன். (எல்லா உலகங்களிலும் வ்யாப்தமானவன் என்றும் பொருள் உளது) 586. தாவன்—(பக்தர்களை ரக்ஷிப்பதற்காக) வேகமாகச் செல்லுபவன் (ஓடுபவன்). 587. ஸ: — இதன் உண்மைப் பொருள் பலவாருகச் சாத்திரங்கள் கூறும். தத்வமசி போன்ற வேதாந்த மஹா வாக்யங்களில் கூறப்பட்டுள்ள பிரஸித்தமான பரப்பிரம்மத்தை ஸ்ரீ நடராஜரைப் பொருளாகக் கொண்டது. இதன் விரிவு சிந்தாமணிப் பேருரையிற் கூறப்பட்டுள்ளது. 588. ஸத்வப:- ஸத்துவ குணத்தைக் கொண்டு காப்பவன்.

(80) 589. ஸஹமான: — எல்லாவற்றையும் (பக்தர்களின் குற்றங்களையும்) பொறுக்கின்றவன். விரோதிகளை அடக்குகிறவன். 590. ஸத்யதர்மா — ஸத்யத்தையே தர்மமாகக் கொண்டவன். 591. நிவ்யாதீ — அடியவர்களின் விரோதிகளைத் தண்டிப்பவன், ரோகமில்லாதவன். 592.

நியம: - மிகவும் அடக்குபவன். 593. யம: - யமனின் வடிவன். 594. ஆவ்யாதிபதி: – அனைவரையும் எதிர்த்து அடிக்கும் சக்தி வாய்ந்த வீரசேனைகளுக்குப் பதி. 595. ஆதித்ய: - சூரியன் உருவன். 596. ககுப: - விருஷபத்தில் விளங்குபவன், திக்கு களின் வடிவன், திருடர்களில் சிறந்தவன், சோபை உள்ளவன் சண்பகமாலை அணிந்தவன், உத்ஸாகமுள்ளவன், (கைலாச) சிகரத்தை இருப்பிடமாகக் கொண்டவன் இவ்வாறு பல பொருள்கள் இச்சொல்லுக்கு உள. 597. காலகோவித: — காலங்களை நன்கு அறிந்தவன்.

(81) 598. நிஷங்கீ - கையில் கத்தியைப்பிடித்தவன். 599. இஷுதிமான் - அம்பருத்தூணியை உடையவன். (திரி புரஸம்ஹார ஸமயத்தில் சமுத்திரமே இறைவனுக்கு அம்பருத் தூணியாக அமைந்தது) 600. இந்த்ர: - மிகுந்த ஐச்வர்யம் உள்ளவன். மற்றெல்லாத் தேவதைகட்கும் பிரபு. ஸ்ரீ பரமேச்வரன். 601. தஸ்கராணுமதீச்வர: - எல்லோரும் பார்த்துக் கொண்டு இருக்கும்போதே திருடும் திருடர்களுக்கு ஈசன் அல்லது காளி முதலான உக்ரதேவதைகளுக்கு நாயகன். 602. நிசேருக: - மிகவும் நடக்கிறவன். 603. பரிசர: - நான்கு பக்கங்களிலும் ஸஞ்சரிக்கின்றவன். அல்லது யுத்தத்தில் ஸேனைகளின் நடுவில் இருப்பவன். 604. அரண்யாணும்பதி: - காடுகளுக்கு ஈசன். 605· அத்புத: - ஆச்சரியவடிவன்.

(82) 606. ஸ்ருகாவீ - வஜ்ரமணிந்து காப்பவன். 607. முஷ்ணதாம்நாத: - வயல்களில் தான்யங்களைத் திருடுகின்ற வர்களுக்கு நாதன். 608. பஞ்சாசத்வர்ண ரூபப்ருத் - அகாரம் முதல் க்ஷகாரம் இறுதியான எழுத்துக்களின் வடிவன். 690. நக்தஞ்சர: - இரவில் சஞ்சரிப்பவன். 610. ப்ரக்ருந்தாணும் பதி:-இரவில் பிராணிகளை மிகவும் ஹிம்சித்துப் பொருள்களைத் திருடுகிறவர்களுக்கு நாயகன். 611. கிரிசர: - மலைகளில் ஸஞ்சரிப்பவன் அல்லது ஸந்நியாஸிகளோடு ஸஞ்சரிப்பவன். 612. குரு: - எங்கும் எல்லோருக்கும் எல்லாவற்றையும் உப தேசிப்பவன், பெரியவன், ப்ருஹஸ்பதி.

(83) 613. குலுஞ்சாஹம்பதி: - வீடு நிலம் இவைகளை அபஹரிக்கின்றவர்களுக்கு ஸ்வாமீ. 614. கூப்ய: – கிணற்றிலுள்ள ஜலரூபன். 615. தன்வாவீ-வில்லைத் தரித்தவன் 616. தனதாதிப: - குபேரனை நியமிப்பவன். 617. ஆதன்வான:- வில்லில் நாண் ஏற்றுகிறவன். 618. சதானந்த: – மனிதன் முதல் பிரம்மாவரை உள்ளவர்களின் ஆனந்தங்களை அபேக்ஷித்து நூறுபங்கு அதிகமுள்ள ஆனந்தத்தை உடையவன். சதானந்தர் என்கிற முனிவரில் உருக்கொண்டவன். 619 க்ருத்ஸ: - விஷயங்களில் ஆசையுள்ளவன், மேதாவீ. 620. க்ருத்ஸபதி: - விஷயங்களில் ஆசையுள்ளவர்களின் தலைவன். மேதாவிகளுக்கு ஸ்வாமியானவன். 621. ஸுர: - எல்லாவற்றையும் உண்டு பண்ணுபவன், ஸுரா என்னும் சக்தியை உடையவன்.

(84) 622. வ்ராத: - பல தொழில்களை இயற்றும் பல இனக் கூட்டமானவன். 623. வ்ராதபதி: - அக்கூட்டங்களுக்கு நாயகன். 624. விப்ர: - பிராம்மணன். (பரமனைத் தான் வேதம் பிராமணன் என்கிறது) 625. வரீயான் - மிகவும் பெரியவன். 626. க்ஷுல்லக: - பசியை அகற்றுபவன். 627. க்ஷமீ-எல்லாவற்றையும் பொறுப்பவன். 628. பில்மீ - போர் செய்யுங்காலத்தில தலையை ரக்ஷிக்கும் தலைப்பாகையுடன் கூடியவன். விபூதி பாத்திரம் தரித்தவன். (பில்வீ என்ற பாடபேதத்தில் பில்வதளங்களை அணிந்தவன் என்று பொருள்) 629. வரூதீ - கவசம் அணிந்தவன், ஆபத்துற்றபோது தேர்ப் பாகனை காக்க உள்ள ஓர் இடம் வரூதம். அதையுடையவன் வரூதி. 630. துந்துப்ய: - துந்துபி என்னும் வாத்தியத்தில் ஒலியாக உண்டானவன். 631. ஆஹனன்ய: - மேற்படி வாத்தியத்தை அடிக்கிற கோலில் (தண்டத்தில்) உள்ளவன். 632. ப்ரமர்சக: - எல்லாம் அறிபவன், உத்தம சுவாபாவம் உள்ளவ்ன், சாதிரிகளின் ரஹஸ்யங்களை நன்கு அறிந்தவன்.

(85) 633. த்ருஷ்ணு: - யுத்தத்தில் புறங்காட்டாதவன், தைரியத்தை உடையவன். 634. தூத: - ஸந்தேகங்களை

அறிவிப்பவன். அம்பிகைக்குத் தூதனாக அமைந்ததைத் தேவீ பாகவதத்திலும், சுந்தரமூர்த்தி நாயனார் பொருட்டுப் பரவை நாச்சியாரிடம் தூதுசென்றதை சேக்கிழார் அருளிய பெரிய புராணத்திலும் காணலாம். 635. தீக்ஷ்ணதம்ஷ்ட்ர: - கூர்மை யான நீண்ட பற்களை உடையவன். 636. ஸுதன்வா - அழ கிய (சிறந்த) வில்லையுடையவன். 637. ஸுபக: - அழகான சரித்திரம் வாய்ந்தவன். 638. ஸுகீ - எப்போதும் ஸுகத் தோடு இருப்பவன். 639. ஸ்ருத்ய: - காலால் ஸஞ்சரிக்கக் கூடிய வழியில் (வரப்பு முதலிய ஒற்றையடிப்பாதைகளில்) அடியவர்களைக் காக்க வேண்டி இருப்பவன். 640. பத்ய: - ரதங்களைச் செலுத்தக்கூடிய பெரிய வழிகளில் இருப்பவன். வியாதிகளின் நீக்கத்தின் பொருட்டு பத்தியமாய்ப் புசிக்கத் தகுந்த வஸ்துக்களின் வடிவன். 641. ஸ்வதந்த்ரஸ்த: - ஒரு வரையும் அபேக்ஷிக்காமல் எல்லாவற்றையும் தானே செய்து கொண்டு இருப்பவன். 642. காட்ய: - சொற்பஜலம் ஓடும் சிறிய வாய்க்காலில் இருப்பவன் 643. நீப்ய: - நீர்வீழ்ச்சி ரூபன், நீர்வீழ்ச்சியில் இருப்பவன், அடப்பை விருக்ஷத்தில் உண்டானவன், திருவாலவாயுடையான். 644. கரோடிப்ருத்- மண்டை ஓட்டை ஏந்தியவன்.

(86) 645. ஸூத்ய: - சேருன இடத்தில் உண்டானவன், 646. ஸரஸ்ய: - மானஸம் முதலிய ஸரஸ்களில் உண்டான வன், அவைகளின் நீர் வடிவன். 647. வைசந்த: - சிறு குளங் கள், குட்டைகளில் இருப்பவன், உண்டானவன். 648. நாத்ய: - சப்தங்களில் அல்லது நதிகளில் உண்டானவன். 649. அவட்ய: - பொந்நில் உண்டானவன். ஜலப்பிரளயத்தில் ஆலிலையில் துயின்ற திருமாலின் அகந்தையையடக்க வேண்டி வைரவ உருத்தாங்கினவன். 650. ப்ரவர்ஷஜ: - வெகு வரு ஷங்களுக்கு முன் உன்டானவன். முத்து முதலான உருவன். ப்ரவர்ஷுக: என்னும் பாடத்தில் அதிக மழை உண்டு பண்ணும் மேக உருவன். 651. வித்யுத்ய: — மின்னலில் உண்டானவன் (உள்ளவன்) 652. விசத: - வெளுத்த மேனி யன், 653, மேக்ய: - மேகங்களில் உண்டானவன், 654,

ரேஷ்மிய:-பிரளயத்தில் மண், கல், மழை ரூபமாக உண்டான வன். 655 வாஸ்துப: - வீடுகளைக் காப்பாற்றுபவன். 656. வஸு: - செல்வம் அல்லது மதுரரஸம், அதன் உருவன்.

(87) 657. அக்ரேவத: - போரில் நேராக நின்று சத்துருவைக் கொல்லுபவன். 658. அக்ரேஸம்பூஜ்ய: - முதலில் பூசிக்கத் தகுந்தவன். 659. ஹந்தா — சிக்ஷிப்பவன். 660. தார:-தாண்டுபவன், தாண்டவைப்பவன், பிரணவ ஸ்வரூபன் 661. மயோபவ: - ஸுகத்தை உண்டுபண்ணி வைப்பவன். 662. மயஸ்கர: - சுகத்தைச் செய்பவன். (ஆசார்யர்களின் வடிவில் நின்று மோக்ஷ இன்பத்தை அளிப்பவன்). 663. மஹாதீர்த்ய: - பெரிய புண்ணிய தீர்த்தங்களில் உதித்தவன். 664. கூல்ய: - நதி தீரங்களில் உண்டானவன். 665. பார்ய:- கரைகளில் உண்டானவன். 666. பதாத்மக: - சொல் உருவன்.

(88) 667. சங்க: - ஸுகங்களை அடைவிப்பவன். 668. ப்ரதரண: - உயர்ந்த கப்பல் முதலியவைகளின் ரூபன். 669. அவார்ய: - தடுக்க முடியாதவன். 670. பேன்ய: - நுரையில் உண்டானவன். 671. சஷ்ப்ய: - சிறு புற்களில் உண்டானவன். 672. ப்ரவாஹஜ: - ஆற்றின் பெருக்கில் உதித்தவன். 673. முனி: - முனிவடிவன். 674. ஆதார்ய: - காம்ய கர்மாக்களால் உண்டாகும் தீங்குகளிலிருந்து காப்பாற்றுபவன். 675. ஆலாத்ய: - ஸுவர்க்கத்தில் உண்டானவன். 676. ஸிகத்ய: - மணல் குன்றுகள் உள்ள தேசங்களில் உதித்தவன். 667. கிம்சிலாபித: - சிறிய கற்கள், சுக்கான்கள், ஸ்படிகம், பனிக்கட்டி இவைகளின் ஸந்தேகத்தை உண்டு பண்ணுகிற ப்ரதேசத்தில் இருக்கிறபடியால் அப்பெயர் உள்ளவன்.

(89) 678. புலஸ்தி: - எல்லாவற்றுக்கும் முன் இருப்பவன். 'புலஸ்த்ய:' என்ற பாடத்தைக் கொண்டால் அப்பெயர் உள்ள முனி ரூபன். 679. க்ஷயண: - எல்லாவற்றையும் நசிக்கும்படிச் செய்பவன். 680. க்ருஹ்ய: - மனையில்

இருப்பவன். 681. கோஷ்ட்ய: - கோசாலையில் உதித்தவன். 682. கோபரிபாலக: - பசுக்களை ரக்ஷிப்பவன். 683. சுஷ்க்ய:- நீரற்றவைகளில் உண்டானவன். 684. ஹரித்ய: - நீருள்ள வைகளில் உண்டானவன். 685. லோப்யாக்ய: - கடினப் பிரதேசத்தில் உண்டானவன். 686. ஸூர்ம்ய: - அழகான அலைகளில் உதித்தவன். 687. பர்ண்ய: - இலைகளில் உதித் தவன். 688. அணிமாதிபூ: - அணிமாதி ஸித்திகளின் இருப் பிடமானவன்.

(90) 689. பர்ணசத்ய: - சருகுகளில் உண்டானவன். 690. ப்ரத்யகாத்மா: - அந்தராத்மா, ஸ்ரீ நடராஜமூர்த்தி. இதன் அர்த்தங்கள் சாஸ்திரங்களில் வெகுவாகக் கூறப்பட் டுள்ளன. 691. ப்ரஸன்ன: - நிர்மலன், யானைக்கன்றின் உருவன். 692. பரமோன்னத: - மிகவும் உயர்ந்தவன். 693. சீக்ரிய: - சீக்கிரமாகச் செல்லுபவன். 694. சீப்ய: - ஜலப்பிர வாஹத்தில் உதித்தவன். 695. ஆனந்த: - ஆனந்த உருவன் 696. க்ஷயத்வீர: - போரில் சத்துருக்களின் ஸேனை வீரர்களை அழிப்பவன். 697. க்ஷராக்ஷர: - ஸர்வ பூதங்களுக்கும் கூடஸ்தன் (வம்சத்தலைவன்).

(91) 698. பாசிபாதகஸம்ஹர்த்தா - வருணனின் பாத கத்தையகற்றினவன். (இக்கதையை கோயிற் புராணம் கூறும்) 699. தீக்ஷ்ணேஷு: - கூரிய அம்பையுடையவன். 700. திமிராபஹ: - இருளை நீக்குபவன். கண்ணோய் போக் கடிப்பவன். (தேஜோமயன்). 701. வராபயப்ரத: - இனி பயமில்லை எனகிற ஸந்தேகமற்ற தன்மையை அளிப்பவன். வரம், அபயம் என்கிற திருக்கரங்களை உடையவன். 702. ப்ரம்மபுச்ச: - ஜீவனுக்கு ஆதாரமான பிரம்ம ரூபன். ஸ்ரீ நட ராஜ மூர்த்தி, இதன் விரிவு விளக்கத்தை வேதாந்த சாஸ்திரத் தில் ஆனந்தமயாதிகரணத்தில் கண்டு கொள்க. 703. ப்ரம்ம விதாம்வர: - பிரம்மஞானிகளுக்குள் சிறந்தவன்.

(92) 704. ப்ரம்ஹவித்யாகுரு: - பிரம்ம வித்யைக்கு ஆசாரியன். 705. குஹ்ய: -ரஹஸ்யமானவன், இதய குகையில்

இருப்பவன். 706. குஹ்யைகஸ்ஸமபீஷ்டுத: - குஹ்யகர்களால் நன்கு துதிக்கப்படுபவன். (குஹ்யகர்கள் என்பவர்கள் ஒருவகைத் தேவசாதியைச் சேர்ந்தவர்களாவர்) 707. க்ருதாந்தக்ருத் - இயமனை உண்டுபண்ணினவன், செய்ததை மாற்றுபவன். 708. க்ரியாதார: - க்ரியா சக்திக்கு ஆதாரமானவன். வினைச்சொற்களுக்குக் காரணமானவன், தாதுரூபன். 709. க்ருதீ - உயர்ந்த கர்மாவைச் செய்தவன். 710. க்ருபணரக்ஷக: - ஈகையற்றவனையும் ரக்ஷிப்பவன். க்ருபணன் என்னும் பெயருள்ள கந்தர்வனைக் காத்தவன். ஏழையைக் காப்பவன்.

(93) 711. நைஷ்கர்ம்யத: - ஒருபொழுதும் ஒரு காரியத்தையும் செய்யாமலிருப்பவன். அத்தன்மை பிரம்ம நிஷ்டை எனப்படும். 712. நவரஸ: - ஒன்பது விதமான ரஸங்களின் உருவன், அவைகளைத் தனது தாண்டவத்தில் காண்பிப்பவன். ரஸங்களான - சிருங்காரம், வீரம், கருணை, அத்புதம், ஹாஸ்யம், பயம், பீபத்ஸம், ரௌத்திரம், சாந்தம் என்பனவாம். 713. த்ரிஸ்த: - மூன்று அவஸ்தைகளிலும் முத்தொழிலிலும் இருப்பவன். 714. த்ரிபுரபைரவ: - முப்புரம் அழிக்க வேண்டி வயிரவனின் உருக்கொண்டவன். 715. த்ரிமாத்ருக: - மூன்று விதமான மாத்ருகாக்ஷரங்களை உடையவன். தேவமாத்ருகம், நதீமாத்ருகம், ஸ்தலமாத்ருகம் என்கிற மூன்று வகையான பூப்பிரதேசங்களின் உருவன். தேவமாத்ருகமாவது மழையினுல் விளையும் பூமி. நதீமாத்ருகமாவது நதிகளால் விளையும் பூமி. ஸ்தல மாத்ருகமாவது இவ்விரண்டுமின்றி விளையும் பூமி. 716. த்ரிவ்ருத்ரூப: - அண்டஜ, ஜீவஜ, உத்ப்பிஜ உருவந்தாங்கினவன். அண்டஜமாவது முட்டையிற் பிறப்பன. ஜீவஜமாவது புருஷன், பசு முதலியவை. உத்ப்பிஜமாவது மரம் முதலியவை. ஜராயுஜம், ச்வேதஜம் இவைகளுக்குட்பட்டவை. 717. த்ருதீய: - மூன்ருவதானவன், உருத்திரன். 718. த்ரிகுணதிக: - முக்குணங் கடந்தவன்.

(94) 719. த்ரிதாமா - மூவுலகிலும் ஆலயங்கொண்ட வன். 720. த்ரிஜகத்ஹேது: - மூன்று உலகங்களுக்கும் காரணன். 721. த்ரிகர்த்தா - முத்தொழிலைச் செய்பவன் 722. திர்யகூர்த்வக: - ஹம்ஸம் கருடன் முதலியவைகளை வாஹனமாகக் கொண்டவன். குறுக்காக மேலே செல்பவன். ஊர்த்வமூர்த்தி. 723. ப்ரபஞ்சோபசம: - உலகை மறைப் பவன். 724. நாமரூபத்வய விவர்ஜித: - பெயர் உருவம் என்னும் இரண்டுமற்றவன்.

(95) 725. ப்ரக்ருதீச: - மூலப்ரக்ருதிக்கு ஈசன். 726. ப்ரதிஷ்டாதா - எல்லாவற்றையும் நிலைநிறுத்துபவன். 727. ப்ரபவ: - எல்லாவற்றையும் தோற்றுவிப்பவன். 728. ப்ரமத: - பிரமதகணரூபன். ப்ரதம: என்னும் பாடங்கொண்டால் முதற்பொருள் என்று அர்த்தம். 729. பதீ - நல்வழியான வன். ப்ருது: எனப் பாடங்கொண்டால் பெரியது என்று பொருள்படும். 730. ஸுநிச்சிதார்த்த: - மெய்யான பயனை அளிப்பவன். 731. ராத்தாந்த: - முடிவுப் பொருள். 732. தத்வமர்த்த: - மஹா வாக்யத்திலுள்ள தத்த்வம் பதத்திற்கு ஜீவனைக் காட்டிலும் வேறுபடாதபொருள். 733. தப: - தவத் தின் உருவன். 734. நிதி: - பக்தர்களின் மனதில் விளங்கு பவன், கருவூலம்.

(96) 735. ஹித: - எல்லோருக்கும் அனுகூலன். 736. ப்ரமாதா - எல்லாவற்றையுமளப்பவன். 737. ப்ராக்வர்த்தீ - ஸ்ருஷ்டிக்கு முன்னுள்ளவன். 738. ஸர்வோபநிஷதாச்ரய: - எல்லா உபநிஷதங்களாலும் போற்றப்பட்டவன். 739. விச்ருங்கல: - தடையற்றவன். 740. வியத்தேது: - ஆகாசத் திற்கு காரணமானவன். 741. விஷம: - ஒப்பற்றவன். 742. வித்ருமப்ரப: - பவளமேனியன். (பவளம் போல் மேனி என்பது அப்பர் வாக்கு)

(97) 743. அகண்டபோத: - பரந்த அறிவினன். 744. அகண்டாத்மா - பரந்த உருவினன். 745. கண்டாமண்டல மண்டித:-மணிமாலை பூண்டவன், நிறைந்த மணிகள் சூழ்ந்த

கோயிலான். 746. அனந்தசக்தி:- அளவற்ற பராக்கிரமம் உள்ளவன். வாமா, ஜ்யேஷ்டா முதலிய கணக்கற்ற சக்திகளோடு கூடியவன். 747. ஆசார்ய: - மந்திரங்களுக்கு உரை எழுதினவன். 748. புஷ்கர: - ஆகாசம், ஜலம், அப்பெயருள்ள யோகம், அப்பெயருள்ள தீர்த்தம் இவைகளின் வடிவன். 749. ஸர்வபூரண: - எல்லாவற்றையும் வியாபித்தவன்.

(98) 750. புரஜித்: - முப்புரத்தை ஜயித்தவன். 751. பூர்வஜ: - ஆதியில் தோன்றினவன். 752. புஷ்பஹாஸ: - புஷ்பம் போல் வெளுத்த சிரிப்புடையவன். 753. புண்ய பலப்ரத: - புண்யப்பயனை அளிப்பவன். 754. த்யானகம்ய: -தியானத்தினால் அடையத் தகுந்தவன். 755. த்யாத்ருரூப: - தியானிக்கின்றவன் உருவன். 756. த்யேய: - தியானிக்கத் தகுந்தவன். 757. தர்மவிதாம்வர: - தர்மங்களை அறிந்தவர்களில் சிறந்தவன்.

(99) 758. அவச: - ஒருவனுக்கும் வசமாகாதவன். 759. ஸ்வவச: - தனக்கே வசமானவன். 760. அஸ்தாணு: - ஸ்தாணுவாகாதவன். 761. அந்தர்யாமீ: - எல்லா உள்ளங்களிலுமிருப்பவன். 762. சதக்ரது: - வெகு வேள்விகள் உள்ளவன், அவைகளுக்கு ஈசன். 763. கூடஸ்த: - எல்லாவற்றுக்கும் ஆதியன், வம்சத் தலைவன். 764. கூர்மபீடஸ்த: - கூர்மாஸநத்தமர்ந்தவன். பூமியில் உள்ள ஐம்பத்தோரு பீடங்களில் விளங்குபவன். 'கூர்ம' என்பது 51 எண்களைக் குறிக்கும். 765. கூச்மாண்டக்ரஹமோசக: - கூச்மாண்டம் முதலான பூதங்களின் பாதைகளை அகற்றுபவன்.

(100) 766. கூலங்கஷக்ருபாஸிந்து: - அதிகமான கருணையுள்ளவன். கருணாஸாகரம். 767. குசலி - க்ஷேமத்தோடு இருப்பவன். குசல: என்னும் பாடத்தில் க்ஷேமரூபன். 768. குங்குமேச்வர: - குங்குமப்பூ முதலான வாசனைகளுக்கு ஈச்வரன். 769. கதாதர: - கதையென்னும் ஆயுதம் தரித்தவன்.

770. கணஸ்வாமீ - தத்துவங்கட்கு எஜமானன் தத்துவங்களாவன-அவ்யக்தம், மஹத், அஹங்காரம், பஞ்ச தன்மாத்திரைகள், கர்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, மனஸ், பஞ்சபூதங்கள், ஜீவன், ஆத்மா என்பவை. இதில் ஆத்மாதான் எல்லாவற்றுக்கும் ஸ்வாமீ. 771. கரிஷ்ட: - மிகவும் ஸ்தூலமானவன். 772. தோமராயுத: - தோமரம் (ஈட்டி) என்னும் ஆயுதம் தரித்தவன்.

(101) 773. ஜவன: - வேகமுள்ளவன், வாயுரூபி. 774. ஜகதாதார: - உலகுக்கு ஆதாரமானவன். பூமிக்கு மூலாதாரமான க்ஷேத்ரபூமி, திருவாரூர். 775. ஜமதக்னி: - ஜ்வலிக்கின்ற தீ ஏந்தினவன், அப்பெயருள்ள முனிரூபன். 776. ஜராஹர: - கிழத்தனத்தைப் போக்கடிப்பவன். ஜரா என்ற பெயருடைய அரக்கியை அழித்தவன். 777. ஜடாதர:- சடைகளைப் பூண்டவன், 778. அம்ருதாதார: - அம்ருதத்துக்கு இருப்பிடம், பாற்கடல். 779. அம்ருதாம்சு: - குன்றுத ஒளியுடையவன். 780. அம்ருதோத்பவ: - மோக்ஷத்துக்கு இடமானவன்.

(102) 781. வித்வத்தம: - பெரிய புலவன். 782. விதூரஸ்த: - வெகு தூரத்தில் இருப்பவன். 783. விச்ரம: - சிரமமற்றவன். 784. வேதனுமய: - அறிவுமயமானவன். வேதங்களில் கூறப்பட்டுள்ள நாமாக்களுள்ள இந்நாமஸாஹஸ்ரத்தால் பூஜிப்பவனுக்கு இஷ்டங்களை அளிப்பவன். 785. சதுர்புஜ: - நான்கு கரங்களையுடையவன். 786. சததனு: - அனேக உருக்கொண்டவன், நூற்றெட்டு விதங்களான தாண்டவ மூர்த்திகளின் வடிவங் கொண்டவன். 787. சமிதாகிலகௌதுக: - அகற்றின இதர உருவ அழகன். அதாவது, ஸ்ரீ நடராஜரின் தரிசனத்தினுல் உண்டான ஆனந்தத்தை அபேக்ஷித்து மற்ற மூர்த்திகளின் தரிசனுனந்தம் தாழ்வு எனக்கருத்து.

(103) 788. வௌஷட்கார: - வேள்வியில் அவியை நல்கும் மந்த்ரரூபன். கண்களை ரக்ஷிப்பவன். ஆகர்ஷண ஸித்தியை அளிப்பவன். 789. வஷட்கார: - வேள்வி செய்பவன்,

பிரஜாபதி ரூபன், சிகா ரக்ஷகன், வசிய ஸித்தி அளிப்பவன். 790. ஹுங்கார: - சத்ருக்களை அடக்கவேண்டி ''ஹும்'' என்று சப்திப்பவன். சத்ருக்களில் பரஸ்பரம் துவேஷம் உண்டு பண்ணுவிப்பவன். 791. பட்கர: - அக்னியின் தேஜோ ரூபி. 792. படு: - எல்லா விஷயங்களிலும் ஸமர்த்தன். 793. ப்ரம்மிஷ்ட: - பிரம்மநிஷ்டை உள்ளவன், பிரமத்தில் நிலைத்தவன் உருவன். 794. ப்ரம்மஸூத்ரார்த்த: - வேதாந்த ஸூத்திரங்களுக்குப் பொருளானவன். 795. ப்ரஹ்மஜ்ஞ: - பிரம்ம ஞானி. 796. ப்ரஹ்மசேதன: - பிரம்மத்துக்கு வேருகாதவன், பஞ்சப் பிரம்மமயன்.

(104) 797. காயக: - பாடுகிறவன் அல்லது ஸாமகாயி. 798. கருடாரூட: - கருடவாஹனன். கருடசயனமென்னும் வேள்வித்தீயின் நடுவில் இருப்பவன். 799. கஜாஸுரவிமர்தன: - கஜாஸுரனைக் கொன்றவன். அஷ்ட வீரட்டஸ்தலங்களில் ஒன்ருகிய திருவழுவூரில் உள்ள ஈச்வரன். 800. கர்வித: - (அதனுலேயே) கர்வங்கொண்டவன். 801. ககனுவாஸ: - ஆகாயத்தில் வசிப்பவன். 802. க்ரந்தித்ரய விபேதன: - மூலாதாரம் முதல் ஆக்ஞாஸ்தானம் வரை பிரம்ம, விஷ்ணு, ருத்ர கிரந்திகள் என்று சொல்லப்படுகிற குண்டலி சக்தியின் மூன்று முடிச்சுகளை அவிழ்ப்பவன்.

(105) 803. பூதமுக்தாவலீதந்து: - முத்துப் போன்ற பூதங்களுக்கு நூலானவன். 804. பூதபூர்வ: - முன்பே உண்டானவன். 805. புஜங்கப்ருத் - பாம்புகளைத் தரித்தவன். 806. அதர்க்ய: - ஊகிக்கமுடியாதவன். 807. ஸுகர: - சிரமமின்றி எல்லாவற்றையும் செய்கிறவன். அழகான கைகளுள்ளவன். 808. ஸார: - ஸாரரூபன், ஸ்திரமானவன். 809. ஸத்தாமாத்ர: - பேதம் அற்றவன், ஸித்தமாக இருப்பவன். 810. ஸதாசிவ: - எப்பொழுதும் மங்களத்தைச் செய்பவன். அனுக்கிரஹத் தொழிலதிபதியான்.

(106) 811. சக்திபாதகர:-தியானயோகத்தில் ஆனந்தக் கண்ணீர், உரோமாஞ்சம், முதலிய அவஸ்தைகளை அளிப்பவன். 812. சக்த: - எல்லாவற்றிலும் திறமையுள்ளவன்,

சக்திக்கு ஆதாரமானவன். 813. சாஸ்வத: - கூடுதல் குறைவின்றி எப்பொழுதும் ஒரேபடித்தாக நிச்சயமாக இருப்பவன் 814. ச்ரேயஸாம்நிதி: - அதிகப் புகழ் வாய்ந்தவன். 815. அஜீர்ண: - பிரளயத்தில் யாவற்றையும் விழுங்கி மிகவும் ஜீரணம் செய்விப்பவன். 816. ஸுகுமார: - அழகான மைந்தர்களுள்ளவன். 817. அந்ய: - எல்லாவற்றிற்கும் வேருனவன், ஒப்பற்றவன். 818. பாரதர்சீ - முடிவு கண்டவன். 819. புரந்தர: - சத்ரு நகரங்களை அழிப்பவன்.

(107) 820 அநாவரணவிஜ்ஞான: - ஸ்வயம்பிரகாசம், ஞான ஒளி. 821. நிர்விபாக: - அகண்டமானதால் பிரிக்கத் தகாதவன். 822. விபாவஸு: - ஒளிப்பொருளன், சந்த்ர சூர்யாக்னி ரூபன். 823. விஜ்ஞானமாத்ர: - விஜ்ஞானரூபன் விசேஷ ஞானத்தால் அறியத்தகுந்தவன். 824. விரஜா: - ரஜோ குணமற்றவன், அழுக்கற்றவன். 825. விராம: - மிகவும் யோகிகள் இதயத்தில் கிரீடிப்பவன், பரசுராமன் ஸ்ரீ ராமன், பலராமன் இவர்களால் மிகவும் போற்றப்பட்டவன். தாருகாவன முனி மங்கையர்களோடு கூடினவன். 826. விபுதாச்ரய: - வித்வான்களால் போற்றப்பட்டவன்.

(108) 827. விதக்த முக்தவேஷாட்ய: - அடியவர்களுக்கு அருள் புரிய வேண்டி சாதுர்யமும் அழகும் கொண்ட உருவன் 828. விச்வாதீத: - ஜாக்ரதாவஸ்தைக்கு மேலானவன், ப்ராஜ்ஞன். 829. விசோகத: - ஸந்தோஷத்தை அளிப்பவன். 830. மாயாநாட்ய விநோதஜ்ஞ: - எவள் இல்லையோ அவள் மாயை அல்லது காளி. அவளுடைய நாட்டிய விநோதங்களை அறிந்தவன். 831. மாயாநடனசிக்ஷக: - அம்மாயையை (காளியை) தனது கூத்திஞல் சிக்ஷித்தவன்.

(109) 832. மாயாநாடகக்ருத் - மாயையின் நாடகத்தைச் செய்தவன். 833. மாயீ - மாயையைக் கைக்கொண்டவன். 834. மாயாயந்த்ர விமோசக: - மாயையின் நியமனத்தைப் போக்கடிக்கிறவன் (அல்லது) ஸ்ரீசக்கரத்தில் தனது உருவின் அமைப்பால் நான்கு ஆவரணங்களை விடுவிப்பவன்.

இந்த யந்திரத்தின் அமைப்பு முறைகள் சிதம்பர ரகசியம் முதலிய வடமொழி நூல்களிலும், திருமந்திரத்திலும் கூறப் பட்டுள்ளன. 835. வ்ருத்திக்ஷய விநிர்முக்த: - வளர்ச்சி தளர்ச்சி அற்றவன். சூதகாசௌசம் அற்றவன். 836. வித்யோத: - மிகவும் எல்லாவற்றையும் விளங்கச் செய்பவன். 837. விச்வவஞ்சக: - உலகை வஞ்சிப்பவன்.

(110) 838. காலாத்மா - காலரூபீ. 839. காளிகாநாத: - காளிகாதேவியின் பதி. 840. கார்க்கோடக விபூஷண: - கார்க்கோடகன் என்னும் பாம்பை பூஷணமாகக் கொண்ட வன் அல்லது வில்வபத்திரங்கள் அணிந்தவன். 841. ஷடூர் மிரஹித: - அசனு, பிபாஸா முதலிய ஆறு தர்மங்கள் அற்ற வன் 842. ஸ்தவ்ய: - போற்றத்தகுந்தவன். 843. ஷட்குணைச் வர்யதாயக: - ஆறு குணங்கள். எட்டு ஐச்வர்யங்கள் இவற்றையளிப்பவன்.

(111) 844. ஷடாதாரகத: - மூலாதாரம் முதலிய ஆறு ஸ்தானங்களில் விளங்குபவன். தஹரவித்யா மந்த்ரோ பாஸ்யன். இதன் விவரம் சிதம்பர ரஹஸ்யம் தஹர வித்யை யில் கூறப்பட்டுள்ளது. 845. ஸாங்க்ய: - அப்பெயருள்ள முனிரூபன். 846. ஷடக்ஷரஸமாச்ரய: - ஷடக்ஷரங்களால் ஆச்ரயிக்கப்பட்டவன். ஷடக்ஷரம் என்பது பிரணவத்தோடு கூடிய பஞ்சாக்ஷரம். 847. அநிர்தேச்ய: - நிர்ணயம் பண்ண வொண்ணுதவன். 848. அநில: - வாயு அல்லது அப்பெய ருள்ள வஸு ரூபன், 849. அகம்ய : - அடைய முடியாதவன். 850. அவிக்ரிய: - வேறுபாடற்றவன். 851. அமோகவைபவ: - வீணுகாத வைபவமுடையோன்.

(112) 852. ஹேயாதேய விநிர்முக்த: - வேண்டாமை வேண்டுதல் இல்லான். 853. ஹேலாகலிததாண்டவ: - விளையாட்டுகந்த கூத்தன். 854. அபர்யந்த: - எல்லையற்ற வன். 855. அபரிச்சேத்ய: - தேச காலங்களால் அளவிடப் படாதவன். 856. அகோசர: - இந்திரியங்களுக்குப் புலனுகா தவன். 857. ருக்விமோசக: - வியாதிகளைப் போக்கடிப்பவன்.

(113) 858. நிரம்ச: - அம்சியானபடியால் வேறு ஒன்றுக்கும் அம்சமாகாதவன்· இதன் விவரம் ''ஸ்வாம்சிதாகில:'' என்னும் 480-வது நாமாவின் உரையில் கண்டு கொள்க. 859. நிகமானந்த: - வேதப்பிரியன். 860. நிரானந்த: - ஸந்தோஷம் அற்றவன். 861. நிதானபூ: - ஜகத்காரணங்களுக்குக் காரணம் ஆனவன். 862. ஆதிபூத: - எல்லாவற்றுக்கும் முன்னுள்ளவன். 863. மஹாபூத: - பெரிய அளவுள்ளவன். 864. ஸ்வேச்சா கலித விக்ரஹ: - தனது விருப்பத்தால் ஒவ்வொரு காரியங்களை வேண்டி உருவெடுத்தவன், தான் தோன்றினவன். (குறிப்பு : இது சிதம்பரம் ஸ்ரீ நடராஜ மூர்த்தியைப் பற்றியதாகும். இம்மூர்த்தி ஒரு சிற்பியால் அமைக்கப்படாததென்றும், உளிபடாத விடங்கர் என்றும் ''போகர் ஏழாயிரம்'' என்ற ஸித்த நூல் கூறுகிறது. 485-வது ''ஸ்வபூ:'' என்கிற நாமாவும் இதே பொருளையுடையதாம்).

(114). 865. நிஸ்பந்த: - அசைவற்றவன். 866. ப்ரத்யயானந்த: - நிச்சயமான ஆனந்தன். ப்ராதிபதிக நிமித்தமாக விதிக்கப்படும் ப்ரத்யயங்களில் (இது வையாகரணர்களால் அறியத்தக்கது) ஆனந்தம் உள்ளவன். 725-வது ப்ரக்ருதீச:, 666-வது பதாத்மக: என்று இரு நாமாக்கள் முன் கூறப்பட்டுள்ளன. அவற்றில் ப்ரக்ருதியில் ப்ரத்யயத்தின் சேர்க்கையால் தான் பதமாகும். பதாத்மக: என்று அங்குக் கூறினபடியால் சாப்திகர்களால் கூறப்பட்டுள்ள ''சாப்தம் ப்ரம்ம'' என்னும் பொருள் உணரத் தக்கது. 867. நிர்நிமேஷ: - காலாதீதனானபடியால் நிமேஷாதி காலமற்றவன், கண் இமைத்தலற்றவன். 868. நிரந்தர: – பேதபுத்தியற்றவன். 869. ப்ரபுத்த: - எல்லாமறிந்தவன். 870. அபரமோதார: - தரித்திரர்களிடத்தில் உதாரன், பொருளளிப்பவன். ''பரமோதாரீ'' என்ற பாடத்தில் ஆத்மயோகமுள்ளவன். 871. பரமானந்தஸாகர: - உயர்ந்த ஆனந்தக்கடல்.

(115) 872. ஸம்வித்ஸார: - ஞானத்தின் ஸாரமானவன், சிறந்த சொற்பொழிவாளன். 'ஸம்வித்' என்ற ஔஷத மூலிகையின் ஸாரமானவன், அம்மூலிகை சிவயோகிகளால் நினைவு

மாறுபடாமலிருக்கக் கையாளப் படுவதாகும். "ஸம்வத்ஸர:" என்ற பாடத்தில் வருடகால ரூபன் எனப் பொருள் கொள்க. 873. கலாபூர்ண: - ஆயிரம் கலைகளால் நிறைந்தவன். இந் நாமா இரவு அர்த்தயாம காலத்திய பரமனைக் குறிக்கும். இது 480 வது நாமாவோடு ஒப்பிட்டு நோக்கத்தக்கது. சாந்தி முதலான கலைகளைப் பரிபூரணம் செய்கிறவன் என்றும் பொருள் கொள்ளலாம். 874. ஸுராஸுரநமஸ்க்ருத: - தேவாஸுரர்களால் வணங்கத் தக்கவன். 875. நிர்வாணத; - மோக்ஷமளிப்பவன். 876. நிர்வ்ருதிஸ்த: - ஸுகமாக இருப்பவன். 877. நிர்வைர: - ஒருவனிடமும் பகையற்றவன். 878. நிருபாதிக: - உபாதியற்றவன். (உபாதி என்பது சேர்க்கையால் வேருகும் தன்மை).

